


கல்கி
KALKI 6-7-1958
30 நயா பைசா


புதுமைப் பொலிவையும் வனப்பையும்
உங்களுக்களிப்பது ஹிமாலயா புக்கே
HIMALAYA BOUQUET SNOW
இதமும் குளுமையும் தரும் இந்த ஸ்நோவைத் தடவிக் கொண்டு, அதன் மணம் கமழும் புதுமை இன்பத்தை அனுபவியுங்கள்!
ஹிமாலயா புக்கே ஸ்நோ
Himalaya Bouquet
TOILET POWDER
மிருதுவான இந்த வாசனைப் பவுடரைப் பூசிக் கொண்ட பின், பூர்த்தி பெறும் உங்கள் பேரழகைப் பாருங்கள்!
ஹிமாலயா புக்கே டாய்லெட் பவுடர்
HBS. 14A -50 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


பின்னியின் சூட்டிங் அணிந்து
உன்னதமாகத்
தோற்றம் அளியுங்கள்
எங்களிடமிருந்து வாங்குங்கள்
வெங்கடேஷ்
வஸ்திராலயா
ரீடெய்ல் ஷோரூம்கள்—
ஹைகோர்ட் எதிரில் & 2 தம்புசெட்டித் தெரு, மதராஸ் 1
ஷோ ரூம் நெ. 1
இங்கு நாங்கள் பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்லின் உற்பத்தியான துணிகளை மட்டுமே விற்கிறோம்.
ஷோ ரூம் நெ. 2
இங்கு நாங்கள் பக்கிங்ஹாம் & கர்நாடிக் மில்லின் உற்பத்தியான துணிகளை மட்டுமே விற்கிறோம்.
ஷோ ரூம் நெ. 3
இங்கு நாங்கள் பின்னி மில்லின் உற்பத்தியான துணிகளையும் மற்றும் இதர உயர்ந்த ரக துணிகளையும் விற்கிறோம்.



மலர் 17 இதழ் 49 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார். | விளம்பி௵ ஆனி௴ 22௳

ஆசியாவின் குரல்

இந்தோனீசியாவின் ஜனாதிபதி டாக்டர் சுகர்னோ ஆசியாவின் முக்கியமான தலைவர்களில் ஒருவர். அவர் ஒரு குரல் கொடுத்தார் என்றால் அது ஆசியா கண்டம் முழுதும் பிரதிபலிக்கும் குரலாகும். ஆசியாவிலுள்ள கோடிக்கணக்கான வாயில்லாப் பாமரமக்களின் குரல் என்று மதிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட குரல் இப்பொழுது சங்கநாதம் செய்கிறது!

மேற்கத்திய வல்லரசுகளின் கண்மூடித்தனமான போக்கைக் கண்டு டாக்டர் சுகர்னோ மிகவும் கடுமையாக எச்சரித்திருக்கிறார்.

பிரிட்டனிலிருந்து வெளியாகும் "நியூ ஸ்டேட்ஸ்மன்" என்ற பத்திரிகைக்கு ஆசிய மக்களின் சார்பிலே ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அது அப்பத்திரிகையின் ஜூன் 28-ம் தேதி இதழில் வெளியாகியிருக்கிறது. அது இந்திய மக்கள் அனைவருடைய உணர்ச்சியையும் பிரதிபலிப்பதாக இருக்கிறது.

மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து அணுகுண்டு, ஜலஜகுண்டு சோதனைகளை நடத்துவது, அவை அறவழியினின்றும் எவ்வளவு தூரம் வழுவிவிட்டன என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என்கிறார். தர்மம் யேற்கே செத்துவிட்டது என்று வெகுண்டு கூறுகிறார்.

" யுத்த காலத்தில் அணுகுண்டு எறிந்ததால் பாதிக்கப்பட்டவர்கள் ஆசிய மக்கள்; சமாதான காலத்தில் ஜலஜ குண்டு சோதனைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களும் ஆசிய மக்களே என்று விஞ்ஞான முறையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவ் விஷயம் சம்பந்தமாக ஆசியா கொடுக்கும் குரலை மேற்கத்திய நாடுகள் கேட்டேயாக வேண்டும்! அதற்குரிய நேரம் வந்து விட்டது!" என்று எச்சரிக்கை செய்கிறார்.


"மனிதன் என்ற முறையிலும், ஒரு தந்தை என்ற முறையிலும், ஆசியப் பிரஜை என்ற முறையிலும், கடவுளின் பிரதிபிம்பமாக வடிக்கப்பட்ட மனித சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலும், மேற்கத்தி நாடுகள் அணுகுண்டுகளைக் கையாளும் மடமையைக் கண்டு திக்பிரமையடைந்து போகிறேன். அவர்கள் தங்கள் நாகரிகத்தைக் காப்பாற்றிக் கொள்ள இவ்வளவும் செய்வதாகச் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் அவசியம் என்று கருதும் அந்த நாகரிகத்தையே அழிக்கும் முறையிலேயே அமைந்திருக்கிறது அவர்களது கொள்கை. அந்த அழிவு அவர்களுடன் மட்டும் நிற்காது! அணுகுண்டு யுத்தம் என்று வந்தால் நடுவு நிலைமை நாடுகள் என்ற பேச்சே யிராது! அது மனித சமுதாயத்தையே அழித்து விடும். ஆகவே, மனித சமுதாயத்தின் எதிர்காலம் எங்கோ கண்காணாத இடத்தில் இருக்கும் அணுகுண்டுகளை இயக்கும் சின்னஞ் சிறு இயந்திரத்தைப் பொறுத்திருக்கிறது என்பதை நினைக்கவே பயமாக இருக்கிறது!"

இந்த விஷயத்தை ராஜாஜி எத்தனையோ தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதையே டாக்டர் சுகர்னோவும் இப்பொழுது சொல்லுகிறார்!

எதிர்கால மக்களின் வாழ்வைப் பற்றி மேற்கத்திய வல்லரசுகள் மிகவும் அசிரத்தையாக இருப்பதைப் பற்றியும் சுகர்னோ மிக வன்மையாகக் கண்டிக்கிறார்.

" மேற்கத்திய நாடுகளில் தார்மிக உணர்ச்சி சீர்குலைந்து வருகிறது. எதிர்காலச் சந்ததிகள் என்றிருப்பார்களானால், இந்த இருபதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்களைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்? இன்னும் அணு

வல்லரசுகள் சந்தித்தால்......?



குண்டு யுத்தம் ஏற்படவில்லை. ஆனல் இந்த விஷகுண்டு சோதனைகளைபல்லாயிரக்கணக்கான மக்களின்மீது இப்பொழுதே பழி வாங்கி விட்டன! இன்னும் பிறக்கப் போகும் பல்லாயிரக்கணக்கான மக்களின் மீதும் வஞ்சம் தீர்த்துக் கொண்டு விட்டன! இந்த கைய உரிமை கடவுளுக்குத்தான் உண்டு என்று நினைத்தோம். அந்தக் கடவுளுக்குரிய உரிமையை நீங்கள் பறித்துக் கொண்டு விட்டீர்கள். தந்தை செய்த குற்றத்துக்குத் தனயன் தண்டனையடைய வேண்டும் என்பதை, அதாவது நீங்கள் செய்யும் குற்றங்களுக்கு உங்கள் எதிர்காலச் சந்ததிகள் தண்டனை அனுபவித்தே தீர வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி விட்டீர்கள். இதை நினைத்துப் பார்க்கும் போது, உங்களை நாங்கள் நாகரிகத்தின், பண்பாட்டின் காவலர்களாகக் கருத வில்லை! சாவின் தூதர்களாக — அதுவும் எங்கள் சாவின் — ஏஜண்டுகளாகத்தான் உங்களை நினைக்கிறோம்! ஆம். இது உண்மை. நான் சொல்வதை நம்புங்கள்!''

எவ்வளவு கடுமையாகச் சொல்லி யிருக்கிறார் டாக்டர் சுகர்னே. அயல் நாட்டுக் கொள்கை விஷயத்தில் பாரதத்தையே பின்பற்றுகிறவர். அமெரிக்காவிடமும் ருஷ்யாவிடமும் நட்புரிமை கொண்டவர். இரு நாடுகளிடமும் உதவி பெற்று வருகிறார். என்றாலும், அவர் ஜலஜ குண்டு விஷயத்தில் உண்மையைப் பச்சையாகவே சொல்லி யிருக்கிறார்!

"இந்தோனீசியாவில் ஜலஜ—குண்டு எதிர்ப்பு இயக்கம் நடக்கும் சமயத்தில் இந்தக் கடிதத்தை நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். என் அரசாங்க மாளிகையின் முன்னால் இப்பொழுதே ஆயிரக்கணக்கான மக்கள் குழுமி விட்டார்கள். அவர்களைக்கம்யூனிஸ்ட்டுகள்என்றோ, கம்யூனிஸ்ட் கொள்கைகளில் மயங்கினவர்கள் என்றோ எண்ணுதீர்கள். அவர்கள் சாதாரணப் பாமர மக்கள், எதிர்காலத்தைப் பற்றி ரொம்பவும் கவலையோடிருக்கிறார்கள். எதிர்காலம் என்னவாக இருக்குமோ என்று ஏங்குகிறார்கள். தாங்கள் எந்த விதத்திலும் கடன்படாத ஒரு மக்கள், இழைக்கும் குற்றங்கள்காரணமாகத்தங்கள் வருங்கால வாழ்வு குட்டிச்சுவராகாமல் இருக்குமா என்ற கவலைப்படுகிறார்கள்.

"எங்களையும் எங்கள் எதிர்கால மக்களையும் தொடர்ந்து சோதனைகள் நடத்தி ஆபத்துக்களுக்கு உள்ளாக்கி வரும் உரிமை மேற்கத்திய நாடுகளுக்கு அறவே கிடையாது. எங்கள் குழந்தைகளுக்குப் புற்று நோயை உண்டாக்கும் உரிமை உங்களுக்

ளுக் கிடையவே கிடையாது. இருந்தாலும் செய்து வருகிறீர்கள். இனி பொறுக்க முடியாது! காலங் கடந்து விட்டது. கம்யூனிஸ்ட் நாடாயினும் சரி, கம்யூனிஸ்டுகளுக்கு எதிரி நாடாயினும் சரி, இந்த அதர்மமான முறையிலிருந்து, சோதனைகளிலிருந்து பின்வாங்கியே ஆகவேண்டும்! சோதனைகளை நிறுத்தியே ஆகவேண்டும்.''

டாக்டர் சுகர்ணோ மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற பாண்டுங் மகாநாட்டைப் பற்றியும் குறிப்பிடுகிறார். இந்த மகாநாட்டில் அணுகுண்டு சோதனைகளை நிறுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும் குறிப்பிட்டு, ''அந்தத் தீர்மானத்தின்படி ஒரே ஒரு வல்லரசுதான் நிறுத்தியிருக்கிறது. அது எந்தக் காரணத்தினால் நிறுத்தி யிருந்தாலும், நாங்கள் அதை வரவேற்கிறோம். மற்ற வல்லரசுகள் நிறுத்தியிருந்தால் எப்படி வரவேற்போமோ, அதேபோல் வரவேற்கிறோம்!'' என்று கூறியிருக்கிறார்.

* * *

''இனி மேற்கத்திய நாடுகள் தார்மிகத் துறையில் ஆசிய நாடுகளுக்குத் தலைமை தாங்குவது என்ற பேச்சே கிடையாது. உங்கள் 'தார்மிகத் தலைமை' என்பதற்குப் பொருள் முன்பு காலனி ஆட்சி முறை என்றிருந்தது. இப்பொழுது தத்துவ ஞான சூன்யம், அரசியல் ஞான சூன்யம், தார்மிக ஞானசூன்யம், சமுதாய ஞான சூன்யம் இவ்வளவும் கலந்த அணுகுண்டு பலப் பரீட்சை என்றாகி விட்டது.

''இந்த மெர்டேக அரண்மனைக்கு வெளியே கூடியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் அதிக அரசியல் ஞானம் இல்லாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் மடையர்கள் அல்ல; அவர்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள்.''

மேற்கத்திய நாடுகளெல்லாம் இந்தச் சோதனைகளை ஆசியாவிலேயே நடத்துவதால் ஆசியாவிலுள்ள பாமர மக்கள் பெரும் ஹானிகளுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

அவர்கள் சார்பில் இந்தோனேசியா ஜனாதிபதியின் குரல் மிக வன்மையாக எழுந்திருக்கிறது. மேற்கத்திய வல்லரசுகளின் செவிட்டுக் காதில் இடிமுழக்கம் போல் இக் குரல் விழ வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

காசி சர்வ கலாசாலை

காசி சர்வகலாசாலை என்றதும் காலஞ்சென்ற பண்டித மாளவியாவின் நினைவு தான் வரும். உயர்ந்த நோக்கத்துடன் இந்திய கலாசாரப் பண்பை நிலைநிறுத்தும் கருத்துடன் அவரால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனம் இது. சின்னஞ்சிறு முறையில் ஆரம்பித்துப் படிப்படியாக வளர்ந்து பாரதத்திலேயே முதன்மையான ஸ்தானத்துக்கு இதை வளர்த்தார். மகாராஜாக்களும் சமஸ்தானாதிபதிகளும் பண்டித மாளவியா கேட்டபோதெல்லாம் நன்கொடை அளித்து உதவினார்கள். உதவிக்கென்று அவர் போய் வெறுங்கையுடன் திரும்பியதே கிடையாது. ''பிச்சை எடுப்பதில் நான் ஒரு மகாராஜா'' என்று தம்மைப் பற்றி அவரே மகிழ்ச்சியுடன் கூறுவார். தம்முடைய மேற்பார்வையிலேயே இந்த ஸ்தாபனத்தைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தார்.

நிர்வாகம் நன்கு நடைபெற வேண்டும் என்று பாரதநாட்டு முன்னணி அறிஞர்களைக் கொண்டு நிரப்பினார். டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன், டாக்டர் அமரனாத்ஜா, டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் முதலியவர்கள் உப அத்யக்ஷகர்களாகப் பணியாற்றினார்கள். தமது ராஜ்யத்திலிருந்து மாணவர்கள் பலர் படிப்பதற்கு அங்கே சென்றார்கள். உலோகக் கலை, நுட்பக் கலை முதலிய பிரிவுகள் அங்கே தனிப் பாடமாகச் சிறந்த முறையில் போதிக்கப்பட்டதால் நம் மாணவர்கள் அங்கு விரைந்தனர். அதெல்லாம் இந்த ஸ்தாபனத்தின் உன்னத காலம்.

ஆனால் இப்போது நிலைமை வேறு. படிப்பு மோசம். போதனை குறைவு. மேற்பார்வையும் கவனிப்பும் பூஜ்யம். பள்ளி அறைகளில் பஸ்ஸில் போகும் கூட்டம். நெருக்கடி மிகுதி. யாருக்கு வேண்டுமானாலும் இடம்கிடைக்கும். ஐயாயிரம் மாணவர்களுக்கென்றே ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் சுமார் ஒன்பதாயிரம் மாணவர்கள் அடைபட்டுக் கிடக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் ஹாஸ்டல்களிலோ இதேபோல் நெருக்கடி. இதைச் சமாளிக்கச் சர்வகலாசாலைக்குள்ளேயே மாணவர்கள் தங்கிப் படிக்க வேண்டுமென்றதைத் தளர்த்தி மூன்று மைலுக்கப்பாலுள்ள காசி நகரத்தில் மாணவர்கள் வசித்து வருகின்றனர். கல்லூரிகளில் குறைந்த பட்ச நாட்கள் நிலைத்திருந்தாலே போதும், பரீட்சை தேறிவிடும் என்றெல்லாம் இப்போது நிலைமை நிலவுகிறதாம்.

எந்த உப அத்யட்சகரும் நீடித்து நிலைப்பதில்லை. குறுகிய காலத்துக்குள்ளாகவே அவர்கள் வெளியேறி விடுகின்றனர். நிர்வாகம் செய்வதில் திறமையுள்ளவர்கள் கூட ஒன்றும் செய்ய இயலாது பின்னடைந்து விட்டனர்.

இதற்கெல்லாம் காரணம் அரசியல். உத்தரப் பிரதேசத்திலுள்ள பிராந்திய அரசியல் விவகாரம். கிழக்கு உத்தரப் பிரதேசத்திலுள்ளவர்களும் பீகார் மாகாணத்து மேற்குப் பிராந்தியத்திலுள்ளவர்களும் அதிகார ஸ்தாபனங்களைக் கைப்பற்றி அந்தந்த இலாகாக்களைத் தங்கள் பிடியிலேயே வைத்துக் கொண்டு, ஒரு குட்டி ராஜ்யபாரமே நடத்தத்

தொடங்கி விட்டனர். பேராசிரியர்களிடமிருந்து இந்த அதிகார மனப்பான்மை சிறுகச் சிறுக மாணவர்களிடையும் பரிணமித்து, அவர்களுக்குள் பல கட்சிகளும் பூசல்களும் சகஜமாகி விட்டன. ஆசிரியர்கள் நியமனத்திலிருந்து மாணாக்கர்களைச் சேர்த்துக் கொள்ளுவது வரையில் கட்சிப் பூசல்கள் தோன்றியுள்ளன. இதில் அதிசயிக்க வேண்டியது இவ்வளவு காலமாக, வருஷக்கணக்காக, பல நிர்வாகஸ்தர்களின் முயற்சியையும் தோற்கடித்து ஊழல்கள் நிலைத்து நிற்பதுதான். இந்த அழகில் மத்திய அரசாங்கத்தின் நேர்பராமரிப்பில் இருக்கும் சர்வகலாசாலை இது. அதனிடமிருந்து வருஷத்துக்கு 53 லக்ஷம் மானியமாக வேறு கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதனால் பாரதத்தின் ஜனாதிபதிக்கு இந்த சர்வகலாசாலைக்கு 'விஸிட்டர்' என்ற முறையில் ஒரு உயர் அத்யக்ஷகருக்குள்ள அதிகாரமே உண்டு.

ஊழல்களைக் கவனித்துச் சிபாரிசுகள்செய்யும்படி டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு, கமிட்டி அதன் யாதாஸ்தையும் சமர்ப்பித்தது. அதில் வெளியிடப்பட்ட தகவல்தான் மேலே விவரித்த நிலைமை. இவற்றைச் சமாளிக்க அக்கமிட்டி செய்த சிபாரிசின்படி இப்போது ஜனாதிபதி சர்வகலாசாலை சட்டத்தையே மாற்றி அமைக்கவும், நிர்வாகத்தைச் சீர்ப்படுத்தவும் ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளார். சீக்கிரத்திலேயே கலாசாலை திறக்கப்படும்முன்பு இந்தச் சீர்திருத்தத்தைச் செயல் முறைக்குத் தேவையான அளவுக்கு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இந்தச் சட்டத்தை பார்லிமெண்டு தான் நிறைவேற்றி வைக்கவேண்டும். இடைக்காலத்துக்கு ஒரு கமிட்டியின் உதவி கொண்டு உப அத்யக்ஷகர் நிர்வாகத்தை நடத்த ஏற்பாடாகி யிருக்கிறது.

இதெல்லாம் கேட்டு யாருக்கும் மனம் நோகத்தான் செய்யும். கல்வி ஒரு ஸ்தாபனத்தின் தனிச் சொத்தல்ல. சர்வகலாசாலைகளுக்குப் பொதுவாகவே ஓரளவுக்குத் தனிச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் தங்கள் பணியை ஒழுங்காக நிறைவேற்றுவார்கள் என்பதனால். ஆனால் காசி சர்வகலாசாலையில் நிகழ்ந்ததுபோல் தனக்குக் கொடுத்துள்ள சுதந்திரத்தைத் தகாத முறைகளில் உபயோகப்படுத்திக் கொண்டு ஸ்தாபனத்தின் நலனுக்கே இழுக்கு உண்டாக்கினால் அதைப் பார்த்துக் கொண்டு வாளாயிருப்பது எங்ஙனம்? இதை உத்தரப் பிரதேச அரசியல்வாதிகள் உணருவதோடு, இந்த சர்வகலாசாலை விஷயத்தில் இந்தியாவின் இதர பாகங்களுக்கும் அக்கறை உண்டு என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

‘நின்று தவம் செய்யும் குமரி அம்மன்’

‘பாண்டிமாதேவி’ என்னும் சரித்திரப் பெருங் கதை இந்த இதழில் ஆரம்பமாகிறது. இந்தச் சரித்திரப் பெருங்கதை நிகழ்ந்த இடங்களுக்கெல்லாம் வாசக நேயர்கள் செல்வதற்கு முன்னால் கதை ஆசிரியரும், நமது சித்திரக்காரரும் சென்றார்கள். முதலில் கன்னிபாகுமரிக்குச் சென்றார்கள். கன்னியாகுமரி அம்மனைக் கண்குளிரக் கண்டு வணங்கினார்கள். மூன்று சமுத்திரங்களும் சூழ்ந்து நிற்கும் அதிசயத்தையும், அதன் ஓரத்தில் ஒரு கன்னித் தெய்வத்தை எழுந்தருளச் செய்து அதற்குக் கருங்கல்லைக் கொண்டு கட்டப்பட்ட கற் கோயிலையும் கண்டு பரவசமடைந்தார்கள். இந்தக் கோயிலில் பாண்டிய மன்னர்களும், சோழ மன்னர்களும், சேர மன்னர்களும், அவர்கள் பட்டமகிஷிகளும், மந்திரிமார்களும், தளபதிகளும், சேனை வீரர்களும் நின்று கன்னித் தெய்வமான கன்னியாகுமரி அம்மனை வழிபட்டார்கள் என்றால் அந்தக் கோயிலுக்குள் நின்று குமரியம்மனைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற யாருக்குத்தான் புளகாங்கிதம் ஏற்படாது?

அழகைக் கண்ட இடங்களில் எல்லாம் நமது முன்னோர்கள் ஆண்டவனைக் கண்டார்கள். வனப்புமிக்க நதியைக் கண்டால் அதன் கரையோரங்களில் காலத்தைக் கடந்து நிற்கும் கடவுளுக்குக் கோயில் கட்டி வழிபட்டார்கள். குமுறும் கடலின் சௌந்தர்யத்தில் எல்லாம் வல்ல இறைவனைக் கண்டு, கடற்கரையில் கற்றளி எடுத்துப் பரவிப் பாடினார்கள். குன்றுகளில் எல்லாம் குன்றுதோறும் ஆடும் முருகனை ஆடவிட்டுப் பேரானந்தம் அடைந்தார்கள். ஆம்; அவர்களால் அழகையும் ஆண்டவனையும் பிரித்து எண்ண முடியவில்லை.

அப்படிப்பட்ட முன்னோர்கள் மூன்று கடலும் ஒன்று சேரும் இடத்தில், உதய சூரியனையும் மாலைச் சூரியனையும் ஒரே இடத்தில் கண்டு களிக்கும் வசதி படைத்த புண்ணிய தலத்தில், சூரியன் மறைவதையும், சந்திரன் எழுவதையும் ஒரே சமயத்தில் காணும்படி அமைந்துள்ள கடற்கரையில் கன்னித் தெய்வத்துக்குக் கோயில் கட்டி வழிபட்டதில் என்ன வியப்பு இருக்கிறது?

குமுறிப் பொங்கிவரும் அலைகடலைப் பார்த்தவுடன், முன்னொரு காலத்தில் இப்பொழுதிருந்ததைவிடக் கிழக்கில் பலகாத தூரம் பரந்து விரிந்து கிடந்த தமிழகம் அந்தக் கடலுக்குள் அமுங்கிவிட்டது என்ற சரித்திரத்தைப் படித்த நினைவுதான் எழும். இந்த நினைவு உண்டாகும் தமிழ் உள்ளம் அந்தக் கடற்கரையில் இருக்கும் கன்னியாகுமரி அம்மனைப் பார்த்து என்ன நினைக்க முடியும்? "எஞ்சி இருக்கும் தமிழ் நாட்டையும் கடல் கொண்டு போகாமல் காப்பாற்று, தாயே" என்றுதானே வேண்டியிருக்கும்.

கவியரசர் பாரதியாரின் தமிழ் இதயம் படைத்த கவி உள்ளம் எப்படிப் பாடிப் பரவுகிறது பாருங்கள் :

நீலத்திரைக்கடல் ஓரத்திலே—நித்தம்
நின்று தவம்செய்யும் குமரி.........

என்று குமரி அம்மன் கடலைப் பார்த்து நின்று கொண்டிருக்கும் தவத்திருக் கோலத்துக்குச்

சிறப்பளித்துப் பாடுகிறது. காலமெல்லாம் கன்னியாகவே இருந்து கொண்டு, கண் உறங்காமல் நின்றுகொண்டு, தமிழ் நாட்டை விழுங்க வரும் கடலைத் தடுத்து நிறுத்திக் கொண்டு, நின்று தவம் செய்து வருகிறு ளாம் குமரி அன்னை. நமது சித்திரக்கலைஞர் வினு அந்த அற்புதக் காட்சியை, பொங்கி வரும் கடலுக்கு முன் குமரித் தெய்வத்தின் தவக்கோலத்தை இவ் விகழ் அட்டைச் சித்திரமாகச் சித்திரித்திருக்கிறார்.

தாமதம் கூடாது!

கைத்தறி நெசவாளர்களைப் போல் நேர்மையுள்ளம் படைத்த எளிய மக்கள் யாரும் கிடையாது. மணியைப் பார்க்காமல் உண்மையாக உழைத்து வேலை செய்பவர்கள். வேலை நிறுத்தம் முதலியவை அறியாத வர்கள். போலீஸார் மீது கற்களை வீசி எறிதல், பின்னர் அவர்கள் துப்பாக்கிப் பிர யோகம் செய்தல், அதற்காக நீதிமன்ற விசாரணை கோருதல் ஆகிய வம்புக்கெல்லாம் போகாதவர்கள். தங்கள் சகோதரர்களைக் 'கருங்காலிகள்' என்றோ மற்றப் பெயர்களைக் கொண்டோ அழைக்காதவர்கள். அவர்கள் குடும்பம் எல்லாம், மனைவிமார் குழந்தைகள் அனைவரும் சேர்ந்து பகலும் இரவும் தறியில் வேலை செய்வார்கள். அப்படிப்பட்ட நல்ல தொழிலாளர்கள்தான் இன்று நம் நாட்டி லேயே மிகமிகப் பரிதாபகரமான வறுமை நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் அழகிய சேலைகளுக்கும் வேட்டி களுக்கும், ஆலைகள் போட்டியாக வந்து அவர்கள் வாழ்வைக் குலைத்து வருகின்றன!

சார்லஸ் லாம்ப் என்ற ஆங்கில ஆசிரியர் ஒருகட்டுரையில், "இரக்கமுள்ள ஒரு பூகம்பம் வந்து இந்தச் சனியன் பிடித்த ஆலைகளை விழுங்கி விடாதா!" என்று எழுதினாராம். நமது நாட்டுக் கைத்தறியாளர்களின் பரிதாப நிலையைப் பார்க்கும்போது, நமக்கும் இப்படித்தான் ஆசைப்படத் தோன்றுகிறது என்கிறார் ராஜாஜி.

நமது நாட்டில் கைத்தறி நெசவாளர் பிரச்னையைத் தீர்க்க நேர்வழி இருக்க அதை விட்டு 'ரிபேட்' வழங்குவதாகச் சொல்லி, சிறிது இடைக்கால உதவி அவ்வப்போது அளித்து வருகிறார்கள். இது கைத்தறிச் சங்கங் களில் சேர்ந்துள்ள நெசவாளர்களுக்குத்தான் பயன்படும். சங்கங்களுக்கு வெளியே லட்சக் கணக்கான நெசவாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஆலைகளின் போட்டியை ஒழித்து வாழ வழி செய்ய வேண்டும். நெசவாளரின் கஷ்டத்தை இன்னும் சும்மா பார்த்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. உடனடியாக ஏதாகிலும் செய்ய வேண்டும்.



டாக்டர் குருசாமி முதலியார்

எல்லாராலும் ரிஷி என்று பாராட்டப்பெற்ற டாக்டர் எம். ஆர். குருசாமி முதலியார் அவர்கள் சென்ற மாதம் 26-ந் தேதி தமது எழுபத்தெட்டாவது வயதில் இவ்வுலக வாழ்வைத் துறந்து முருகனடி சேர்ந்துவிட்டார்.

டாக்டர் குருசாமி முதலியார் நீண்ட காலம் புகழுடன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சர்க்கார் டாக்டராக உத்தியோகம் பார்த்து ஓய்வு பெற்றவர். ஆனாலும் அவர் வாழ்ந்த காலத்தில் ஓய்வு என்பதையே எடுத்துக் கொண்டதில்லை. காலை வேளைகளில் ஏழை எளியவர்களுக்கெல்லாம் இலவசமாகவே வைத்திய ஆலோசனை கூறி வந்தார். இரவு என்றும் பகல் என்றும் பாராமல் யார் எங்கு கூப்பிட்டாலும் முகம் கோணாமல் சென்று நோயாளிகளுக்கு வைத்திய சிகிச்சைக்கான வழிவகைகளைச் செய்து வந்தார்.

அவர் ஆற்றிய தொண்டுகளுக்கெல்லாம் சிகரம் போன்று விளங்கியது அவருடைய இந்திய வைத்திய ஆராய்ச்சி. ஆயுர்வேத, யுனானி, சித்த வைத்திய முறைகள் தற்கால ஆராய்ச்சிக்கு உட்பட்டு விஞ்ஞான ரீதியில் சிறப்பும் மேன்மையும் அடையவேண்டும் என்று விரும்பினார். வைத்திய உலகில் அற்புதமாகத் தொண்டாற்றி வந்த டாக்டர் குருசாமி முதலியார் மறைவு தமிழ்த் தாய்க்கு மட்டுமல்ல, வைத்திய உலகுக்கே மகத்தான நஷ்டம்.


ஜூலை 4ம் முதல்
... சென்னை ...
சித்ரா
பிரபாத்
சரஸ்வதி
மற்றும்
தென்னாடெங்கும்
பாரகன்
பிக்சர்ஸ்
அன்னையின்
ஆணை
தயாரிப்பு :
A.M. இஸ்மாயில்
டைரக்ஷன் :
CH. நாராயணமூர்த்தி. B.A.
வசனம் :
முரசொலி மாறன். M.A.

Elegant

அருள் வாக்கு


கலைகள் அல்லது வித்தைகள் எத்தனையோ விதம். பணம் சம்பாதிப்பதும் ஒரு கலைதான். ஆனால் இந்தக் கலைகள் எல்லாம் சிறு பிரயோசனத்தைத்தான் அளிக்க முடியும். அதனால் ஏற்படும் சந்துஷ்டியும் சிறிது காலத்துக்குத்தான் இருக்கக்கூடியது. வாழ்க்கையில் உண்மையான சந்துஷ்டி இவற்றினால் கிட்டாது. ஒருவன் பணத்தைக் குவித்துக் கொண்டே போகலாம். ஆனால், மௌனக் கலையினால் ஏற்படும் சாந்தி சாசுவதமான ஆனந்தம். அது சந்துஷ்டியைக் கொடுக்கிறது. மனத்துக்குச் சாந்தி ஏற்பட்டால் கஷ்டங்களுக்கு இடையேயும்கூட சந்தோஷத்தை அனுபவிக்கலாம். இப்படி மனத்துக்குள் சாந்தியுடன் மௌனமாக இருக்க ஒவ்வொருவரும் அப்பியாசம் செய்ய வேண்டும்.

நான் பல மாதங்களாகச் சென்னையில் இருக்கிறேன். பூஜா காலங்களில் பக்தர்கள் ரொம்பப் பேர்கள் கூடிப் பல மணி நேரம் தங்கி தரிசனம் செய்கின்றனர். தங்கள் பக்தி மேலிட்டால் பாட ஆரம்பிக்கிறார்கள். ஸ்தோத்திரங்களை உரக்கச் சொல்லுகிறார்கள். கோஷ்டியாக பகவன் நாமாக்களைக் கோஷம் செய்கிறார்கள். அவர்களுடைய உத்தேசம் நல்லதுதான். இப்படிச் செய்யப்படும் சத்தம் எனக்கும் பழக்கமாகி விட்டது. ஆனாலும் பூஜா காலங்களில் முற்றிலும் மௌனமாக இருக்க முயல வேண்டும். பிரார்த்தனைகளை மனத்துக்குள் சொல்லிக் கொள்ளலாம். அவரவர்கள் இஷ்டதேவதையை மனத்தில் நினைத்துத் தியானம் செய்யலாம்.

நமது கோவில்களில் காணப்படும் மூர்த்திகளின் காம்பீர்யமும் அழகும் எங்கும் காணப்படாததாக இருக்கின்றன. அதற்குக் காரணம் இவற்றைத் தயாரித்த சிற்பிகள் தங்களுக்கு உபதேசிக்கப்பட்ட இஷ்ட தேவதா லக்ஷணங்களை மனத்தில் நன்கு தியானம் செய்து, அதன் பயனாக மனக் கண்முன் தோன்றும் அழகிய தோற்றத்தைக் கொண்டு இம்மூர்த்திகளைச் சிலையில் தயாரித்திருப்பதுதான். ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை நாம் உபாசிப்பது அத்தெய்வத்தின் குணங்களில் ஈடுபடுவதற்காக. ஆகையால் பூஜாகாலங்களில் கூடுவோர் தங்கள் தங்கள் இஷ்ட தேவதைகளைத் தியானம் செய்ய வேண்டும். நல்ல தியானத்துக்கு அறிகுறி வேறு ஒன்றையும் பற்றி நினையாதிருப்பதுதான். அப்படி நிர்மலமாக உள்ள மனத்தில் பகவான் தானே வந்து ஆவிர்ப்பவிக்கிறான், நல்ல சுத்தமான கண்ணாடியில் பிம்பம் தோன்றுவதுபோல். சுயம்பிரகாசம் என்பதற்கு இது தான் பொருள். பிறகு பகவான் ஒருவனே என்ற அத்வைத ஞானம் ஏற்படும். 'சிந்தை அடக்கிச் சும்மா இருப்பது' என்று தாயுமானவர் பாடியுள்ளதன் கருத்தும் அதுதான்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்






சென்ற மாதம் பதினெட்டாம் தேதி பெரம்பூர் ரயில் பெட்டி கட்டும் தொழிற் சாலைக்கு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் விஜயம் செய்தார். தொழிற்சாலை நிர்வாக அதிகாரி சுவாமிகளை வரவேற்றார். ஸ்ரீ சாம்பமூர்த்தி தொழிற்சாலையின் முக்கிய பகுதிகளுக்கு அழைத்துச் சென்று காண்பித்தார். ரயில் பெட்டி கட்டும் தொழிலைப் பார்த்த சுவாமிகள் 'இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்வது தேசத்துக்குச் செய்யும் பெருந் தொண்டு' என்று மகிழ்ந்து வாழ்த்தினர்.





ஸ்டாக்கிஸ்டுகள் :

நாமகிரி டிரேடிங் கார்ப்பொரேஷன்	திருச்சிராப்பள்ளி	சேலம் ஏஜென்ஸீஸ்	சேலம்
ஸ்ரீ மீனாக்ஷி என்டர்பிரைஸஸ்	மதுரை	P. K. A. குழந்தைவேலு நாடார்	திண்டுக்கல்
K. R. ராமமூர்த்தி ராவ்	கும்பகோணம்	V. R. பார்த்தசாரதி முதலியார்	வேலூர்



37

பிறன் ஒருவன் பாக்கியம் பெற்றிருப்பதைக் கண்டு சகிக்க முடியாமல் மனத்தில் வேதனைப்படுவது அழுக்காறு. வெஃகல் என்பது பிறனுடைய சொத்தை அதரும முறையில் தான் அடைய ஆசைப்படுதல். இதுவே வடமொழியில் லோபம் என்பது. இது பெருங் குற்றம். இதை விலக்கல் வெஃகாமை. பிறர் பொருளை விரும்பாதே என்கிறார் முனிவர்.

நடுவுஇன்றி நன்பொருள்
வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே
தரும்.

அறநெறி வழுவிப் பிறர்க்குரிய சுகம் தரும் பொருளை ஒருவன் அடைய விரும்பினால் குடிகெட்டுப்போவான். பல குற்றங்களில் சிக்கிக் கொள்வான். தீய விருப்பத்துக்கு இடம் தந்தால் அது ஒரு குற்றத்திலிருந்து இன்னொரு குற்றத்துக்கு இழுத்துக் கொண்டே போகும். பாவச் செயலுக்கு மேல் பாவச் செயலைச் செய்யத் தூண்டும். அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் சுற்றத்தாருக்கும் அவமானம் கொண்டு வரும். குடிபொன்றி, குடிக்கே இழிவு வந்து சேரும். இதற்கு ஆங்கே தரும் — அதிக நாட்கள் வேண்டியதில்லை; உடனேயே தீய விளைவைத் தந்து விடும்.

மனத்தில் ஒரு குற்றமான விருப்பம் இடம்பெற்றால் அதன் விளைவு ஒன்றன்பின் ஒன்றாக வேகமாகவே வந்துவிடும். ஆகையால் அந்த விருப்பத்துக்கு இடம் தராதே என்கிறார் முனிவர்.

* * *

இன்பங்களில் இரண்டு பெரிய பாகுபாடு — ஒரு கூறு சிற்றின்பம், அதாவது நிலையில்லாத அற்ப இன்பம். மற்றையது நிலையான இன்பம். இதனில் வீடு அல்லது மோக்ஷமும், உலக வாழ்க்கையில் அற வழி பிறழாமல் பெறக்கூடிய மகிழ்ச்சியும் இரண்டும் அடங்கும்.

நிலையான பேரின்பத்தை விரும்பும் மக்கள் நிலையில்லாத அற்ப சுகத்தை நாடிப் பிறர் சொத்தை வௌவக் கருதிப் பாவத்தில் இறங்க மாட்டார்கள்.

சிற்றின்பம் வெஃகி
அறன்அல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு
பவர்.

பாவத்தால் வரும் பொருள் உண்மையானதும் நிலையானதுமான இன்பம் தராது. அதனால் அடையும் இன்பம் சிற்றின்பமே.

விவேகமுள்ள மக்கள் அழிகின்ற அற்பப் பயனைக் கருதித் தருமத்தினின்று வழுவி வீடு பேற்றை இழக்க மாட்டார்கள் என்பது மட்டும் அல்ல, இந்தக் குறளின் பொருள். இகத்திலும் கூட நிலையான மன

மகிழ்ச்சியையும் சாந்த நிலையையும் விரும்பினையானல் பிறர் பொருளுக்கு ஆசைப்படாதே என்பதும் பொருள்.

மறுமைக்கும் இம்மைக்கும் இரண்டுக்குமே இந்தக் குறள் உபதேசம் தருகிறது.

சரி, இப்படியாயின் என்ன செய்ய வேண்டியது? 'மனத்தைக் காப்பாயாக' என்கிறார் முனிவர். புலன்கள் உன்னைக் கீழே இழுத்துச் செல்லும். இழுத்துப் பிடி என்கிறார்.

இலமென்று வெஃகுதல்
செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி
யவர்.

ஐம்புலன்கள் மனிதனை மயக்கிக் குற்றத்தில் செலுத்துகின்றன. அவற்றை வென்று குற்றமற்ற விவேகத்தை அடைந்த மனிதன் தன்னிடம் பொருள் இல்லை என்று பிறன் பொருளை அடைய ஆசைப்பட மாட்டான்.

அறம் வழுவிய வழியில் மனத்தைச் செலுத்தாமல் காத்துக் கொள்ளுதலே புலன்களை வெல்லுதல். இதுவே அறநெறியில் நிற்க விரும்பும் மனிதன் நடத்த வேண்டிய இடைவிடாத போர். அந்தப் போரில் வெற்றியடைவதே வாழ்க்கை நோக்கமாக இருக்க வேண்டும்.

புலன்களை அடக்கி ஆள்வதில் வெற்றி பெற்ற மனிதனுடைய புத்தி தெளிவு அடைந்து நிற்கும். அவன் பொய்யை மெய்யாக எண்ண மாட்டான். பொருள்களைத் திரிபு இன்றி உணர்வான். அதுவே புன்மை இல்லாத காட்சி. காட்சி என்பதும் ஞானம் என்பதும் ஒன்றே.

புலன்களை அடக்கி ஆண்டு தெளிவு பெற்றவர்களுக்கு இந்தக் குற்றமான விருப்பமே உண்டாகாது. வறுமையோ, கஷ்டமோ சகித்துக் கொள்வார்கள். அறத்தினின்று பிறழ மாட்டார்கள். பிறழத் தோன்றவும் தோன்றாது. மனத்தை வழக்கப்படுத்தி விட்டால், ஒரு வருத்தமும் இன்றித் தானாக அறநெறியில் நிற்கும் என்பது உபதேசம்.

★ ★ ★ இலங்கை வாழ் தமிழ் மக்கள் சமீபத்தில் அடைந்த இன்னல்களைப்பற்றி எழுதினால் கல்லும் கரையும். அவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பது அன்றித் தாய்த் தமிழகத்திலுள்ளவர்கள் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலிருக்கிறார்கள். இந்நிலையில் 'கல்கி' ஜூன் மாதம் 8-ம் தேதி இதழ் தலையங்கத்தையும் 15-ம் தேதி இதழில் ராஜாஜி அளித்த அறிக்கையையும் கண்டு இலங்கை மக்கள் நூற்றுக்கணக்கான நன்றியுரைகள் வழங்கி யிருக்கிறார்கள். அவர்களது உயரிய பண்புக்கு நாம் தலை வணங்கி அவற்றில் சிலவற்றை இங்கு வெளியிடுகிறோம். —ஆசிரியர்

துன்பத்திலும் நன்றி!

ஈரோடு கல்லூரியில் படிக்கும் நான் விடுமுறையில் தாய்தந்தையரைக் காண இலங்கைக்கு வந்திருக்கிறேன். கடந்த இரு வாரங்களாக நடைபெற்ற குழப்பங்களின் விளைவாகத் தமிழர்கள் பட்ட தொல்லைகளையும் துன்பங்களையும் சொல்லி முடியாது. அவர்கள் தங்கள் உடைமைகளை யெல்லாம் விட்டு விட்டு உயிருக்குப் பயந்தோடும் காட்சிகளையும் காணும் துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. ஒரு நாட்டின் பெருவாரி சமூகம் சிறுபான்மை சமூகத்துக்கு எத்த அளவு துன்பம் விளைவிக்க முடியுமோ அத்த அளவு துன்பம் தமிழர்களுக்கு விளைவித்திருக்கிறார்கள். இந்நிலையில் கல்கியின் இரு தலையங்கங்கள் துண்டுப் பிரசுர வடிவில் எங்களுக்குக் கிடைத்தன. கல்வியறிவற்ற பல தோட்டத் தொழிலாளர்களுக்கு நான் அவற்றைப் படித்துக் காண்பித்தபொழுது அவர்களடைந்த மகிழ்ச்சியை என்னால் எழுத்தில் எழுத முடியாது. அதுவும் ராஜாஜி எழுதிய தலையங்கத்தை அவர்கள் கேட்டபொழுது ராஜாஜி அவர்களே தமிழர்களைக் காப்பாற்ற வந்தது போன்ற மகிழ்ச்சியை அடைந்தார்கள்.

இலங்கை
20—6—58

மு. கணபதி

★

கல்கி 8–6–58 இதழில் "இலங்கையில் அட்டூழியம்" என்ற தங்களின் தலையங்கத்தைப் படித்தேன். தமிழனின் ஒவ்வொரு அங்கங்களிலும் தங்களின் உணர்ச்சி மிக்க எழுத்துக்கள் பாய்ந்து புதிய உற்சாகத்தை ஊட்டியதுடன் இலங்கை அரசியல்வாதிகளுக்கு நல்ல சவுக்கடியும் கொடுத்திருக்கிறது.

இது ஒரு புறமிருக்க, வெள்ளையர்களுக்கு மூன்று மாத நோட்டீஸும், இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களுக்குப் பதினைந்து நாள் நோட்டீஸும் கொடுத்து, 'மேற்கண்ட நாட்களுக்குள் இலங்கையை விட்டு வெளியேறி விடவேண்டும். இன்றேல், யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு நேர்ந்த 'கதி' தான் உங்களுக்கும் நேரும்' என்று பயமுறுத்துகிறார்கள் சில வெறியர்கள். இந்நிலையில் இலங்கைத் தமிழர்களின் கதி என்ன?

கொழும்பு
18—6—58

ஏ. சிதம்பரம்

★

சென்ற பல நாட்களாக இலங்கையில் நடந்து வரும் சிங்கள வெறியர்களின் அட்டூழியம் சகிக்க முடியாததாக இருக்கிறது. தமிழர்கள் எல்லோரும் தங்கள் இனம் படும் துயரத்தைக் கண்டு மனமுடைந்து இருக்கும் இந்த வேளையில் தமிழ் நாட்டில் உள்ள சில தலைவர்கள் தங்கள் கட்சியின் இலட்சியத்துக்காக, இலங்கையில் உள்ள தமிழர்களை யெல்லாம் கண்டிக்க முற்பட்டிருப்பது மிகுந்த வேதனையை யளிக்கிறது.

அக்ரபத்தனை
20—6—58

பொ. ஆறுமுகம்

★

கல்கி 15—6—58 இதழில் ராஜாஜி எழுதியுள்ள "பலாத்காரமும் ஒற்றுமையும்" என்ற தலையங்கம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இத் தலையங்கம் இலங்கையில் வெளியாகும் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளிலும் வெளிவர வேண்டியது அவசியம். இப் பொன்னுரைகளை இலங்கை மந்திரிகளும் சிங்கள மக்களும் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம். தீர்க்கதரிசனமும் சிறந்த அரசியல் ஞானமும் வாய்ந்த ராஜாஜி சொல்லுகிறபடி, இலங்கைப் பழங்குடித் தமிழர்களுக்குப் பிரதேச சுதந்திரம் கொடுத்துச் சமாதானம் செய்து ஒற்றுமையை நிலைநிறுத்த வேண்டும். அவ்விதம் செய்யாமல் பலாத்காரத்தை மேலும் பிரயோகிக்குமானால், ஆங்கில அமெரிக்கப் பருந்துகள் இலங்கைக் கோழிக்குஞ்சை இரையாக்குவதற்கு வட்டமிடும்; இலங்கைச் சுதந்திரமும் பறி போகலாம்.

தென்காசி
18-6-58

தெ. ச. சுடர்முத்து

★

கல்கி 8-6-'58 இதழில் "இலங்கையில் அட்டூழியம்" என்ற தலைப்பில் சிங்களவரின் வெறிச் செயலையும், இலங்கைத் தமிழரின் பரிதாப நிலைமையையும் தெள்ளத் தெளிய எடுத்துரைத்துள்ளீர்கள். இலங்கைத் தமிழருக்கு நியாயம் வழங்கக் கோரி, அதே சமயத்தில் தமிழர்கள் பழிக்குப் பழி வாங்கும் முறையை நீக்கி, சத்தியமும் அஹிம்சையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று அறிவுறுத்தி யிருப்பது பாராட்டுதற்குரியது.

கொழும்பு
17—6—'58

பாலபாரதி மூ. சோமசுந்தரன்

★

தாய்மொழி யிழந்து தவிக்கும் இலங்கைத் தமிழர்கள் நீதி நேர்மை அறியாத சில சிங்களவர்களின் நீசச் செயல்களால் தங்கள் உயிர்களையும் உடைமைகளையும் இழந்து நேர் நின்று

கேட்க முடியாத நிலையில் உள்ளமுடைந்து ஊசலாடிய நேரத்தில் திரு ராஜாஜியின் "பலாத்காரமும் ஒற்றுமையும்" என்ற அறிவுச்சுடர் கண்டு உள்ளம் குளிர்ந்தார்கள்.

வாழ்ப்பாணம்
19—6—'58

மு. கனகசபை

★

இன்று கண்ணீர் விடும் இலங்கைத் தமிழர்களுக்குப் பெரிதும் ஆறுதல் தருவதான தலையங்க வாசகங்களைக் கல்கி இதழ்களில் படித்தேன். இலங்கை அரசாங்கத்தின் அவசரப் போக்குக்குக் கண்டனம் தெரிவித்து மிக விரிவாக எழுதியிருக்கிறீர்கள். ராஜாஜி அவர்கள் இலங்கைத் தமிழர்கள் மீது மிகுந்த அனுதாபம் கொண்டு இலங்கை அரசாங்கத்தை எச்சரித்தும், நன்மார்க்கம் காட்டியும் எழுதியுள்ளார்; யாவற்றையும் பாராட்டுவதோடு எங்கள் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.]

இலங்கை
15—6—'58

ப. நகுலராஜா

★

"இலங்கையில் அட்டூழியம்" என்னும் தலையங்கத்தைப் படித்தேன். அத்துடன் "பலாத்காரமும் ஒற்றுமையும்" என்னும் ராஜாஜி எழுதிய தலையங்கத்தையும் படித்தேன். உண்மையில் இலங்கைத் தீவில் நடக்கும் பல்வேறு கொடுமைகளாலும் அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடித்து வாடியிருக்கும் ஈழத் தமிழர்களின் உள்ளங்களில், பால் வார்த்ததுபோல் அளவில்லாத பெரும் ஆறுதல் அளிக்கின்றன அத் தலையங்கங்கள்.

இலங்கை
20—6—58

இ. சண்முகராசா

வட்ட மேஜை

நூல் அஞ்சல்

ஜூன் 15ம் தேதி இதழில் திரு சீனிவாசன் எழுதியுள்ள "தபால் அதிகாரிகள் கவனிப்பார்களா?" என்ற கடிதத்தைக் கண்டு வருந்துகிறேன். நூல் அஞ்சலில் இன்ன அனுப்பலாம் இன்ன அனுப்பக்கூடாது என்று சில விதிகள் இருக்கின்றன. கதையோ, கட்டுரையோ மட்டும் அனுப்பப்பட்டால் நூல் அஞ்சலில் எந்தவிதமான அபாரதமுமின்றிக் கடிதம் விலாசதாருக்குப் போய்ச் சேரும். அதை விட்டு, மேற்படி கதைகளுடன், ஆசிரியருக்குக் கடிதங்கள் வைத்து அனுப்புவதும், நூல் அஞ்சல் கவரைத் திறந்து வைக்காமல், ஒட்டி அனுப்பி விடுவதும் விதிகளுக்குப் புறம்பானவை.

மதுரை
24—6—58

பி. முத்துராமலிங்கம்

தீயணைப்பு நிலையம் வேண்டும்

கள்ளக்குறிச்சி தாலூக்காவிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலும் அடிக்கடி தீவிபத்துக்கள் ஏற்படுகின்றன. இதை அணைக்கத் தீ அணைக்கும் மோட்டார் வர வேண்டும் என்றால் அறுபது மைல் தூரத்திலிருக்கும் கடலூர் அல்லது சேலத்திலிருந்து வர வேண்டும். இதனால் வீடுகள் எரிந்து சாம்பலாகிப் பெரும் நஷ்டத்தை விளைவிக்கின்றன.

கள்ளக்குறிச்சி
23—6—58

பூ. வராகசாமி

பஸ்களின் பயங்கர வேகம்

எங்கள் ஊர் வழியாகக் காலை ஒன்பதரை மணிக்கும் இரவு எட்டரை மணிக்கும் இரண்டு பஸ்கள் மிகுந்த வேகத்தோடு செல்கின்றன. பஸ் மிகவும் வேகமாக ஓடுவதால் குழந்தைகளுக்கு எங்கு ஆபத்து நேர்ந்து விடுமோ என்று மக்கள் பயப்படுகிறார்கள். பலமுறை சொல்லியும் யாரும் கேட்கவில்லை.

முத்துத்தேவன்பட்டி
20—6—58

கி. ராஜு

பலனுள்ள கட்டுரை

வாரா வாரம், ஆவலுடன், "கல்கி"யை வாங்கிப் படிக்கும் வீடுகளில், எங்கள் வீடும் ஒன்று. அதில் நாட்டு வைத்தியப் பகுதியைப் படித்து அனுகூலம் அடைகிறோம்.

திருச்சிராப்பள்ளி
19—6—58

டி. எ. பரமசிவன்

கடிகாரம் ஓடுமா?

திருச்சி ரூரல் பஸ் நிலையத்திலும், மெயின் கார்டு கேட் அருகிலும் வைக்கப்பட்டிருக்கும் கடிகாரங்கள் பொது ஜனங்களின் நன்மையைக் கருதியே இருக்கின்றன. ஆனால் குறைந்தது மாதத்தில் இருபது நாட்கள் அவை ஓடுவதில்லை. இதற்குப் பொறுப்பு கடிகாரத்தின் குறைபாடா, அல்லது கண்காணிக்கும் நபரின் குறைபாடா என்று தெரியவில்லை. இதைச் சீர்திருத்தம் செய்வதில் திருச்சி நகரசபையாருக்கு எந்த விதமான நஷ்டமும் ஏற்பட்டு விடாது என நம்புகிறேன்.

துறையூர்
24—6—58

துறையூர் பாலா

அங்கும் இங்கும்

"எக்காரணத்தைக் கொண்டும் எவரையும் பள்ளியில் சேர்க்காமல் இருக்கக் கூடாது" என்று கேரள சர்க்கார் கட்டளை இட்டிருக்கிறார்கள். திண்ணைகளிலும் கோவில்களிலும் மரங்களின் நிழல்களிலும் அங்கு பாடம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் கல்வி கற்றவர்கள் குறைந்துள்ள சென்னையில் மக்களை கஷ்டப்பட்டுப் பணம் வசூலித்து, நிலத்தையும் காட்டி, 'பள்ளிக்கூடம் கட்ட அனுமதி கொடுங்கள்' என்று கல்வி அதிகாரிகளைக் கேட்டால், "அந் நிலம் நல்ல இடமல்ல, கலைமகள்வாழும் இடம் நல்ல இடமாய் இருக்க வேண்டும்" என்று தட்டிக் கழிக்கிறார்கள்.

இளம்பிள்ளை
25—6—58

ஆர். அமிர்தலிங்கன்



ஜெட் விமானத்தில் தில்லி பயணம்


இந்தியாவின் முன்னேற்றத்தை அளக்க ஒரு அளவுகோல் விமானப் பிரயாணம். கட்டை வண்டி சகாப்தத்திலிருந்து ஜெட் விமான சகாப்தத்துக்கு நாம் இப்போது வந்திருக்கிறோம். கட்டை வண்டியை முற்றிலும் விட்டுவிடவில்லை. நம்முடைய பரந்த தேசத்தில், ஏழு லக்ஷம் கிராமங்கள் கொண்ட நாட்டில் மாட்டு வண்டியை அடியோடு அகற்றிவிட முடியாது. அதுவும் இருக்கத்தான் இருக்கும் ஒரு கோடியில். ஆனால் மறு கோடியில் பிரயாண வேகத்துக்குச் சின்னமாக இருப்பது "வைகௌண்ட்" என்ற ஜெட் விமானம். சென்னையிலிருந்து தில்லி செல்லும் மார்க்கத்தில் இந்த "வைகௌண்ட்" விமான சர்வீஸ் முதன் முறையாகச் சென்ற 15-ம் தேதி ஆரம்பிக்கப் பட்டது.


இதனால் சென்னைக்கும் தில்லிக்கும் இடையே ஒன்பது மணி நேரத்தில் செய்த பிரயாணத்தை இப்போது ஆறரை மணி நேரத்தில் செய்யலாம். நேரம் குறைந்தது மட்டுமல்ல. வசதிகளும் அதிகம். முன்போல் கைகால்களை நீட்டி மடக்க முடியாமல் முடங்கிக் கிடக்க வேண்டியதில்லை. நன்றாகக் கால்களை நீட்டி விச்ராந்தியாகச் சாய்ந்துகொண்டு நிம்மதியாகத் தூங்கிக்கொண்டே பிரயாணத்தை முடித்துவிடலாம். அடர்ந்த மேகக் கூட்டங்களின் இடையே விமானம் செல்லும் போதுகூட எந்தவிதமான ஆட்டமும் ஏற்படுவதில்லை. விமானத்தில் உபசரணைக்காக அமர்த்தப்பட்டிருக்கும் பெண்மணி அன்புடன் உவந்து அளிக்கும் தேநீரோ அல்லது வேறு ஆகாரப் பொருள்களோ வைத்துக்கொள்ள ஒவ்வொரு ஆசனத்துக்கும் எதிரே ஒரு சிறிய மேசை. ஒரு பொத்தானை அழுத்தியவுடன் அந்த மேசை நமக்காக விரிந்துகொண்டு தயாராக இருக்கிறது. சீட்டுக் கட்டைக் கொண்டு அந்த மேசையின்மீது ஒரு மாளிகையே கட்டலாம் என்றால் எவ்வளவு தூரம் ஆட்டமில்லாமல் விமானம் பறக்கிறது என்பதை ஊகித்துக் கொள்ளலாம். ஆட்டம் கொடுத்துக் கொண்டு தண்டவாளத்தின் மீது ஓடும் ரயிலைப் போல் ஆடி அசைய வேண்டியதில்லை. உள்ளே நிசப்தம்-நம்ம வீட்டு அறைகளிலுள்ள நிசப்தம் — ஆமாம், குழந்தைகள் இல்லாத, அல்லது குழந்தைகளுக்கென்று தனியாக அறை ஒதுக்கி வைக்கும் சௌகரியம் கொண்ட வீடுகளைப் போல்தான். ரூபாயைப் போட்டால் அப்படியே நிற்கும். அவ்வளவு நிச்சலனமான ஓட்டம், ஆகாயத்தில், 20,000 அடி உயரத்தில்!

இவ்வளவு சுக சௌக்கியத்துடன் கூடிய இந்த விமானத்தில் அபாயம் மிக, மிகக் குறைவு. நான்கு என்ஜின்களுடன் கூடிய விமானமாதலால், ஏதாவது ஒரு என்ஜினுக்குக் கோளாறு ஏற்பட்டாலும் கூட இரண்டு என்ஜின்களுடனேயே பிரயாணத்தை முடிக்க வல்லது. பிரயாணிகளுக்குப் பீதியை விளைவித்து, விமானம் கீழ் இறங்க வேண்டியதில்லை.


இவ்வளவு அதிகமான பாதுகாப்புடன் கூடிய ஒரு சாதனம் நம்மிடையே இருக்கிறதென்பதே மகிழ்ச்சிக்குரிய விஷயம். மற்ற மார்க்கங்களில் இந்த 'ஜெட்' வைகௌண்ட் விமான சர்வீஸ் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. சென்னை — தில்லி மார்க்கத்திலும் இப்பொழுது வைகௌண்ட் விமானம் பறக்க ஆரம்பித்து விட்டது. அந்த விமானத்தைச் சேர்ந்த இந்திய விமானக் கார்ப்பரேஷனையும் அதனுடைய தலைவர் திரு சங்கர் பிரஸாதையும் பாராட்டுகிறோம்.

நாற்பத்திநான்கு பிரயாணிகள் ஒரே சமயத்தில் பிரயாணம் செய்யக்கூடிய இந்தப் பெரிய விமானத்தில் வான வெளியின் வர்ண ஜால அழகையும் கீழே பசுமையான நிலப் பரப்பையும் கண்டு மகிழும்படி பெரிய கண்ணாடி சன்னல்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.






டீஸல் எண்ணெய் சிக்கனமாய் செலவாகுவதற்கு அடிப்படையாய் இருப்பது இஞ்செக்ஷன் பம்புகள். இதில் கோளாறு ஏற்படின், திறமையுடன் சீர்படுத்த படத்தில் காணும் நவீன யந்திரம் மதராஸிலும் மதுரையிலும் உள்ளது.



ரேடியேட்டரில் உரிய அளவு தண்ணீர் சீராக பாயாவிட்டால், இஞ்சின் சீர்கேடடையும். பக்கத்திலுள்ள இயந்திர சாதனத்தால், இந்தச் சீர்கேடு நிவர்த்திக்கப் படுகிறது.


தண்ணீரிலுள்ள அசுத்தங்கள், ரேடியேட்டரைப் பாதிக்கும். இதனால் குழாய்கள் அடைபட்டு, தண்ணீர் ஓட்டத்தைத் தேக்கி, இஞ்ஜின் உஷ்ணத்தை அதிகரிக்கும். பக்கத்தில் காணப்படும் இயந்திர சாதனம் தண்ணீர் ஒழுகுதலையோ அல்லது தடைப் படுதலையோ சீர்ப்படுத்துகிறது.



சன்ஸ் பிரைவேட் லிமிடெட்

புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்

பிரைவேட் லிமிடெட், மதராஸ்



அன்று பங்குனி உத்திரத் திருநாள். வீரசோளம்புதூர் ஜமீன்தார்களின் குல தெய்வமாகிய நவநீதகிருஷ்ணப் பெருமாளுக்குப் பத்து நாள் திருவிழா சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. அன்று மாலை தேரோட்டம். ஜமீன்தாரே உடன் நின்று தேரைத் தொட்டுக் கொடுக்கும் காட்சியைக் காண அக்கம் பக்கத்துப் பட்டிகளிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்து கூடியிருந்தார்கள். தெருக்களிலும், தெப்பக்குளத் தோப்பை அடுத்துக் கிடந்த காலி இடங்களிலும் புதிதாக முளைத்த மிட்டாய்க் கடை, சாப்பாட்டுக் கடைகளும், ஜவுளி, பூ, வளையல் கடைகளும், குடை ராட்டினம், கழைக்கூத்து, கோவில் மேளதாளம் அதிர்வேட்டுகளுமாகத் திருவிழா அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது.

அரண்மனை வாசல் முன்னே வடக்கு நோக்கிய அலங்காரப் பந்தல். பந்தல் முகப்பில் கவியரங்க மேடையில் ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. புலவர்கள் அமர்வதற்கு அரை வட்டமாகப் பத்துப் பீடங்களும், அவற்றின் நடுவே அரங்குத் தலைவருக்குரிய தலைமைப் பீடமும் இடப்பட்டிருந்தன.

காலை பத்து நாழிகை இருக்கும். அழைப்பு பெற்ற பிரமுகர்கள் மட்டும் பந்தலுக்குள் வந்து அமர்ந்தார்கள். புலவர்கள் ஒவ்வொருவராக வந்து தத்தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்தனர். அரங்கு மேடைக்கு வலப் பக்கத்தில் தனியே அமைத்திருந்த மேடையில் ஜமீன்தாரும், அவர் புதல்வியும் எதிர்கால ராணியுமான ஆண்டாள் நாச்சியாரும் அவள் உயிர்த் தோழி வாசந்தியும் வந்து உட்கார்ந்தனர்.

கால் நாழிகை கழிந்தது. அவையில் பின்னிடத்தில் ஒரு சிறிய சலசலப்பு. யாரோ ஒரு இளைஞன் தன் கையில் பத்துப பதினைந்து ஓலை நறுக்குகளுடன் எழுந்து நின்றான்.

'' யார், ஐயா நீ? உட்காரு '' என்று மெல்லவும் கைச் சாடையாகவும் அதட்டினார்கள் பக்கத்திலிருந்த சிலர்.

பாட்டும் எழுதி அதற்குப் பதினைந்து பிரதிகளும் எடுத்துவிட்டேன். கவியரங்கத் தலைவருக்கு அவற்றைச் சமர்ப்பிக்க அநுமதி கோருகிறேன்'' என்றான் அந்த இளைஞன் வினயத்துடன். ராஜகளை வீசும் அவனுடைய முக விலாசத்தையும் ஒளிவீசும் நயனத்தாமரைகளையும் கண்டோர்க்கு அவனது புலமையில் நம்பிக்கையும் அவன்மீது ஒரு தனி மதிப்பும் தாமாகவே உண்டாயின.

கவியரங்குத் தலைவர் கொடுக்கும் பொருளைக் கொண்டு புலவர்கள் அவ்விடத்தில் கவி இயற்ற வேண்டும். ஜமீன்தார் மருதப்பத் தேவரும், புலமையும் ரசிகத் திறமும் படைத்த ஆண்டாள் நாச்சியாரும், ஆஸ்தான கவிஞர் அருணாசலம் ரெட்டியாரும் கவிகளின் தரத்தை ஆராய்ந்து முதற் கவிஞரைத் தீர்மானம் செய்வார்கள்.

அருணாசலம் ரெட்டியார் கவிதைக்குரிய பொருளைச் சொன்னார்; அயல்நாடு சென்ற காதலன் ஒருவன் தன்னுடைய காதலிக்குத் தனது வருகையை முன்னரே சென்று சொல்லும்படி கிளியைத் தூது அனுப்புவதாக ஒரு நேரிசை வெண்பா.

புலவர்களுடைய கற்பனை மனம் காற்றாடியாகச் சுழன்றது. நாலே அடிகளுள் ஒரு காதல் உள்ளத்தின் வேகத்தைச் சித்திரிக்க வேண்டும். எதுகை மோனைகளுடன் பாட்டின் ஒவ்வொரு சொல்லிலும் காதல் துடிப்பு ததும்ப வேண்டும்.

பத்துப் புலவர்கள் மேடைமேல் அமர்ந்து எழுதுவதும் எழுதியதை அடித்துத் திருத்துவதுமாக இருக்க, ஒரு இளைஞன் அரை நொடியில் பாட்டை எழுதி முடித்துவிட்டான்! அவனே வெற்றி பெற வேண்டுமென்றும் ஆண்டாள் ஏனோ ஆசைப்பட்டாள்.

எதிர்பாராத சூழ்நிலை. முறைப்படி கவி அரங்கில் கலந்து கொள்ளாத ஒருவருடைய கவியை முடிவுப் போட்டியில் சேர்த்துக் கொள்வது சரியா? அருணாசலம் ரெட்டியார்,

ஜமீன்தார் துரையைப் பார்த்தார். துரை தம் புதல்வி ஆண்டாளைப் பார்த்தார். அவள், கையில் கவிதையுடன் நின்று கொண்டிருந்த கட்டிளம் புலவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவையோரும் புலவர்களும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

இவ்வாறு சில கணங்கள் கவியரங்க நிகழ்ச்சி ஸ்தம்பித்து நின்றபோது, அவ் விளங் கவிஞனோடு வந்திருந்த பெரியவர் ஒருவர் அவனிடமிருந்த கவிதை தீட்டிய நறுக்குகளை வாங்கிக் கொண்டு, அவையினர் வழி விட்டுக்கொடுக்க, அரங்க மேடைக்கு முன் வந்து, அதில் அவற்றை வைத்துவிட்டு வினயத்துடன் தம் இடத்துக்குச் சென்றார்.

யாவர் கவனமும் அவர் மீதே சென்றது. ஜமீன்தாருக்கு மட்டும் ஒரு கணம் இரத்தமே உறைந்துவிட்டது போல உணர்ச்சி மங்கியது. தம் நெற்றியையும் முகத்தையும் குட்டையால் துடைத்துக் கொண்டார். அவருடைய எண்ணம் இருபதாண்டுகளுக்கு முன் தாவியது. ஆம், இவன் அவனே தான். ஆனால் அந்த இளைஞன் யார்? அவனுக்கும் இவனுக்கும் என்ன தொடர்பு?

பக்கத்தில் நின்று கொண்டிருந்த சேவகனைப் பார்த்துத் தம் விரலை அசைத்தார். அவன் எட்டி நின்று வாய் பொத்தி, உத்தரவை எதிர்பார்த்தான். அவன் செவியினுள் ஏதோ சொன்னார். இதைக் கவனித்த பெரியவரும் இளம் கவியும் சரசரவென்று கூட்டத்தை விட்டு நழுவித் தெருவில் நின்ற திருவிழாக் கூட்டத்தையும் நீந்திப் போய், அங்கே வௌவால் தோப்பில் ஆயத்தமாக நின்று கொண்டிருந்த இரு புரவிகளின்மீது பாய்ந்து ஏறி, சாலை வழியாக அத்திவூத்து வந்து பின் காட்டுப் பாதையாகக் கடையம் மலையை நோக்கி விரைந்தனர். ஈட்டியுடனும் வேலுடனும் தம்மைத் துரத்தி வந்த ஜமீன்தாருடைய குதிரை வீரர்கள் கண்களுக்கு அவர்கள் மறைந்து போயினர்.

* * *

அரங்க மேடையில் அந்தப் பெரியவர் வைத்துவிட்டுப் போன நறுக்குகளைச் சேவகன் ஒருவன் எடுத்துவந்து ஆண்டாள் நாச்சியாரிடம் கொடுத்தான். எல்லா ஏடுகளிலும் ஒரே கவிதான் பிரதி செய்யப்பட்டிருந்தது. அவள் கவியைப் படித்துப் பார்த்தாள். அவள் மனம் குதூகலித்தது. புலவர்களுடைய பாட்டு சபைக்கு வரட்டும், அதன் பிறகு பார்த்துக் கொள்ளலாமென்று அவள் எதிர்பார்த்திருந்தாள்.

கவியரங்குப் புலவர்கள் கலவரம் அடங்கி ஒருவாறு தத்தம் கவிதையைப் புனைந்து முடித்தனர். ஒவ்வொருவராக எழுந்து அதனை அவைமுன் படித்தனர். அவையிலிருந்தோர்க்கு அந்தப் புதிய கவிஞனுடைய கவியைக் கேட்பதற்கே ஆவல் மிகுந்தது. முறை தப்பிவரும் இன்பத்தையும், கைக்கு எட்டாததையும் நாடுவதே மனித இயல்பன்றோ? என்ன இருந்தாலும், முறைப்படி போட்டியில் கலந்து கொள்ளாத கவியினைத் தாம் ஏற்றுக் கொள்ள முடியாதென்று அவைத் தலைவர் அறிவித்தார். போட்டி முடிவு மகாராஜாவுடன் கலந்து கொண்டபின் அறிவிக்கப்படும் என்று அவர் கூறவும் கவியரங்கம் கலைந்தது.

* * *

மருதப்பத்துரை மாலையிலே ரதோற்சவத்துக்குச் சென்றவர் சடங்குகளில் யந்திரம் போலக் கலந்து கொண்டு அரண்மனைக்குத் திரும்பினார். அவர் உள்ளம்போல் உடலும் புழுங்கி எரிந்து கொண்டிருந்தது. தூக்கம் விலகி நின்றது. படுத்திருந்தவர் எழுந்து முகத்தில் காற்றுப் படும்படி நிலா முற்றத்தை நோக்கி மாடிப்படியில் நடந்தார்.

பக்கத்து அறையிலே ஆண்டாளும் வாசந்தியும் இன்னும் உறங்கவில்லை, அவர்கள் பேச்சு அவ்விளங் கவிஞனைப் பற்றியே இன்னும் நடந்து கொண்டிருந்தது.

வெளியே இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த ஜமீன்தார் நெருப்பின் மேல் நின்று கொண்டிருந்தார். 'நமக்கு எதிர்பாராமல் வந்து முளைத்த சத்துரு, இவர்களுக்கு மித்துரு! பிரியப்பட்டவன் யாராக இருந்தாலும் அவன்மேல் மனத்தை நிறுத்தும் பெண் குலத்தின் காதல் தத்துவத்துக்கு எதிரே ஒரு தந்தையின் பாசம் எம்மாத்திரம்?'

அவர் கண்கள் திவட்டியாகக் கனன்றன. வெகுளியை அடக்கிக் கொண்டு, ஆண்டாள் வாசந்திக்குச் சொல்லப்போகும் அந்தப் பாட்டைத் தான் கேட்போமே என்று நினைத்து அவர் பொறுமையுடன் நின்றார்.

ஆண்டாள்தான் பேசினாள். அவள் குரல் சோகத்தால் தழுதழுத்திருந்தது. ''வாசந்தி! நீ என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையடி! அந்தப் பாட்டு அவர் எனக்காகவே எழுதியனுப்பியது. இரு பொருள்படும்படி எழுதப்பட்டுள்ள அதில் சில அரண்மனை மர்மங்களும் மறைந்து கிடக்கின்றன. எதிர்பாராதபடி நம் அரண்மனை வாழ்வில் என்ன என்ன புயல் மோதுமோ என்று எனக்குப்



பயமாக இருக்கிறது. கவியைக் கொண்டு வந்த பெரியவரைக் கண்டது முதல் அப்பா கலவரமடைந்து தடுமாறிக்கொண்டிருப்பதை நீ கவனிக்கவில்லையா? நான் விரும்பும் அந்தக் கவிஞரை நான் அடைந்தால் அது பிறவிக் குருடன் பார்வை பெற்ற அற்புதம்தான்.''

தம் புதல்வி ஆண்டாளைத் தாமும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை ஜமீன்தார் உணர்ந்தார். அவர் தந்தை உள்ளத்தில் அந்தத் தாயில்லாப் பிள்ளைக்காக அநுதாபம் கொழுந்து விட்டது.

மறுகணம் மருதப்பர் எண்ணம் பழைய திசையை நோக்கித் திரும்பியது. அந்த இளைஞன் ஒருவேளை அவனும் இருப்பானோ? பிறந்தவுடனேயே செத்து விட்டவன் பிழைத்து வருவானோ? அந்த மர்மத்தை உடனடியாகத் தெளிவாக்கிக் கொள்ளாவிட்டால் அவர் தலையே வெடித்து விடும் போலிருந்தது.

• • •

பொக்கிஷ அறையிலிருந்த இரும்புப் பெட்டியைத் திறந்து அதன் உள்ளறைக்குள் தம் நடுங்கும் விரல்களால் துழாவினார். ஆம், அதுதான் அந்தத் தாள். அதைப் பிரித்துப் படித்தார். ''ஜமீன்தாரிணியும், பிள்ளையும் காலமாயினர். நான் காசிக்குப் போகிறேன்.'' இருபத்திரண்டு வருடங்களுக்கு முன் அந்தத் தந்தி கிடைத்ததும், அதை நம்பாமல் அவர் சென்னைக்கு ஓடிப் போய் விசாரித்து நிச்சயம் செய்து கொண்டதும் பொய்யா?

அன்று இரவே பொழுது புலரும்முன் அவர் சென்னைக்குப் பிரயாணமானார். அங்கே நகர சபை ஜனன மரணப் பதிவேடுகளைச் சோதித்தார். அவருக்குத் தந்தி கொடுத்த இளைய மருது அவரை ஏமாற்றியிருந்தான். ஜமீன்தாரிணியையும் வாரிசையும் ஒழித்துக் கட்டுவதற்கு இணங்கியிருந்த டாக்டர் விஜயாவும் அவரை ஏமாற்றியிருந்தாள். அவர் தலையில் இடி விழுந்தது போலாயிற்று. உலகை ஏமாற்றி விட்டதாக எண்ணிக் கொண்டிருந்த அவர்தான் ஏமாந்து போயிருந்தார்!

அவருடைய சகோதரி ஈசுவரித்தாய் வீர கேரளம்புதூர் ஜமீன்தார் இருதயாலய நவநீத கிருஷ்ணத் தேவரின் பட்டத்து ராணி. அவள் கருவுற்ற பின்னடியில் ஜமீன்தார் காலமானார். தம் சகோதரி ஈசுவரித்தாயும் அவள் வயிற்றில் வளர்ந்து வந்த சிசுவும் ஜமீனை அடைவதற்கு அவருக்கு இடையூறாய் இருந்தன. இருவரையும் ஒழித்துக் கட்ட அவர் திட்டமிட்டார். அதை அறிந்த அவர் தம்பி இளையமருது அவருக்கெதிராக வைராக்கியமாக இருந்தார். ஈசுவரித் தாயை அக் காலத்தில் பிரசவ மருத்துவத்துக்குச் சென்னையில் பிரசித்தி பெற்ற டாக்டர் விஜயாவிடம் ஒப்படைத்தார். அவளையே தஞ்சம் புகுந்து அவள் காலடியில் இருபதாயிரம் எண்ணி வைத்தார் மருதப்பத்தேவர். பணத்தைப் பெற்றுக் கொண்ட விஜயா இரண்டு உயிர்களுக்கும் தீங்கு நினைக்க வில்லை. ஆனால் விதி குறுக்கிட்டு ஈசுவரித்தாயைக் கவர்ந்து கொண்டது. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் இளையமருது தம் அண்ணன் மருதப்பத்தேவரை ஏமாற்றும்படி அந்தப் பொய்த் தந்தியை அவருக்குக் கொடுத்து விட்டுத் தன் சகோதரி பெற்று விட்டுப் போன பாலகனைச் சென்னையிலேயே தக்கவர்கள் உதவியால் வளர்த்து இருபத்திரண்டு வயது இளைஞனாக்கி விட்டார். கவியரங்குக்கு வந்து மின்னலைப்போல் தோன்றி ஜமீன்தார் மருதப்பத்துரைக்கு இவ்வளவு அதிர்ச்சியைக் கொடுத்த பெரியவர் இளையமருதுதான்; அந்த இளம் கவி வீர கேரளம்புதூர் ஜமீனுக்கு வாரிசான வீர விஜய பாண்டியனே.

• • •

அரண்மனைத் தெருவிலிருந்து அந்தி மயங்கும் வேளையில் அந்தச் சத்தம் வந்ததை நந்தவனத்தில் நின்ற வாசந்தி கேட்டாள்.

'குடு குடு. குடு குடு
கம்பளத்து நாய்க்கர் மகன்
ஃகாரியங்கள் சொல்கிறேன்
எம்பளக்க மாட்டேன் நான்
வரும் உண்மை செப்புகிறேன்

நல்லவேளை, சென்னை சென்ற ஜமீன்தார் இன்னமும் வரவில்லை. வாசந்திக்குத் தைரியம் உண்டாயிற்று. அந்தக் கம்பளத்து நாயக்கனை நந்தவன வாசல் வழியாக அரண்மனைக்கு அழைத்து வந்தாள்.

''வாசந்தி! நீ இங்கே வாசலில் காவலாக நில். நான் மகாராணியைத் தனியாகச் சந்திக்க வேண்டும்'' என்றான் கம்பளத்தான்.

பீதியுற்று ஆண்டாளும் வாசந்தியும் சட்டென்று எழுந்தார்கள். வாசந்தி தன் அரையிலிருந்த கத்தியை உருவினாள். கம்பளத்தான் சிரித்துக் கொண்டே தன் பொய்த் தாடியையும் மீசையையும் களைந்தான்.

'ஆ, தாங்களா!' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ஆண்டாள்.

''ஆம், என் அழகுக் கடலே! நானேதான்'' என்றான் சுயரூபத்தில் நின்ற வீரவிஜய பாண்டியன். பரமதரித்திரன் திடீரென்று அஷ்டஐசுவரியமும் பெற்றது போல் பூரித்தாள் ஆண்டாள். வாசந்தி தானாக நழுவி விழுந்த கத்தியை எடுத்து அரையில் செருகிக் கொண்டு வாசலண்டைப் போய்க் காவலாக நின்று கொண்டாள்.

வீரவிஜயன் தன் மாமன் மகளை அழைத்துக் கொண்டு உள் பக்கமாகச் சென்றான். சந்தன மரத்தைச் சுற்றிக் கொள்ளத் துடிக்கும் மல்லிகைக் கொடி போல் அவனைத் தழுவிக் கொள்ளத் துடித்தாள் ஆண்டாள். நாணம் குறுக்கிட்டுத் தடுத்தது.

'' ஆண்டாள்! என் அமுதமே! அதிகமாகப் பேசிக் கொண்டிருக்க நமக்கு இப்போது நேரமில்லை. சுருக்கமாகச் சில செய்திகளைச் சொல்லி விட்டுப் போகவே திரும்பி வந்தேன். என் கவியின் பொருளை நீ புரிந்து கொண்டிருப்பாய். நான் இப்போது சொல்வது உனக்குப் புதிராக இருக்கும். எல்லாப் புதிரும் தீர்ந்து உன் தந்தை சென்னையிலிருந்து தெளிவுடன் திரும்புவார். உனக்கும் சில நாட்களில் எல்லாம் தெளிவாகும். அவர் திரும்பி வந்ததும் என்னைத் தேடுவார். உன் கையில் என்னைப் பிடித்துக் கொடுக்கும் ஒரே உத்தேசத்துடன்தான் அவர் வருகிறார். நான்

உன்னை ஏற்றுக் கொள்வேனோ என்று தயங்குவார். என் இதயராணியே! உன் தந்தைக்கேனும் உனக்கேனும் அந்தச் சந்தேகம் கனவிலும் வேண்டாம்.''

''கவிராஜ சிங்கமே! அன்று கவியரங்கில் உங்களைக் கண்டது முதலே நானும் இந்த ஜமீனும் உங்கள் உடைமை. உங்களுக்கும் அந்தச் சந்தேகம் வேண்டாம். ஆனால்...'' கேட்பதற்குத் தயங்கினாள் ஆண்டாள்.

''ஆனால் என்ன? சொல்!'' என்று பரிந்து கேட்டான் வீரவிஜயன்.

சிறிது நேர மௌனத்துக்குப் பின் அவள், ''தாங்கள் யார்?'' என்று வினவினாள்.

''கண்ணே! இந்தக் கேள்விக்கு மட்டும் விடை சொல்லி விடுகிறேன். நான் உன் தந்தையின் சகோதரி சுகவரித்தாய் பெற்றபிள்ளை வீரவிஜய பாண்டியன். நான் வருகிறேன். கூடிய விரைவில் நாம் சந்திப்போம். நீ வீரகேரளம்புதூர்ப் பட்டத்து ராணியாவாய்.''

வீரவிஜயன் அரண்மனையை விட்டு வெளியேறினான். அன்று இரவு ஆண்டாளும் வாசந்தியும் தூங்கவே இல்லை.

* * *

பத்தே நாட்கள் வெளியே சென்று திரும்பிய மருதப்பத்தேவர் பத்து ஆண்டுகள் வயது முதிர்ந்தவராகக் காணப்பட்டார். தலைக்கு மேல் பெருகிவிட்ட வெள்ளத்துக்கு இனி அவரால் அணைபோட முடியாது. தம்பி இளைய மருதுவும், ஜமீனுக்குப் பிறந்த மகனும் மலை போல் அவர் கண்முன் நின்றனர். கவிஞனாக வந்த அவனை அவர் புதல்வி ஏற்க ஆயத்தமாக இருந்தாள். ஆனால் தங்கை சுகவரித்தாயின் புதல்வன் அவளை ஏற்றுக் கொள்வானா? இளைய மருது அதற்குச் சம்மதிப்பானா? தான் செய்தகொலைக் குற்றத்தைத் தன் புதல்வியின் பொருட்டு அந்த இருவரும் மன்னிப்பார்களா? மனிதர்களுடைய மனங்களை ஆளும் நவநீத கிருஷ்ணன் காலடியில் விழுந்து கிடந்தார் மருதப்பத் தேவர்.

விழுந்தவர் எழுந்து, வருவது எதுவாயினும் அது அவன் செயல் என்று அதை ஏற்கத் துணிந்து விட்டார். அவர் மனத்தில் புதிய ஒளி ஒன்று பிறந்தது. அவர் ஒரு தீர்மானத்துக்கும் வந்து விட்டார்.

'செத்துப் பிழைத்தேன்
திரும்பிவந்தால் இங்குடைய
சொத்தோடு பெண்ணும்
சுதந்தரிப்பான் — சத்தியமாய்க்
காசினியைக் கைவிட்டுக்
காவிகட்டிச் சென்றிடுவேன்
காசிக்கே நில்லேன்
கணம்'

விசித்திரப் பொருளுடைய இவ் வெண்பா, அவரால் நாடறிய விளம்பரம் செய்யப்பட்டது. ஜமீன் அதிகாரிகளுக்கும் குடிகளுக்கும் ஜமீன்தார் தம் புதல்விக்கு மாப்பிள்ளை பார்க்கும் முறை பழைய காலத்துக் கட்டுக் கதைகளில் வருவதைப் போல விநோதமாக இருந்தது. செத்தவன் திரும்பி வருவானா? ஊரெங்கும் இதே பேச்சாக இருந்தது.

வழக்கம்போல அன்று மாலையும் ஜமீன்தார் மருதப்பத் தேவர் தம் குதிரையின்மேல் ஏறி

உலாவிவரப் புறப்பட்டார். தானாதி சிதம்பரத்தேவரும் மற்றொரு குதிரையில் அவரோடு போய்க் கொண்டிருந்தார். குதிரைகள் இரண்டும் சித்ரா நதிக்கரை வழியே பச்சைப் பசேல் என்றிருந்த வயல்களின் ஓரம் ஒய்யாரமாக நடை போட்டன. மாலை மயங்கும் வேளை. அவர்களுக்கு வலப்புறத்திலிருந்து 'விஸ்' என்று பறந்து வந்த அம்பு ஒன்று தானாதித் தேவரைக் கடந்து போய் ஜமீன்தாருடைய குதிரைக் கடிவாளத் தோலில் குத்திக் கொண்டு நின்றது.

தம் இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியில் கைவைத்த மருதப்பத் தேவர் அம்பின் பின்புறம் கட்டியிருந்த ஓலை நறுக்கைக் கண்டதும் குதிரையிலிருந்து குதித்தார். விரல் அகலத் தோலில் குறி தப்பாது எய்த வில்லாளியின் திறத்தைக் கண்டு இருவர் கண்களும் வியப்பால் விரிந்தன. தானாதித்தேவர் அம்பைப் பிடுங்கி எடுத்து ஜமீன்தாரிடம் கொடுத்தார். ஓலையில் துவக்கமாக எழுதப்பட்டிருந்ததை அந்த மங்கிய வெளிச்சத்திலும் அவரால் படிக்க முடிந்தது.

மருதப்பத் தேவர் கவியரங்கத்துக்கு வந்த இளைஞனைப் பற்றிய சில மர்மங்களைத் தானாதித் தேவரிடம் அந்தரங்கமாகச் சொல்லி வைப்பதற்கே அவரை அன்று தம்மோடு அழைத்துக் கொண்டு வந்திருந்தார். சொல்ல வேண்டியவற்றைச் சொல்லியபின் அம்பு ஏந்தி வந்த வெண்பாவையும் சொன்னார்.

'செத்தேன் பிழைத்தேன்
திரும்பிவந்தேன் என்னுடைய
சொத்தான பெண்ணும்
சுதந்தரிப்பேன்—பத்தாம்நாள்
பாரதியக் கல்யாணப்
பந்தலிலே வந்திடுவேன்
யாரறிவார் ஜமீன் இயல்'

—வீரவிஜய நவநீத கிருஷ்ண பாண்டியத்தேவர்

"நாளைக்கே ஜமீனை வீர விஜயனுக்கு ஒப்படைப்பதற்குரிய பத்திரங்களைத் தயார் செய்து விடவேண்டும். அதன்பின் கல்யாணத்துக்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். சுரண்டை, சொக்கம்பட்டி, சிவகிரி, சேத்தூர், சிங்கம்பட்டி முதலிய ஜமீன்களுக்கு முகூர்த்தப் பத்திரிகையை ஏற்கெனவே அனுப்பி விடுவது உசிதம். கல்யாணத்துக்கு முந்தின நாள் இரவே நான் இங்கிருந்து வெளியேறி விடுவேன். எல்லாவற்றையும் இளைய மருதுவிடம் ஒப்படைத்து விடுவது உமது கடமை" என்று கட்டளையிட்டார் மருதப்பத் தேவர்.

* * *

நாளை விடிந்தால் பத்தாம் நாள் முகூர்த்தம். அரண்மனையும் பந்தல் அலங்காரங்களும் விருந்தினர் ஆரவாரமும் வீரகேரளம்புதூர் 'ஜே, ஜே' என்றிருந்தது. மர்ம மாப்பிள்ளையைப் பார்க்க யாவரும் துடி துடித்துக் கொண்டிருந்தார்கள்.

அன்று முன்னிரவு மருதப்பத் தேவர் தம் அருமைப் புதல்வியைக் கடைசியாக ஒருமுறை பார்த்து விட்டு வருவதற்காக அவள் இருந்த அறைக்குச் சென்றார். அங்கே அவள் அன்று கவியரங்கில் தன் மர்மக் காதலன் எழுதி யனுப்பிய தூது வெண்பாவைக் கையில் வைத்தவண்ணம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அப்பாவைக் கண்டதும் எழுந்து அவர் பாதங்களைத் தொட்டு வணங்கினாள். இனி அந்தக் கவியைத் தன் தந்தைக்குக்காட்டுவதற்கே அவள் ஆசைப்பட்டாள். அவர் தம் அரண்மனையிலும் வாழ்விலும் இத்தனை மாறுதல்களும் ஏற்படக் காரணமாக இருந்த அந்த மர்மக் கவியை ஆர்வமுடன் வாங்கிப் படித்தார்.

'ஊற்றுமலைச் செல்வி உரிமையெனக் காவலனை
நேற்றுமுதலாக நினைத்துவிட்டேன்—போற்று
கவிக்கிளியே தாமதியேன் காலமினி என்று
செவிக் கினிதாய்ச் செப்பிவா சென்று.'

'ஊற்றுமலை என்ற வீரகேரளம்புதூர் ஜமீன் அவன் செல்வம்தான். ஆனால் என் புதல்வியையும் தன் உரிமையாக ஏற்றுக் கொண்டு, இந்தக் கொலைகாரன் புதல்விக்கு வாழ்வளித்தானே' என்று எண்ணியபோது அவர் நெஞ்சம் நன்றிப் பெருக்கால் நெகிழ்ந்தது. கண்களில் நீர் ததும்பியது.

மகளை விட்டுப் பிரிவதற்கு அவர் குறித்த வேளை வந்தபோது, அவர் தந்தையுள்ளம் தடுமாறியது. அப்போது தானாதி சிதம்பரத் தேவர் வந்து அவரைத் தனியே ஓர் அறைக்கு அழைத்துச் சென்று தாம் வெளியே நின்று கொண்டார். அங்கே அவர் வரவை எதிர் பார்த்திருந்த இளைய மருது தம் மூத்த சகோதரரைக் கண்டதும் எழுந்து அவர் பாதங்களில் பணிந்து வணங்கினார். நாத் தழுதழுக்க "அண்ணா! தாங்கள் அரண்மனைவாசம் செய்து பழகி விட்டீர்கள். நானோ விடுதிகளில் சாப்பிட்டுச் சத்திரங்களில் படுத்துப் பழகி விட்டேன். அரண்மனை வாசத்திலும் சுக போகங்களிலும் இனி நான் சுகம் காண முடியாது. ஜமீனுக்குரியவரை அவர் ஆசனத்தில் கொண்டுவந்து அமர்த்தி விட்டேன். என் கடமை முடிந்தது. நான் வருகிறேன். தாங்கள் தங்கள் உயிருள்ள வரை ரங்கவிலாசத்தின் வாசற்படியைத் தாண்டக் கூடாது. நவநீத கிருஷ்ணன்மேல் ஆணை. தானாதித் தேவரிடம் தாங்கள் இரகசியங்களைச் சொல்லக் கூடாது என்பதற்காகவே அன்று தங்களை எச்சரிக்கும் படி அம்பு எய்தோம். தாங்கள் அதைக் கவனிக்கத் தவறி விட்டீர்கள். தாங்கள் வெளியேறி நான் ஒருவன் இருப்பது உலகத்துக்குத் தெரிந்தால் நம் அரண்மனை மர்மங்கள் வெளியாகி நம் குடும்ப கௌரவம் பழிப்புக்கு இடமாகும். எனக்கு விடை கொடுங்கள். நான் வருகிறேன்" என்று சொல்லி விட்டு, மறுபடியும் விழுந்து அவரை வணங்கி எழுந்து திரும்பிப் பாராமலே வெளியே இருளில் புகுந்து மறைந்தார்.

மருதப்பத் தேவர் கெட்டிமேளம் முழங்கும் வரையில் அங்கேயே கற்சிலையாக இருந்துவிட்டார். ஒருசில மனித உள்ளங்கள் அன்புக்கும் பொறுமைக்கும் மன்னிப்புக்கும் கடமைக்கும் உறைவிடமாக இருப்பதை உணர்ந்து அவர் வெட்கித் தலைகுனிந்தார்.


PLAYER'S
NAVY CUT
ENGLAND
John Player & Sons
PLAYER'S
"MEDIUM" NAVY CUT


பாண்டிமாதேவி
நா.பார்த்தசாரதி
முதல் பாகம்
சோதனை



நீலத்திரைக்கடல் ஓரத்திலே...

முதல் அத்தியாயம்

இன்பம் நிறைந்து பொங்கும் இயற்கையின் மகிழ்ச்சி வெள்ளம் போல் பொன்னிறம் போர்த்ததோர் அழகிய மாலைப்பொழுது. மேலே மஞ்சள் வானம்; கீழே நீலத்திரைக் கடல்; கரைமேல் குமரி யன்னையின் ஓங்காரம் முழங்கும் தேவகோட்டம்.

'ஏ! கடலே! சங்கமிருந்து தமிழ் வளர்த்த கபாடபுரத்தையும், தென் மதுரையையும் விழுங்கி உன் தமிழ்ப் பசியைத் தீர்த்துக் கொண்டாய்! இனி உன்னை இந்தத் தமிழ் மண்ணில் அணுவளவுகூடக் கவர விடமாட்டேன்' என்று கடலுக்கு எச்சரிக்கை செய்வது போல் குமரி கன்னியா பகவதியார் கோயிலின் மணியோசை முழங்குகிறது!

தென்பாண்டிப் புறத்தாய நாடாகிய நாஞ்சில் நாட்டின் அரசுரிமையும், அமைதியும், குழப்பமான சூழ்நிலைகளால் அவதியுற்றுக் கொண்டிருந்த போது அதற்கான நல்ல, அல்லது தீய முடிவை உருவாக்க வேண்டிய பொறுப்பு அந்த அழகிய மாலை நேரத்துக்கு ஏற்பட்டிருந்தது. தென் தமிழ் நாட்டின் காவற் பொறுப்பை ஏற்க வேண்டிய பொறுப்பு தம் வாழ்நாளில் அந்தப்புரத்திலிருந்தும் வெளியேறி யறியாத ஒரு பெண்ணின் தலையில் சுமத்தப்படவேண்டிய நிலை.

அண்டை நாட்டில், சோழ அரசன் ஆதரவற்ற தென்பாண்டி நாட்டை எப்போது கைப்பற்றலாமென்று பகைவசிகளோடு துடித்துக்கொண்டிருக்கிறான்.



சங்கொலி விம்முகிறது! ஆயிரமாயிரம் அலைக் குரல்களால் ஓலமிடும் அந்தப் பெருங் கடல் குமரித்தாயின் செந்தாமரைச் சிறு பாதங்களைப் பயபக்தியோடு எட்டித் தொட்டு மீள்வதுபோல் தீண்டி மதிற்சுவரில் மோதி மீண்டு கொண்டிருக்கின்றது.

அந்த மாலைப்போது ஒவ்வொரு நாளும் வந்து போகிற சாதாரண மாலைப் போதுகளில் ஒன்று? அல்லவே அல்ல! பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் செந்தமிழ் நாட்டின் சரித்திரத்தில் காலத்தால் அழிக்கமுடியா நினைவுக்கும் நிகழ்ச்சிக்கும் இடமாக அமைந்த மாலைப் பொழுது அது!

மகாமன்னரும், திரிபுவனச் சக்கரவர்த்தியும் சென்ற போரெல்லாம் வெற்றியே அடைந்தவருமான சடைய வர்ம பராந்தக பாண்டியர் பள்ளிப்படை எய்தி இறைவனடி சேர்ந்து விட்டார். பாண்டிய நாடு துயரத்தில் ஆழ்ந்திருக்கும் சமயம். பராந்தக பாண்டியரின் புதல்வராகிய இராச சிம்ம பாண்டியர் இளைஞர். காலஞ்சென்ற மகா மன்னரின் கோப்பெருந்தேவியான வானவன்மா தேவியார் கணவனை இழந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை. யாராவது படையெடுத்து வந்தாலும் எதிர்த்துப் போர் செய்ய இயலாத இந்த நிலையில் சோழ அரசனும், கொடும்பாளூர்க் குறுநில மன்னனும், படையெடுத்து வடபாண்டி நாட்டைக் கைப்பற்றி விட்டனர். அனுபவமும் போர்த்திறமும் இல்லாத இளைஞனை இராச சிம்ம பாண்டியன் சோழனாலும், கொடும்பாளூர்க் குறுநில மன்னனாலும் துரத்தப்பட்டு அவர்களுக்கு அஞ்சிச் சிங்களத் தீவுக்கு ஓடி விட்டான். கோப்பெருந்தேவியாகிய வானவன் மாதேவி



தென்பாண்டி நாட்டில் பறளி யாற்றின் கரையிலிருந்த புறத்தாய நாட்டுக் கோட்டையில் போய்த் தங்கி யிருந்தாள். கணவனை இழந்த கவலை, போரில் தோற்றுச் சிங்களத் தீவுக்கு ஓடிய மகனைப் பற்றிய வருத்தம், வடபாண்டி நாட்டை அபகரித்துக்கொண்ட எதிரிகள் தென்பாண்டி நாடாகிய நாஞ்சில் நாட்டுக்கும் படையெடுத்து வந்து விடுவார்களோ என்ற பயம். ஆகியவற்றால் தவித்துக் கொண்டிருந்த வானவன்மா தேவியைத் துணிவான ஒரு முடிவுக்கு வரச் செய்த பெருமை அந்த மாலை நேரத்துக்குத் தான் உண்டு.

புறத்தாய நாட்டுக் கோட்டையில் வந்து தங்கியிருந்த வானவன் மாதேவி தென்பாண்டிக் குலதெய்வமாகிய குமரி யன்னையைத் தொழுவதற்காக வந்திருந்தாள். பறளியாற்றின் கரையிலிருந்து குமரித்துறை வரையிலும் அங்கங்கே வாழையும், தோரணமும், பாளையும் கட்டி மகாராணியாரின் வருகையில் தங்களுக்குள்ள ஆர்வத்தை அலங்கரித்துக் காட்டியிருந்தனர் நாஞ்சில் நாட்டுப் பெருமக்கள். கோட்டையிலிருந்து இருபுறமும் திறந்த பல்லக்கில் பயணம் செய்ததேவியின் கண்களுக்கு வழி நெடுகிலும் அன்பு நிறைந்த மக்களின் கூட்டத்தைக் கண்டு புதிய ஊக்கம் பிறந்தது. கணவன் மறைந்த சோகமும், மகன் ஓடிப் போன துன்பமும், நினைவின் அடிப் பள்ளத்தில் அமுங்கி விட்டன.

'புவன முழுதுடைய மகாராணி வானவன் மாதேவி வாழ்க!' என்று நாஞ்சில் நாட்டு வேளாளப்பெருமக்களின் பல்லாயிரம் பல்லாயிரம் குரல்கள் வாழ்த்தொலி செய்தபோது. சோகத்தில் புழுங்கிய அவள் உள்ளம் பெருமிதமுற்றது.

'எதிரிகள் கைப்படாமல் எஞ்சியிருக்கும் தென்பாண்டிநாட்டை என் உயிரின் இறுதிமூச்சு உள்ளவரையில் அன்னியர் வசமாக விடமாட்டேன்' என்ற சபதத்தைத் தனக்குத்தானே செய்து கொண்டாள் மகாராணி வானவன்மாதேவி.

கன்னியாகுமரியை வானவன்மாதேவி அடைந்தபோது ஏற்கெனவே வேறு சில முக்கிய பிரமுகர்கள் அங்கே முன்பே வந்து காத்திருந்தனர். அப்படிக் காத்திருந்தவர்கள் எல்லோரும் நாஞ்சில் நாட்டு அரசியல், கலை, அமைதி ஆகிய பலப்பல துறைகளில் அக்கறையுள்ளவர்கள் ஆவர்.

கோட்டாற்றில் தங்கி யிருக்கும் பாண்டியர்களின் தென்திசைப் பெரும் படைக்குத் தளபதியான வல்லாளதேவன், நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்திலிருந்து வழிமுறை வழிமுறையாக அறிவுப் பணி புரிந்துவரும் ஆசிரிய மரபில் வந்த அதங்கோட்டாசிரியர், காந்தளூர்ச்சாலை மணியம்பலங் காக்கும் பவழக் கனிவாயர்,—முதலிய பிரமுகர்கள் மகாராணியாரைப் பணிவன்புடன் எதிர்கொண்டு வரவேற்றனர்.





கன்னியாகுமரிக் கடலைக் காண வேண்டுமானால் பௌர்ணமி தினத்தின் மாலை நேரத்தில் காண வேண்டும். அன்று தற்செயலாக வாய்த்த ஒரு பெரும் வாய்ப்பைப் போலப் பௌர்ணமியும் வாய்த்திருந்தது.

"மகாராணி! இப்படி வாருங்கள்; உங்களுக்கு ஒரு அதிசயத்தைக் காட்டுகிறேன்" என்று சிரித்துக் கொண்டே கூறினார் அதங்கோட்டாசிரியர். வானவன்மா தேவியையும் மற்றவர்களையும் கடலோரத்துப் பாறை ஒன்றுக்கு அழைத்துச் சென்று கிழக்கிலும், மேற்கிலும் சுட்டிக் காட்டினார் அவர்.

மூன்று புறமும் நீல நெடுங்கடல் தரங்கங்கள் என்னும் கரங்கொட்டிப் பண்பாடும் அந்த இடத்தில் அவ்வற்புதக் காட்சியை மகாராணி அதற்குமுன் கண்டதில்லை. "ஆசிரியப்பெருந்தகையே! இது என்ன விந்தை? இந்த இடத்தில் மட்டும் இரண்டு சூரியன்களா?" என்று கிழக்கிலும் மேற்கிலும் தனித்தனியே கடலின் இரு கோடி விளிம்புகளிலும் தெரியும் இரண்டு ஒளி வட்டங்களைப் பார்த்துக்கொண்டே அதங்கோட்டாசிரியரை வியப்புடன் கேட்டாள் அவள்.

அந்தக் கேள்வியைக் கேட்டு அதங்கோட்டாசிரியர் சிரித்தார்:

"மகாராணி! இவை இரு சூரியன்கள் அல்ல. ஒன்று சந்திரன்; மற்றொன்று சூரியன்; பௌர்ணமி நாட்களில் மட்டும் குமரித்தாய் இந்த அற்புதக் காட்சியை முழு அழகோடு நமக்குக் காட்டுகிறாள். சந்திரோதயத்தையும், சூரியாஸ்தமனத்தையும், ஒரே சமயத்தில் இந்த இடத்தில் நின்று காணலாம். சக்கரவர்த்தி இங்கு வரும்போதெல்லாம் பௌர்ணமி நாளாகப் பார்த்துத்தான் வருவார். எத்தனை முறை பார்த்தாலும் இது அவருக்கு அலுக்காது."

காலஞ்சென்ற கணவரின் பேச்சைக் கேட்க நேர்ந்ததும் மகாராணியாருக்குக் கண் கலங்கி விட்டது. அதங்கோட்டாசிரியர் உதட்டைக் கடித்துக் கொண்டார். பேச்சுப் போக்கில் தாம் செய்த தவறு அவருக்குப் புரிந்து விட்டது.

"அடாடா! மகாராணியாருக்கு வருத்தத்தை நினைவூட்டும்படியான விதத்தில் அல்லவா சக்கரவர்த்தியைப் பற்றி ஞாபகப்படுத்தி விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்" என்று அவர் மெல்லிய குரலில் கூறினார்.

வானவன்மாதேவி கண்களைத் துடைத்துக் கொண்டாள். மறுபடியும் அந்த அதிசயக் காட்சியைப் பார்த்தாள். அதே சமயத்தில் தளபதி வல்லாளதேவன் மற்றொரு அதிசயக் காட்சியைக் கண் இமைக்காமல் உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றான்.

எந்தப் பாறையில் நின்று மகாராணியாரும், மற்றவர்களும், கடலில் தென்பட்ட அதிசயத்தை நோக்கிக் கொண்டிருந்தார்களோ, அதன் வடமேற்கு மூலையில் மாட்டுக் கொம்புபோலக் கீழே விரிந்து மேலே நுனிகள் ஒன்றுகூடும் பாறைகள் இரண்டு இருந்தன. அந்தப் பாறைகளின் முக்கோண வடிவான இடைவெளியில் இரண்டு சிவப்புத் தலைப்பாகைகள் தெரிந்தன. பாறையின் மேல் நின்ற மற்றவர்களுக்கு அது கண் பார்வையிலே பட்டிருக்க முடியாது. பாறையின் உயர்ந்த இடம் எதுவோ, அதில் வல்லாளதேவன் நின்று கொண்டிருந்ததனால் தற்செயலாக அது அவன் பார்வையில் பட்டது. தங்களோடு வந்திருந்த பரிவாரத்தைச் சேர்ந்த வீரர்களில் யாராவது இருவர் கடற் காட்சியை வேடிக்கை பார்ப்பதற்காக இறங்கிப் போய் அந்தப் பாறை இடுக்கில் நின்று கொண்டிருக்கிறார்களோ என்ற இயல்பான எண்ணம் தளபதிக்கு உண்டாயிற்று. 'பரிவாரத்து வீரர்கள் கோவில் வாசலிலேயே தங்கி விட்டார்களே! தவிர அவர்களில் யாரும் சிவப்புத் தலைப்பாகை அணிந்தவர்கள் இல்லையே?' என்ற ஐயம் மெல்ல அவன் மனத்தில் எழுந்தது. 'தான், அதங்கோட்டாசிரியர், மகாராணியார், பவழக் கனிவாயர்,—ஆகிய நால்வரைத் தவிர வேறு வீரர்கள் எவரும் கடற்கரைப் பாறைக்கு வரவே இல்லை' என்று உறுதியாகத் தெரிந்து கொண்ட பின் தளபதியின் சந்தேகம் வலுப்பட்டது. பாறையை ஒட்டித் திமீர் திடீரென்று ஆள் உயரத்துக்கு அலைகள் எழும்போது அந்தத் தலைப்பாகைகள் அவன் கண் பார்வைக்குத் தெரியாமல் மறைந்து விடும். அலைகள் தணிந்த போது மறுபடியும் தெரியும்.

தளபதி வல்லாளதேவன் நீண்ட நேரமாக அந்தப் பாறை இடுக்கையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். மற்ற மூவரும் தேவியின் ஆலயத்துக்குத் திரும்புவதற்காகப் பாறையிலிருந்து இறங்கத் தொடங்கி விட்டனர்.

"என்ன ஐயா, தளபதியாரே! கோவிலுக்கு வரவில்லையா? வீரர்களுக்கு அழகுணர்ச்சி குறைவு என்று சொல்லுவார்கள். நீர், கடலின் அழகை வைத்த கண் வாங்காமல் காண்பதைப் பார்த்தால் வீரர்களுக்குத் தான் அழகு

உணர்ச்சி அதிகமென்று துணிந்து கூறி விடலாம் போலிருக்கிறதே?'' என்றார் அதங்கோட்டாசிரியர்.

''அழகை எங்கே அவர் பார்க்கப் போகிறார்? இந்தக் கடலில் எத்தனை போர்க் கப்பல்களை எப்படி யெப்படி யெல்லாம் செலுத்தலாம் என்பதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பார்'' என்றார் பவழக்கனிவாயர்.

''உங்கள் இரண்டு பேருடைய அனுமானங்களுமே தவறு. நான் வேறொரு காரியமாக நிற்கிறேன். சிறிது தாமதமாகலாம். நீங்கள் மகாராணியாரை ஆலயத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று தளபதி அவர்களுக்கு மறுமொழி கூறி அனுப்பினான்.

அவர்கள் மூவரும் பாறையிலிருந்து இறங்கிச் செல்லத் தொடங்கிய அதே சமயத்தில் கீழே கடற்கரைப் பாறையின் பிளவில் தெரிந்த அந்தச் சிவப்புத் தலைப்பாகைகள் மெல்ல நகர்ந்து அசைவதை வல்லாளதேவன் கண்டான். எண்ணற்ற வீரச் செயல்களைச் செய்து பழக்கப்பட்டவனும், தென்கடற் கோடியில் பல கடற்போர்களில் வாகை சூடியவனுமான தென்திசைத் தளபதியின் மனத்தில் இனம் புரியாத திகில் பரவியது. சந்தேகங்களும், குழப்பங்களும் அடுக்கடுக்காகத் தோன்றின. மாலை ஒளி குறைந்து பொழுது மங்கிக் கொண்டே வந்தது. ஆனாலும் முழுமதியின் நிலா ஒளியில் அந்த இடத்தை அவன் நன்றாகப் பார்க்க முடிந்தது.

பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு பெரிய அலை பாய்ந்து வந்து அந்தப் பாறைப் பிளவை மறைத்தது. வல்லாளதேவன் திரும்பிப் பார்த்தான். கோவில் வாயிலில் கண்ணைக் கவரும் தீபாலங்காரங்களுக் கிடையே அர்ச்சகர்களின் வாழ்த்தொலியும், மங்கல வாத்தியங்களின் இன்னிசையும், அடிகள்மார் பாடும் பண்ணிறைந்த பாட்டொலியுமாக, மகாராணியாருக்கு வரவேற்பு நடந்து கொண்டிருந்தது.

ஒரே ஒரு கணம்! அவன் மனத்தில் ஒரு சிறிய போராட்டம்: கோவில் வாயிலுக்குப் போய்க் கோலாகலமான வரவேற்பில் கலந்து கொள்வதா? கீழே இறங்கி அந்தக் கடலோரத்துப் பாறைப் பிளவில் மறைந்து கொண்டிருக்கும் 'தலைப்பாகைகளை'ப் பின்தொடர்வதா? இன்னும் ஓரிரு விநாடிகள் தாமதித்தாலும் மேடும் பள்ளமுமாக முண்டும், முடிச்சுமாக நெடுந்தூரம் பரவியிருக்கும் அந்தப் பாறைப் பிரதேசத்தில் குறிப்பிட்ட உருவங்கள் எந்த வழியாகச் சென்று எப்படி மறையுமென்று கூற முடியாது. ஆர அமரச் சிந்தித்து நிதானமாக ஒரு முடிவுக்கு வர அவனுக்கு அவகாசமில்லை.

அரைப் பனை உயரமுள்ள அந்தப் பாறை விளிம்புக்கு வந்து வேகமாகக் கீழே மணற் பரப்பில் தாவிக் குதித்தான். முழங்காலளவு கடல் நீரில் நடந்து சென்றால்தான் அந்தப் பாறைப் பிளவை நெருங்க முடியும். தளபதியின் கால்களில் அதற்கு முன்பில்லாத சுறுசுறுப்பும் விரைவும் ஏற்பட்டன. நீரைக் கடந்து செல்லும்போது குறுக்கிட்ட இரண்டொரு அலைகள் அவனை நன்றாக நனைத்து விட்டன. வேகமாக வந்து முகத்தில் அறைந்த கடல் நீர் மூக்கின் வழியே வாயில் புகுந்து உப்புக்கரித்தது. கண்கள் காந்தின. எதிரே பார்க்காமல் நடந்ததால் பாறைகளில் இடித்து முழங்காலில் இரத்தம் கசிந்தது.

இடுப்பிலிருந்த உடைவாளை இறுக்கிப் பிடித்துக் கொண்டு தட்டுத் தடுமாறி ஏறி முன்பு சிவப்புத் தலைப்பாகைகள் தெரிந்த பாறையின் இடைவெளியில் குதித்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை.

''இதென்ன? மாயமா? மந்திரமா? இவ்வளவு வேகமாக அந்த உருவங்கள் எப்படி வெளியேறியிருக்க முடியும்? ஒரு வேளை அவை பொய்த் தோற்றமாக நம்முடைய கண்களுக்கு மட்டும் தெரிந்த பிரமையா?'' என்று எண்ணிக் கொண்டே மற்றோர் வழியாகக் கீழே செல்லும் பாதையில் வேகமாக நடந்தான். இரண்டு மூன்று அடிகளே நடந்திருப்பான். வழியின் இருப்பத்திலிருந்து இருபுறமும் இரண்டு வாள் நுனிகள் பாய்ந்து நீண்டன!

இரண்டாம் அத்தியாயம்

ஆலயத்தில் ஆபத்து!

ஆலயத்து வாசலில் மகாராணி வானவன்மாதேவியாருக்கு வரவேற்பு நடந்து கொண்டிருந்த போது வேறு இரண்டு புதிய பெண்கள் அங்கே பல்லக்கு மூலமாக வந்து சேர்ந்தனர். இந்தக் கதையின் எதிர்கால நிகழ்ச்சிகளில் எத்தனையோ பல மாறுதல்களை உண்டாக்கப் போகும் அழகும், இளமையும் நிறைந்த அந்தப் பெண்மணிகளை இங்கேயே நேயர்களுக்கு அறிமுகப்


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
தராசு மார்க்
உத்திரவாதமுள்ளவை
எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.

படுத்திவிட வேண்டியது அவசியம்தான். தரைப் பிரதேசத்தின் முடிவிடமாகிய அந்தக் கன்னியாக்குமரி— கோவில் முன்றிலில் வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், மூன்று பெரிய சாலைகள் திரிசூலத்தின் நுனியைப் போல வந்து ஒன்றுகூடின.

நேர் வடக்கே செல்லும் சாலை புறத்தாய நாட்டுக் கோட்டை வழியே மதுரைக்கும் அதற்கப்பால் உறையூர், காஞ்சி, முதலிய வடபால் நாட்டுத் தலைநகரங்களுக்கும் போவதற்குரிய மிக முக்கியமான இராஜபாட்டை.

கிழக்கே செல்லும் சாலை அழகிய பாண்டியபுரம், மணவாளக் குறிஞ்சி, கோட்டாறு முதலிய நாஞ்சில் நாட்டுக் கீழ்ப்பகுதி ஊர்களுக்குப் போவது.

மேற்கே செல்லும் சாலை; சரித்திர ஏடுகளில் இடந்தோறும் பொன் எழுத்துக்களால் எழுதப்பட வேண்டிய பெருமையை உடையது. அதுவே காந்தளூர்ச்சாலை. கடற்கரை ஓரமாகவே மேற்கே சென்று தென்மேற்குக் கோடியிலுள்ள விழிஞம் என்னும் துறைமுகத்தோடு முடிவடைகிறது அது. தென் பாண்டி நாட்டின் படையெடுப்புக்களுக்கும், வெற்றி தோல்விகளுக்கும் இந்த முப்பெரும் இராஜ பாட்டைகள் எவ்வளவுக்கு எவ்வளவு காரணமாக இருந்திருக்கின்றன என்பதைக் கதைப் போக்கில் நேயர்கள் தெரிந்து கொள்ளுவார்கள்.



மகாராணியாரைக் கோவில் வாயிலில் நிறுத்தி விட்டு நடுவே இந்தச் சாலைகளைப் பற்றிக் கூற நேர்ந்ததற்குக் காரணம், கதையில் புதிதாகப் பிரவேசிக்கும் பெண்கள் இருவரும் முறையே கீழ்ப்புறத்துச் சாலையிலிருந்தும், மேல்புறத்துச் சாலையிலிருந்தும், பல்லக்குகளில் வந்து இறங்குவதுதான்.

கோவிலுக்குள்ளே செல்வதற்கு இருந்த வானவன்மாதேவி, அதங்கோட்டாசிரியர் முதலியவர்கள் இருபுறத்துச் சாலைகளிலிருந்தும் பல்லக்குகள் வருவதைப் பார்த்து விட்டுச் சற்றுத் தயங்கி நின்றனர்.


சிறிது தொலைவில் அந்தப் பல்லக்குகள் வந்து கொண்டிருக்கும்போதே, அவைகளில் யாராயிருக்கலாம் என்பதைப் பற்றி அதங்கோட்டாசிரியர் சொல்லி விட்டார். "மகாராணீ! என்னுடைய பெண் அநங்கவிலாசினி தங்களைத் தரிசிப்பதற்காகக் காலையிலேயே என்னோடு புறப்பட்டு வருகிறேனென்றாள். நான் காந்தளூர் மணியம்பலத்துக்குச் சென்று பவழக் கனிவாயரையும் அழைத்துக் கொண்டு வர வேண்டியிருந்ததனால் அவளை உடன் அழைத்துக்கொண்டு வர முடியாமற் போய் விட்டது. மேற்கிலிருந்து வருகிற பல்லக்கு அவளுடையதாகத்தான் இருக்க வேண்டும். கிழக்கேயிருந்து வருகிற பல்லக்கு வல்லாள தேவனின் தங்கை பகவதியினுடையது. நீங்கள் வருவதற்கு முன் நானும் வல்லாளனும் பேசிக் கொண்டிருந்த போது, தன் தங்கை உங்களைக் காண வரப்போவதாகச் சொன்னான்" என்று அதங்கோட்டாசிரியர் மகாராணி வானவன்மா தேவியிடம் கூறிய அநுமானம் பிழையில்லாமல் இருந்தது.

"மிகவும் நல்லது! தென் பாண்டி நாட்டில் தமிழறிவு பரப்பும் உங்கள் மகளையும், வீரப் பொறுப்பை மேற்கொண்டிருக்கும் தளபதியின் சகோதரியையும் காணும் பேறு எனக்குக் கிடைத்ததே; அது என்னுடைய பாக்கியம்" என்று உபசாரமாகச் சொன்னாள் ராணி வானவன்மாதேவி.

கோவிலுக் கெதிரே கூப்பிடு தூரத்தில் இரண்டு சாலைகளும் ஒன்று கூடுமிடத்தில் பல்லக்குகள் இறக்கிவைக்கப் பட்டன. இரண்டு பெண்களும் கீழே இறங்கி மகாராணிக்கு மரியாதை செய்யும் பாவனையில் அடக்க ஒடுக்கமாக நடந்துவந்தனர். அவர்களில் வலதுபுறமாக நடந்து வருகிறாளே; செந்தாழை மடல்போன்ற நிறமும் சிரிப்பைச் சிறைப்பிடித்து வைத்திருக்கும் செவ்வாயுமாக; அவள்தான் அதங்கோட்டாசிரியரின் மகள் அநங்க விலாசினி. கொடி துவள்வதுபோல் ஒற்றை நாடியான உடல். ஒரு முறை பார்த்தால் எவ்வளவு மறதியுள்ளவர்களுக்கும் நன்றாக மனத்தில் பதிந்து விடக்கூடிய எழில் பொலியும் வட்ட மதி முகம். அஞ்சனம் தீட்டிய கரு நெடுங் கண்கள். இப்படித்தான் நடக்க வேண்டுமென்று மாதிரிக்கு நடந்து காட்டுவது போல் மானின் குழைவும் அன்னத்தின் மென்மையும் கலந்த ஒரு வகை நடையில் அவள் மெல்ல நடந்து வந்தாள். காலடி பெயர்த்து வைக்கும் போதெல்லாம் 'இந்தப் பட்டுப் பாதத்தின் மேல்தொட்

டுத் தழுவும் உரிமை எனக்கு இருக்கிறது' என்று தன் பெருமையை வாய்க்கு வாய் சொல்லிக் கொள்வது போலச் சிலம்பு ஒலித்தது. கூந்தலைக் கொண்டையாக உயர்த்தி முடிந்து அதில் பெயர் பெற்ற நாஞ்சில் நாட்டு முல்லைப் பூக்களின் சரத்தைப் பிறைச் சந்திரவடிவில் சூடிக் கொண்டிருந்தாள். செம்பொன்னில் வார்த்தெடுத்த உயிர்ச் சிலை ஒன்று நடந்து வருவது போல் அதங்கோட்டாசிரியரின் மகள் வந்து கொண்டிருந்தாள் என்றால் போதும். அதற்கு மேல் விவரிக்கத் தேவையில்லை.

இனி அவளுக்கு இடது புறம் மாநிறமும் சற்றே உயர்ந்து வாளித்த தோற்றமுமாக நடந்து வரும் தென்பாண்டித் தளபதியின் தங்கை பகவதியைக் காணலாம். அதங் கோட்டாசிரியரின் மகளைப் புனிதமான பாரிஜாதப் பூவின் அழகுக்கு ஒப்பிட்டால் தளபதியின் தங்கையை மோந்து பார்க்குமளவில் மனத்தை மயக்கிப் போதையூட்டும் குடை மல்லிகைப் பூவுக்குத் தான் ஒப்பிட வேண்டும்.



பாலைப்பருகினால் கழுத்து வழியே பால் தொண்டைக்குள் இறங்குவது தெரியும் என்று சொல்லும்படியான அவ்வளவு சிவப்புடையவள் விலாசினி. பகவதியோ மாநிறந்தான். ஆனால் விலாசினியின் அழகிலும் இல்லாத ஒருவகை மிடுக்கும், கம்பீரமும் பகவதியின் கட்டமைந்த தோற்றத்தில் பொருந்தியிருந்தன. நிமிர்ந்த நடை. நேரான பார்வை. கணீரென்ற பேச்சு; கலீரென்ற சிரிப்பு; இளமைப் பருவத்தின் துடிதுடிப்பு ஒவ்வோர் அணுவிலும் நிறைந்து பொங்கிப் பூரித்து நிற்கும் அமுத கலசத்தைப் போன்ற உடல். கோடு கிழித்தாற் போன்ற புருவங்களின் கீழே சேல் மீன்களென ஆண்மையின் நெஞ்சாழத்தைக் கிழித்துப் பார்க்கும் கூரிய விழிகள். நீண்ட நாசி. அலட்சிய பாவமான ஒருவித தெளிவு திகழும் வாயிதழ்கள். பெண்யானை நடந்து வருவது போன்ற நடை.

'' சந்தேகமே இல்லை! இவள் ஒரு வீர புருஷனின் தங்கைதான்'' என்று பார்த்தவுடனே சொல்லிவிடலாம்.

பகவதியும், விலாசினியும் மேகமும், மின்னலும் அருகருகே நடந்து சென்றது போல் சென்று கோவில் வாசலில் மகாராணியை வணங்கினார்கள்.

'' குழந்தைகளே! வாருங்கள். உங்கள் பல்லக்குகள் வருவதைப் பார்த்து விட்டுத்தான் உள்ளே போகாமல் நிற்கிறோம். உங்களைப் பார்த்ததில் மிகவும் மகிழ்ச்சி. இப்போதுதான் நீங்கள் இருவரும் வருகிற செய்தியை அதங்கோட்டாசிரியர் சொன்னார். வாருங்கள். கோவிலுக்குள் சென்று தரிசனத்தை முடித்துக் கொண்டு வருவோம்'' என்று சொல்லி அந்த இரு பெண்களையும் தன் இரு புறமும் அணைத்தாற் போலக் கைகளால் தழுவிக் கொண்டு கோவிலுக்குள் நுழைந்தாள் மகாராணி.

'' ஆசிரியரே! வல்லாளதேவனை ஏன் இன்னும் காணவில்லை? அந்தப் பாறையில் நின்று கொண்டு இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறான்?'' என்று ஆலயத்துக்குள் நுழையும் போது பவழக்கனிவாயர் அதங்கோட்டாசிரியர் காது அருகே கேட்டார்.

'' வராமல்எங்கேபோகப் போகிறான்? அவனுடைய தங்கை வேறு வந்திருக்கிறாள். ஏதாவது முக்கியமான காரியம் இருக்கும். விரைவில் வந்து விடுவான். நீங்கள் வாருங்கள். நாம் உள்ளே போகலாம்'' என்று ஆசிரியர் அவருக்குச் சமாதானம் கூறினார்.

கடற்கரையோரக் கோவிலாகையினால் மிகவும் தணிவாகக் கட்டப்பட்டிருந்தது. மதிற் சுவர்களில் பலகணிகள் அமையப் பெறவில்லை. உள்ளே வெளிச்சம் வருவதற்காக மேற்புறத்து விதானச் சுவரில் வட்ட வட்டமாக இடைவெளிகள் விடப்பட்டிருந்தன.

காற்று நுழைவதற்கு வசதிகளே இல்லாமலிருந்தும் கடலை ஒட்டி இருந்ததனால் குளிர்ச்சியாக இருந்தது. மகாராணியாரின் விஜயத்தை முன்னிட்டுக் கோவிலுக்குள் விசேஷ தீபாலங்காரங்கள் செய்திருந்த போதிலும், மூலை முடுக்குகளில் தேங்கி நின்ற பயங்கர இருளைச் சின்னஞ் சிறு தீபங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

கல்பகோடி காலமாக மூன்று மகா சமுத்திரங்கள் ஒன்றுசேரும் அந்த இடத்தில் கன்னித் தவம் இயற்றிக் கொண்டிருக்கும் குமரித் தாயின் தரிசனம் வானவன்மாதேவியின் மனத்தில் நிர்மலமானதோர் சாந்தியை உண்டாக்கியது. கர்ப்பக்கிருகத்தில் குமரித் தேவியின் நெற்றியிலிருந்து மின்னல் கீற்றுப் போல் வைர வைடூரியங்களில் இழைத்த திலகம் ஒளி வீசி மின்னியது.

''அரசி! நான் தமிழ் நிலத்தின் எல்லையைக் காக்கும் தமிழ்த்தேவி. நீ தமிழகத்தையே ஒரு குடைக்கீழ் ஆண்ட மன்னாதி மன்னனான ஒருவனை மணந்த பாண்டிமாதேவி. அஞ்சாதே! என் அருள் உனக்கு உண்டு'' என்று திருநுதலின் புருவங்களுக்கு இடையே அருளொளி வீசும் திலகச் சுடர் சொல்லாமல் சொல்லுகிறதா?

''தேவி! இந்தச் சந்நிதிக்கு நேரே கடல் தெரியும்படியாக மதிற் சுவரில் ஒரு துவாரம் இருந்ததாம். அன்னையின் திலகச் சுடரொளி கண்டு கவரப்பட்ட எத்தனையோ மரக்கலங்களும், கப்பல்களும், போக வேண்டிய துறை இதுதானோ என மயங்கி வந்து பாறைகளில் மோதிச் சிதைந்த துண்டாம். இப்போது அந்தத் துவாரத்தை மூடிவிட்டார்கள்'' என்று கூறினார் பவழக் கனிவாயர்.

பக்தி பரவசம் நிறைந்த முக பாவத்தோடு சந்நிதியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மகாராணி பவழக்கனிவாயர் கூறியதைக் கேட்டுத் தலையசைத்தாள். தன் இருபுறமும் நின்று கொண்டிருந்த இளம் பெண்களைப் பார்த்து ஒரு முறை புன்முறுவல் பூத்தாள். பகவதியும் விலாசினியும் பதிலுக்கு மரியாதையாகப் புன்னகை செய்தார்கள்.

அர்ச்சகர் எல்லோருக்கும் குங்குமம், சந்தனம் ஆகிய பிரசாதங்களைக் கொண்டு வந்து அளித்தார். குங்குமம் முதலியவற்றை அர்ச்சகர் கொண்டு வந்தபோது மகாராணி வானமாதேவி கைகூப்பி வணங்கி விட்டுத் திருநீறு மட்டும் எடுத்து அணிந்து கொண்டாள்.

'' இந்தக் குழந்தைகளுக்கு நிறையக் குங்குமமும், சந்தனமும் கொடுங்கள். இவர்கள் தாம் பூவும் குங்குமமுமாகச் சந்தனமும் மஞ்சளும் பூசிப் பெருவாழ்வு வாழ வேண்டியவர்கள். எங்களையெல்லாம் விடக் கன்னியா குமரியம்மன் மேல் இவர்களுக்குத் தான் உரிமை அதிகம். அவளைப் போலவே இவர்களும் கன்னிகைகள். ஆனால் என்றைக்குமே அப்படி இருந்துவிட மாட்டார்



கள்!'' என்று மகாராணி சிரித்துக் கொண்டே கூறியபோது எல்லோரும் சிரித்தார்கள். தாழ்வான குறுகிய அந்த முன் மண்டபத்தில் ஏக காலத்தில் அத்தனை சிரிப்பொலிகளும் எதிரொலித்தன. கேலிக்கு ஆளான பகவதியும், விலாசினியும் கன்னஞ் சிவக்க முறுவலித்தவாறு தலை குனிந்தார்கள். குனிந்த தலை நிமிராமலே குங்குமமும், சந்தனமும் எடுத்துக் கொண்டார்கள்.

''குழந்தைகளே! வாருங்கள். கருப்பக்கிருகத்தைச் சுற்றியிருக்கும் இந்தப் பிராகாரத்தை வலம் வரலாம்'' என்று அவர்கள் இருவரையும் இரண்டு கைகளிலும் பற்றிக் கொண்டு பிராகாரத்துக்குள் நுழைந்தாள் மகாராணி.

இருண்டு குறுகலாயிருந்த அந்தச் சிறிய பிராகாரத்தில் ஒளிமங்கிய அகல் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. மகாராணியாரும் பெண்கள் இருவரும்



தவிர மற்றவர்கள் எல்லோரும் மண்டபத்திலேயே நின்று விட்டார்கள். குறுகலான வழியில் எல்லோரும் ஒரே சமயத்தில் நுழைந்தால் இடையூறாக இருக்குமென்று எண்ணி அதங்கோட்டாசிரியர், பவழக்கனிவாயர் முதலியவர்கள் வெளியே நின்று கொண்டனர்.

விலாஸினியிடமும், பகவதியிடமும் ஏதேதோ சிரித்துப் பேசிக் கொண்டே பிராகாரத்தில் நடந்தாள் மகாராணி. பிராகாரத்தின் மேற்புறச் சுவரில் மூன்று பாகத்துக்கு ஒரு துவாரமாக வட்டத் துவாரங்கள் இருந்தன.

அந்த வட்ட இடைவெளிகளின் மூலம் நீலவானத்தின் சின்னஞ் சிறு நட்சத்திரப் பூக்கள் பௌர்ணமி நிலா ஒளியில் அழகாகத் தோன்றின.

மகாராணியின் கையைப் பிடித்துக் கொண்டே நடந்த பகவதி மேலே பராக்குப் பார்த்தவாறே சென்றாள். விலாசினி தரையைப் பார்த்துக் கொண்டே குனிந்து சென்றாள். அவர்கள் இருவருக்கும் நடுவே தியானத்தினால் குவிந்த கண்ணிமைகளுடனே பரவசத்தோடு மெல்ல நடந்து கொண்டிருந்தாள் மகாராணி வானமாதேவி.

பிராகாரத்தின் தெற்கு மூலையும், வடக்கு மூலையும் சந்திக்கிற திருப்பத்தை நெருங்கியபோது மேலே பார்த்துக் கொண்டே வந்த பகவதி 'வீல்' என்று பயங்கரமாக அலறினாள்! முன்னால் நடந்துகொண்டிருந்த மகாராணியாரையும் விலாசினியையும் குபீரென்று பாய்ந்து நாலைந்தடி பின்னுக்கு இழுத்துக் கீழே தள்ளினாள். தள்ளிய வேகத்தில் அவர்களைப் போலவே தானும் நிலைகுலைந்து கல் தளத்தில் விழுந்தாள். ''என்ன? என்ன? ஏன் இப்படிச் செய்தாய்?'' என்று மகாராணியும், விலாசினியும் இரைந்த குரலில் கத்தினார்கள். ஆனால் அவர்களுக்குப் பகவதி பதில் சொல்வதற்கு முன்பே அதன் காரணம் கண் காணத் தெரிந்து விட்டது.

பிராகாரத் திருப்பத்தின் மேற்புறத்துத் துவாரத்தில் கூர்மையான பெரிய வேல் நுனி ஒன்றும் அதைப் பிடித்துக் கொண்டிருக்கும் வலிமை வாய்ந்த முரட்டுக் கையும் தெரிந்தன. மறுகணம் பளீர் என்ற ஓசையோடு அந்த வேல் கல் தளத்தில் விழுந்து முனை மழுங்கியது.

அவர்கள் தொடர்ந்து சென்றிருந்தால் மூவரில் நடுநாயகமாக நடந்த மகாராணியாரின் மேல் பாய்ந்திருக்க வேண்டிய வேல் அது. வேல் கல்தளத்தில் விழுந்த ஓசை அடங்குவதற்குள் மேலே விதானத்தில் யாரோ ஆள் ஓடும் ஓசை திடுதிடுவென்று கேட்டது.

அதற்குள் பகவதியின் அலறலையும் கல்லில் வேல் விழுந்ததனால் உண்டான ஓசையும் கேட்டு முன் மண்டபத்தில் நின்று கொண்டிருந்த அதங்கோட்டாசிரியர் முதலியவர்களும் மற்ற வீரர்களும் பதறியடித்துக் கொண்டு பிராகாரத்துக்குள் வேகமாக ஓடிவந்தனர்!

''என்ன? என்ன? இங்கே என்ன நடந்தது? ஏது இந்த வேல்?'' என்ற கேள்விக் குரல்கள் கிளம்பின.

''மேலே இருந்து யாரோ துவாரத்தின் வழியாக வேல் எறிந்துவிட்டு ஓடுகிறான். மதில் வழியாக மேலே ஏறிப்பிடியுங்கள். ஓடுங்கள்!'' என்று வீரர்களை நோக்கிக் கூச்சலிட்டாள் பகவதி. (தொடரும்)



இலங்கையில் கிடைக்குமிடம்: AVRA Ltd., Colombo

ரேடியோ ஸிலோன் :—41·72 மீட்டரில் "இசை விருந்து"
வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6-30 லிருந்து 6-45 வரை



அன்பின் விலை

ஸ்ரீமதி எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

"சாப்பிடுங்கள்!" என்றான் ராமு. கல்லாப் பெட்டிக்கு எதிரே டபராவில் பால் ஆறிக் கொண்டிருந்தது.

மணி ஒன்பது இருக்கலாம். பலகாரத் தட்டுகளெல்லாம் காலியாகிவிட்டன. சினிமாக் கொட்டகையில் முதல் காட்சி முடிந்தது. ஜனங்கள் வந்து கேட்டால் கொடுக்கப் பாலும் டீயும் மட்டும் தயாராக இருந்தன. பின்புறம் பாத்திரங்களைக் கழுவி அடுக்கும் சத்தம் கேட்டது. காலையில் இட்டிலி போடுவதற்கு மாவரைத்து முடிந்துவிட்டது என்பது, கல் உரல் ஆடும் சத்தம் நின்றுவிட்டதிலிருந்து தெரிந்தது.

கொஞ்சம் மங்கலாக எரிந்த பெட்ரோமாக்ஸ் விளக்கைச் சுற்றி நாலைந்து கொசுக்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அதையே பார்த்துக்கொண்டிருந்தான் ராமு.

பெரியவர் டபராவைக் காலி செய்து விட்டார். முழுதும் கரைபடாத சர்க்கரை அடியில் குழம்பாய், அரைகுறையாய் நின்றது.

"ஏய்! வட்டா ஜோடியை உள்ளே கொண்டு போ!" என்று உள்ளே நோக்கிக் குரல் கொடுத்து விட்டு, "அப்புறம்?" என்று அவரைப் பார்த்து ஒரு தடவை சிரித்தான் ராமு. வெற்றிலைக் காவி அவன் பல்லுக்கு மெருகிட்டுக்கொண்டிருந்தது.

"அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். உனக்கும் வயது முப்பத்தைந்து ஆயாச்சு! யோசித்துப் பார். எத்தனை நாட்களுக்கு இப்படி ஒண்டிக் கட்டையாகக் காலம் தள்ள முடியும்? மற்றதை யெல்லாம் விடு. தலையைக் காலே வலித்தால் ஒரு வெந்நீர் வைத்துக் கொடுக்க ஆள் யார்?"

"கடைதான் இருக்கிறதே, மாமா!"

"உடம்பு நன்றாக இருக்கிற வரைக்கும் தான் கடை. கடை இருந்தால்தான் ஆள், உபசாரம் எல்லாம். கமலம் இருந்தவரைக்கும் உனக்கு எவ்வளவு சௌகரியமாக இருந்தது என்று யோசித்துப் பார். அவள் என்றைக்கும் உன்னோடு இருக்க முடியுமா? பெண்ணென்று இருந்தால் அவள் பிறர் வீட்டுச் சொத்துத் தானே, அப்பா!"

"நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள், மாமா!" என்றான் ராமு.

"நான் எதைச் சொல்லுவேன்? உனக்கு நல்லதைத் தான் சொல்லுவேன். காலா காலத்தில் ஒரு கலியாணத்தைப் பண்ணிக் கொள். உனக்கும் வயசாச்சு. காலந்தாழ்த்திணுக் கூடாது."

"பெண் கூடப் பார்த்து வைத்திருப்பீர்கள் போல இருக்கிறதே?"

"ஆமாம் எனக்குத் தெரிந்த இடம். சுற்றி வளைத்துப் பார்த்தால் ஒரு வகையில் உறவு என்று கூடச் சொல்லலாம். நம்ம குடும்ப சமாசாரம் எல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அடக்கமான பெண். பார்வைக்குக் களையாக இருப்பாள். நல்ல சுபாவம். பாட்டுக்கூட அவளுக்கு வரும்."

"பார்க்கலாம், மாமா!"

சினிமாக் கொட்டகையில் முதல் காட்சி முடிந்து விட்டது. கடையிலும் கூட்டம் சேர ஆரம்பித்து விட்டது. மேஜைக்கு மேஜை ஆவி பறக்கும் சூடான தேநீரின் நறுமணம்.

நெடுநாளையப் பழக்கத்தில் கைதானாகவே சில்லறையை வாங்கிச் சரிபார்த்துப் போட்டுக் கொண்டிருந்தது. காலை விழும் கணக்கு அவனை அறியாமலே மனத்தில் படிந்து அது சில்லறையை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டது. அவன் நினைவு பட்டம் கட்டறுந்துக் கொண்டு பழைய நாட்களைப் பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்து நின்றது.

அவன் தாயார் கண்ணை மூடும்போது அவனுக்குப் பதினெட்டு வயது. கமலம் அப்போது ஆறு வயதுக் குழந்தை. இரண்டுங்கெட்டானாக நிலைமை புரிந்தும் புரியாததுமாக இருந்த வயது. கமலத்துக்கு ஒன்றுமே தெரியவில்லை. விசித்து விசித்து அழுததோடு சரி. 'அம்மா இனிமேல் வரமாட்டாள்' என்று தெரியும். அதன் காரணம் தெரியாது.

அவளுக்கு அவன்தான் துணை. அவனுக்கும் அவள்தான் துணை. விளக்கில்லாமல் இருட்டில் அடியெடுத்து வைக்கிற மாதிரிதான் தட்டுத் தடுமாறிக் கொண்டு அவனும் வாழ்க்கையில் புகுந்தான். தாயார் உயிரோடு இருந்த நாட்களில் எப்படித்தான் அவள் குடும்பத்தை நடத்திக் கொண்டு வந்தாளோ?

அதை நினைக்க அவனுக்கே இப்போது மிகவும் ஆச்சர்யமாக இருந்தது.

நாலைந்து வீடுகளில் விருந்துச் சாப்பாடு சமைக்க வாரத்துக்கு இரண்டொரு நாள் போய் வருவான்; ஓய்ந்த வேளையில் அப்பளம் இட்டுக் கொடுப்பான். இதிலெல்லாம் அப்படிப் பிரமாதமாக என்ன கிடைத்துவிடும்? இந்த நாளில் அதை வைத்துக் கொண்டு எவ்வளவு நாட்கள் ஜீவனம் நடத்திவிட முடியும்?

அவனுடைய பெட்டியில் அவன் வைத்து விட்டுப் போனது ஒரு முத்து ஜபமாலையும், தேய்ந்துபோன பழைய மூக்குக் கண்ணாடியும் தான். நல்ல வேளையாகத் தகப்பனார் வீட்டையாவது கட்டிவிட்டுப் போயிருந்தார். இல்லாவிட்டால் அவர்கள் நடுத்தெருவில்தான் நின்றிருக்க வேண்டும்.

வீடு வீடாகப் போய்ப் பிச்சை வாங்காத நிலை. சில பேர்கள் பரிதாபப்பட்டுக் கொடுத்தார்கள். சிலருக்கு இன்னும் அதிகம் கொடுக்க வேணும் என்கிற ஆசை. ஆனால் அவர்கள் மனத்தில் அந்த ஆசை இருந்த அளவுக்கு அவர்களிடம் செல்வம் இல்லை. அது அவன் அதிர்ஷ்டம் சில பேர்கள் முணுமுணுத்துக் கொண்டு கொடுத்தார்கள். சிலர் அதுவும் கொடுக்காமல் விரட்டி விட்டார்கள்.

எப்படியோ கிடைத்ததை வைத்துக் கொண்டு ஒரு பலகாரக் கடை வைத்தான். அவனும் கமலமுமாக உட்கார்ந்து பாவகைப் பார்கள். தாயாருக்கு ஒத்தாசை செய்து பழக்கம். ஓரளவு சமையல் நுணுக்கம் தெரியும். நாலு எழுத்து படிப்பதற்கு வகையில்லாமல் போனாலும் அவனுக்கு அதுவாவது மிஞ்சி இருந்ததே!

மசால் வடை, மிளகு வடை, பட்டாணி சுண்டல், காரா முறுக்கு எல்லாம் செய்து கடையில் வைத்துக் கொண்டு வெய்யிலைப் பாராமல் காலில் செருப்புகூட இல்லாமல் அவன் நடப்பான்.

பள்ளிக்கூட வாசல், மில்லில் சங்கு ஊதி ஆட்கள் வெளியே வருகிற நேரம், பஸ் ஸ்டாண்டு, ஆற்றங்கரை மணலில் ஜனங்கள் உட்காருகிற இடம் எல்லாம் அவனுக்கு மனப்பாடம். அந்தந்த வேளையில் அந்தந்த இடத்தில் போய் நின்று விட்டு வருவான்.

மூட்டு விளக்கை வைத்துக் கொண்டு கமலம் தனியாகத் திண்ணையில் காத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். சினிமாக் கொட்டகையில் முதல் காட்சி ஆரம்பமாகிற வரையில் விற்று விட்டுச் செட்டியார் கடையில் சாமான்கள் வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போகும்போது மணி எட்டாகி விடும். அதற்கு மேல் சமையல். அந்த ஒருவேளைச் சாப்பாட்டையும் ஆயிரம் கவலைகளுடன், அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு முடித்து விட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டு தூங்கிய நாட்களும் உண்டு.

ஆனால் மனத்தில் என்ன இருந்தாலும் கமலத்திடம் சொல்ல மாட்டான். அவள் முகம் வாடினால் மட்டும் அவனுக்குத் தாங்காது. அருமையாக உட்கார்ந்து அவனே அவளுக்குத் தலை பின்னிவிட்ட நாட்கள் எத்தனை. ஆறேழு வயதில் ஒரு குழந்தைக்கு என்ன தெரியும்? ஆனால் அவள் சமர்த்து. குடும்பத்தின் நிலையை எப்படிப் புரிந்து கொண்டாளோ! வாயைத் திறந்து எதுவுமே கேட்டதில்லை. ஒரு முழம் மல்லிகை, நாலு கண்ணாடி வளையல்கள், ஒரு ரிப்பன் என்று ஏதாவது வாங்கிக் கொண்டு வந்ததெல்லாம் அவளுக்குப் பத்து வயதான பிறகுதான். அதுவரையில் அதற்கெல்லாம் அவன் மனத்தில் கொள்ளை கொள்ளையாக ஆசை இருந்தாலும் கையில் அவனுக்குக் காசு ஏது?

கமலம் வளர்ந்து பெரியவளான பிறகும் அவன் அனாவசியமாக எந்தச் செலவும் செய்ய அனுமதிப்பதில்லை. வீட்டுச் செலவு செய்யும் பொறுப்பு முழுவதையும் அவள் கையில் விட்டுவிட்டான். அவள் கைராசியோ என்னவோ வரவர அவர்கள் நிலை முன்னேறிக் கொண்டுதான் வந்தது.

அக்கம் பக்கத்துக் காரியாலயங்களில் வேலை செய்பவர்கள் இருபது முப்பது பேர்கள் வீட்டில் வந்து வாடிக்கையாகச் சாப்பிட ஆரம்பித்தார்கள். ராமுவும் வெளியில் போய் வியாபாரம் செய்வதை நிறுத்திக் கொண்டான். சமையல் வேலையில் முதிர்ந்த அவனது அனுபவம், சமைத்த பொருள்களில் பரிமளிக்கும். ''இன்றைக்குக் கல்யாண ரஸம், நீ பெருங்காயம் கொஞ்சம் தூக்கலாகப் போட்டிருந்தாலும் 'ஜம்' மென்றுதான் இருக்கிறது ராமு. இன்னொரு கரண்டி விடு'' என்று கேட்டு வாங்கிச் சாப்பிடுவார் டைப்பிஸ்டு முனுசாமி. தபாலாபீஸ் ராஜுவுக்கு அவன் போட்ட ஆவக்காய் ஊறுகாயென்றால் உயிர். இன்பம் வந்தாலும், துன்பம் வந்தாலும், புகழ்ச்சியானாலும், இகழ்ச்சியானாலும் அவனுக்கு முதலில் தாயாரின் நினைவுதான் வரும். வந்தால் அவனால் கண்ணீரைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாது.

அப்படி அவன் கடையில் வந்து சாப்பிட்டவன்தான் கோபாலனும். பாங்கியில் புது வேலை ஒப்புக்கொண்ட அன்று தபால்காரர் பழனிவேலுவையும் அழைத்துக் கொண்டு வந்தான். ''இவர் புதுசு. அட்வான்ஸ் இல்லாமல் சாப்பாடு போடுங்க! நான் பொறுப்பாளி'' என்று அவர் அறிமுகப்படுத்தி விட்டுப் போனார்.

முதன் முதலில் அவனைப் பார்த்ததுமே அவனுக்கு மனத்தில் ஒரு கவர்ச்சி ஏற்பட்டு விட்டது. சுருட்டை மயிர், குறுகுறுத்த பார்வை, எடுப்பான தோற்றம், மடிப்பு கலையாத உடை. காரியாலயத்திலும் அவனுக்கு நல்ல பெயர் என்று பேசிக்கொண்டார்கள். அதைக் கேட்டதிலிருந்து அவனுக்கு மனம் அவனையுமறியாமல் கமலத்தையும் அவனையும் முடிபோட்டுப் பார்த்து மகிழ்ந்தது.

கமலத்துக்கு என்ன குறைவு? வீட்டிலேயே நன்றாகப் படித்திருக்கிறாள். எல்லாக் காரியங்களும் பக்குவமாகச் செய்யத் தெரியும். அம்மாவைப் போலவே லக்ஷ்மீகரமான முகம். கூடத்தில் ஏற்றி வைத்த குத்து விளக்கைப் போல் அவள் எந்த வீட்டுக்கும் அழகும் மங்களமும் தரக்கூடியவள்தான். ஆனால் ஒரு பெண்ணின் கல்யாணம் அத்துடன் முடிந்து விடக்கூடிய காரியம் அல்லவே?

கையில் கஷ்டப்பட்டுக் குருவி அளவில் சேர்ப்பது போலச் சிறுகச் சிறுகச் சேர்த்த பணம் ஆயிரம் ரூபாய் இருந்தது. மேற்

கொண்டு ஆயிரம் ரூபாய் இரட்டை வட்டிக்குக் கடன் வாங்க நேர்ந்தது. கோபாலனும் நல்ல பையன். எதையும் கேட்டு வாங்கவில்லை. செய்ததைக் கொண்டு திருப்தி அடைந்தான். கமலத்துக்குத்தான் எத்தனை சந்தோஷம்? என்ன மனநிறைவு? ஆயிரம் அவன் அருமையாக இருந்தாலும், அன்போடு வளர்த்திருந்தாலும் அவளுக்கென்று ஒரு குடும்பம் ஏற்பட்டு விட்டால்தானே அவளுக்குப் பாந்தமாக இருக்கிறது? அவனுக்கும் நிம்மதியாக இருக்கிறது?

கலியாணமாகிப் போன பிறகும் வாரத்துக்கு இரண்டு நாட்கள் வந்து அவனைப் பார்க்காமல் இருக்க மாட்டாள். நாள் கிழமைகளில் அவள் வீட்டுக்கு அவனை அழைத்துப் பெருமையாக விருந்து வைப்பாள். அவனைப் பிரிந்து போனது அவனுக்குத் தெரியவில்லை. அவள் இல்லாதது அவனுக்கு வீடே சூனியமாக இருந்தது. நாள் முழுதும் உழைத்து விட்டு வீட்டுக்குப் போனால் வெறுமையாக இருந்த வீடு அவன்மனத்தில் அலுப்பையே மூட்டியது.

வாயை அடக்கி, வயிற்றை அடக்கி, எல்லா ஆசைகளையும் அடக்கி அவனும் அடபடியே பத்து வருஷங்களை ஓட்டி விட்டான். இப்போது அவனும் கொஞ்சம் நிமிர்ந்து நிற்கக் கூடிய நிலை. கமலத்தின் கலியாணத்தின் போது பட்ட கடனை வட்டியுடன் அடைத்து விட்டான். சொந்தத்தில் சினிமாக் கொட்டகைக்கு எதிரே ஒரு கடையும் வைத்து விட்டான். இப்போது அவனுக்கு உட்கார்ந்து வேலை பார்க்கக்கூட வசதியும் அவகாசமும் இருந்தன. அப்படியும் இப்படியுமாகச் சேர்த்துக் கையில் கொஞ்சம் ரொக்கம்கூட இருந்ததாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். அதெல்லாம் தெரிந்துதான் மாமாவும் வந்தாரோ? கலியாணப் பேச்சை அவனிடம் எடுத்தாரோ?

மணி பத்து அடித்தது. இரண்டாம் காட்சி தொடங்கி விட்டார்கள். கடைப் பையன் நாற்காலிகளை இழுத்து மேஜையின்மேல் தலை குப்புறக் கவிழ்த்து விட்டுத் தரையைத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தான். கடைசியாக ஒரு முறை கணக்கைப் பார்த்து முடித்து விட்டு டிராயரைப் பூட்டி சாவியும் கொத்துச் சாவியைத் தன் கையில் எடுத்துக் கொண்டான்.

பலகைகளை அடைத்து வாசல் பூட்டியாகி விட்டது. தெருவில் இறங்கினான். நல்ல பௌர்ணமி நிலவு. நகரசபை விளக்குகளையெல்லாம் அணைத்து விட்டார்கள். ஊரே அடங்கிக் கிடந்தது. எங்கும் அமைதி. அவன் கால் செருப்பொலி மட்டும் நிழல் போலப் பின்தொடர்ந்து வந்தது.

மனம் கிளு கிளுத்தது. மாமாவின் வருகை, கற்பனையில், நாவில் படியும் வெற்றிலைச் சாயம்போல ஏறி நின்றது. அவன் மனத்தில் விரிந்த கற்பனைக் காட்சியில் அமைதியான குடும்ப வாழ்க்கையும், மனைவியும் மக்களும், கூடு நிறையக் குஞ்சுகளோடு வாழும் பறவையைப் போலக் காட்சியளித்தன; தெளிந்த மகிழ்ச்சியின் நிறைவும் செறிவும் தோற்றமளித்தன.


நிமிர்ந்து நடந்தான். வீட்டைத் திறக்கும் போது குலுங்கிய சாவிக் கொத்தைப்போல மனமும் குலுங்கியது. மனதில் மகிழ்ச்சி நிறைந்திருந்ததால் சாப்பிடப் பிடிக்கவில்லை. பானையிலிருந்து ஒரு தம்ளர் குளிர்ந்த நீரைக் குடித்துவிட்டு, முற்றத்து நிலவில் துண்டை விரித்துப் படுத்துக் கொண்டான். தென்றல் சுகமாக வீசியது. கண்ணை மூடிக்கொண்டான். மனம் கற்பனைக் காட்சிகளில் ஒன்றியது.

''டக்! டக்! டக்!''

சந்தேகமில்லை, வாசற் கதவைத்தான் யாரோ தட்டுகிறார்கள். யாரது? அதுவும் இந்த அகால வேளையில்?

''யாரது?''

கதவைத் திறந்தவன் வாயடைத்து நின்றான். ''கமலமா! என்ன இந்த வேளையில்?'' என்று வியப்புடன் கேட்டான்.



விளக்கை ஏற்றியதும் ஒளி படர்ந்தது. அவள் முகத்தைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''எங்கே வந்தாய், கமலம்? தனியாக இருட்டு வேளையில் இப்படி வரலாமா? என்ன அவசரமான சேதி அப்படி?''

அவள் பதில் சொல்லவில்லை. குமுறி வரும் அழுகையை, உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டது தெரிந்தது

''என்னம்மா? என்ன விஷயம்?'' என்று பதறிப் போய்க் கேட்டான்.

''ஒன்று...மி ல்...லை . அண்ணா...எ...ன்... தலைவி... இ....துக்....கி......அதிருஷ்...டம்'' என்றாள் அவள் கண் கலங்க.

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவள் விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டாள். அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டு சமாதானப்படுத்தினான். மனம் கரைந்து நின்றது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் விஷயம் தெரிந்தது. பாங்கியில் கோபாலன் கணக்குப் பார்த்து ஒப்புவிக்க வேண்டிய வேலையில் ஏதோ தகராறு: கைப் பிசகாக ஏதோ தொகை தவறி விட்டது. விஷயம் இன்னும் தலைமைக் காரியாலயத்துக்குத் தெரியாது. மாதக் கடைசிக்குள் எல்லாம் சரியாக வேண்டும். இல்லாவிட்டால் கோபாலனுக்கு உத்தியோகம் போவதோடு சிறைவாசமும் நேரிடலாம்.

ராமு உண்மையிலேயே அதிர்ந்துதான் போனான். ஆனால் தங்கை மனம் குன்றிப் போவாளோ என்று எண்ணி அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"எத்தனை ரூபாய்?"

"சொல்லவே நாக்கு மாறுகிறது. மூவாயிரம்."

கொஞ்சநேரம் இருவருமே பேசவில்லை. பிறகு அவள்தான் முதலில் பேசினாள். "அவர் இன்னும் வீட்டுக்கு வரவில்லை. அதனால்தான் நான் இங்கே வந்தேன். எங்கே யெல்லாம் அலைகிறாரோ? ஒரு வாரமாகத் தூக்கம் இல்லை. உன்னிடம் சொல்லவும் கூடாதென்று தடுத்து விட்டார். இலையில் உட்கார்ந்தால் சாப்பிடுவதில்லை. அவமானம் தாங்காமல் ஏதாவது செய்து கொள்வாரோ என்று..."

அவள் வார்த்தையை முடிக்கவில்லை. ராமு அவளைத் தடுத்து விட்டான். தீர்மானமான குரலில், "வா! வீட்டுக்குப் போகலாம். நான் கொண்டு வந்து விடுகிறேன். எதற்கும் கவலைப்படாதே. நான் இருக்கிறவரையில் உனக்கு ஒன்றும் நேராமல் பார்த்துக் கொள்ள மாட்டேனா?" என்று எழுந்தான்.

கமலத்தை அவள் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விட்டுத் திரும்பும்போது இரவு வெகு நேரமாகி விட்டது. அதற்கப்புறம் படுத்தும்கூட இரவு முழுதும் அவனால் தூங்க முடியவில்லை. மனம் குழம்பிக் கிடந்தது. 'மூவாயிரம் ரூபாய்! எவ்வளவு பெரிய தொகை அது அவனுக்கு? ஆனால் தங்கை கமலத்தின் சௌபாக்கியம் அதை விட எத்தனை மேலானது?'

பத்து நாட்களுக்குப் பிறகு அவன் கோபாலனிடம் மூவாயிரம் ரூபாய்களைக் கொடுத்த போது அவனுக்கு ஒரே ஆச்சரியம்.

"ஏது ராமு இத்தனை பணம்?"

"ஒருவரிடம் வாங்கிக் கொடுத்தேன்."

"உனக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன். ராமு! எப்படியாவது கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கட்டி விடுகிறேன்."

"சே! அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. உனக்கு இல்லாத பணம் எனக்கு எதற்கு?"

கமலத்துக்குத்தான் ஒன்றும் பிடிபடவில்லை. அவளால் நம்பவே முடியவில்லை. அவனிடம் அத்தனை பணம் ஏது? எப்படிக் கிடைத்தது? அவ்வளவு தைரியமாகக் கடன் கொடுக்க முன் வருகிறவர்கள் யார்? அவளுக்கு ஒரே சந்தேகம். ராமுவை நேரில் பார்த்தபோது பேசமுடியாமல் திணறிப் போனாள்.

"ஒவ்வொரு பிடி சாதமும் உன்னை நினைத்துச் சாப்பிடுகிறேன், அண்ணா! இந்த வாழ்வு நீ கொடுத்த பிச்சை" என்று தழுதழுத்த குரலில் சொன்னாள்.

"அசடு! தைரியமாக இரு. என்னாலானதைச் செய்ய வேண்டியது என் கடமை."

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒருநாள் கோபாலன் அவனிடம் வந்தான். "நாளை மறுநாள் குழந்தை மணியைப் பள்ளிக்கூடத்தில் வைக்கப் போகிறோம். நீ அவசியம் வித்தியாப்பியாசத்துக்கு வரவேண்டும்" என்று அழைத்தான்.

"நல்ல காரியம், கோபால்! குழந்தை நன்றாகப் படித்து முன்னுக்கு வரவேண்டும். படிக்க முடியாமல் போனது எனக்கு வாழ்க்கையில் ஒரு தீராத குறை."

"அதை யெல்லாம் சொல்லாதே, ராமு! உனக்கு இருக்கும் பண்பாடும் மனப் பக்குவமும் படித்தவர்களில் எத்தனை பேருக்கு இருக்கிறது? விடு! நீ நாளன்றைக்குக் காலையிலேயே அங்கு வந்துவிட வேண்டும். நான் முழுதும் இருந்து நடத்தி வைக்க வேண்டும்."

"அதுதான்..."

"என்னது?"

"என்னை மன்னித்துக் கொள், கோபால்! குழந்தைக்கு வித்தியாப்பியாசம் செய்வதை என்னால் பார்க்க முடியாது. அதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை. ஒரு மணி சுமாருக்குச் சாப்பாட்டுக்கு வருகிறேன்."

"ஏன் அப்படிச் சொல்கிறாய், ராமு! குழந்தையின் விசேஷத்தை விட வேறு வேலையா?"

ராமு பதில் சொல்லவில்லை. கோபாலன் போய் விட்டான். அவன் என்ன நினைத்துக் கொண்டான் என்று யாருக்குத் தெரியும்?

கோபாலனின் வீட்டில் வித்தியாப்பியாசம் தடபுடலாக நடந்து கொண்டிருந்தது. அவன் நண்பர்கள் அனைவரும் வந்திருந்தனர். கமலாவின் சிநேகிதிகளும் பலர் கலந்து கொண்டனர். ஆனால் கமலாவுக்கு இத்தனை பேர்கள் வந்திருந்தும் ஒரு பெருங் குறை இருந்தது. அவள் அருமை அண்ணா. அவளுக்கு வாழ் வளித்த தமையன் வித்தயாப்பியாச நேரத்தில் வந்து கலந்து கொள்ளவில்லையே என்று வருத்தமாக இருந்தது. விசேஷ தினத்தில் கண்கலங்கக் கூடாதென்று தன் உள்ளத்துக்குள்ளேயே அதை நினைத்துப் பொருமினாள்.

வித்தியாப்பியாசம் முடிந்து வெற்றிலை பாக்கும் கொடுத்தாகி விட்டது. கூடத் தைப் பெருக்கி இலைபோட்டுக் கொண்டிருந்தார்கள். மணி பன்னிரண்டரை. ராமுவைக் காணோம். கோபால் பொறுமை இழந்து வாசலில் உட்கார்ந்துகொண்டிருந்தான். கடைசியாகக் கமலத்திடம் கேட்டுவிடுவது என்று அவன் உள்ளே வந்தபோது வாசற்படியில் ராமு செருப்பைக் கழற்றும் சத்தம் கேட்டது. அவன் கையில் ஒரு பொட்டலம்.

அதற்குள் கமலம், தன் தமையன் வந்து விட்டான் என்ற செய்தி கேட்டதும் குழந்தையைத் தூக்கிக்கொண்டு அவனிடம் வந்தாள்.

''குழந்தே! மாமாவுக்கு நமஸ்காரம் பண்ணு!'' என்று கூறினாள் கமலம்.

நமஸ்காரம் செய்த குழந்தையின் கையில் பட்டுத் துணியைக் கொடுத்தான். அவன் நெஞ்சின் நிறைவு பார்வையில் நிழலிட்டது.

''சாப்பிடலாம் வா, கோபால்!''

''நீ உட்காரு, ராமு! நான் கொல்லைப்புறம் போய்க் கையைக் கழுவி விட்டு, அடுத்த வீட்டுக்காரரையும் அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டான் கோபாலன்.

கமலம் மணையும் இலையும் போட்டுக் கூஜாவும் குளிர்ந்த நீரும் எடுத்து வைத்தாள். ராமு உட்கார்ந்தவன் தலை குனிந்தபடியே விரலால் இலையில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தான். கமலத்தின் குரல் தலைக்குமேலே கேட்டது.

''குழந்தையின் வித்தியாப்பியாசத்தின் போது நீ இல்லாதது எனக்குச் சொல்ல முடியாத வேதனை, அண்ணா!''

ராமு நிமிர்ந்தவன் அவள் முகத்தில் இருந்த உணர்ச்சியின் பிரதிபலிப்பைக் கண்டதும் திடுக்கிட்டான். குற்றம் செய்தவனைப் போல் மனம் குறுகுறுத்தது.

''நீ வர மறுத்து விட்டாய் என்று அவர் சொன்னார். ஆனாலும் மனசு கேட்கவில்லை. அந்தச் சமயத்துக்காவது ஒரு நிமிஷம் வந்து விட்டுப் போகச் சொல்லலாம் என்று அடுத்த வீட்டு ரமணியை அனுப்பினேன்!''

''எங்கே?''

''கடைக்குத்தான்.''

அவன் முகம் வெளிறியது. அவளை ஏறிட்டுப் பார்க்க முடியாமல் அவன் தலையைக் குனிந்து கொண்டான்.

பொங்கிவரும் அழுகைக்கு நடுவே அவள் கேட்டாள்: ''கடையை விற்க உனக்கு எப்படி மனசு வந்தது, அண்ணா? அதுவும் அதே இடத்தில் அதிகாரமாக இருந்து விட்டு அங்கேயே... வேலைக்குச் சமையல் ஆளாக இருப்பதற்கு.. மனசு எப்படித் துணிந்தது? உன் நெஞ்சு கல்லா...... பாவி...... நான்... இதற்காகவா... பிறந்தேன்?''

''உனக்குத் தெரிந்தால் வருத்தப்படுவாய் என்றுதான் சொல்லவில்லை, கமலம்! உனக்குத் தெரிந்து விட்டதுதான் இப்போது எனக்கு மிகுந்த வருத்தம்.''

கமலம் விசித்தாள். ''கணேச மாமா கூடச் சொன்னார். பெண்கூடப் பார்த்து வைத்திருந்தாராம். நான்தான் பாவி...குறுக்கே வந்து கெடுத்து விட்டேன்.''


ராமு நிமிர்ந்து பார்த்தான். அவன் முகத்தில் கருணையும் பரிவும் ததும்பின.

''வாழ்க்கையில் நிம்மதியையும் சுகத்தையும் விலை கொடுத்து வாங்க இருந்தேன், கமலம்! எத்தனை சுலபம் அது? நீ கண்ணீர் விடும்போது நான் நன்றாக இருக்க முடியுமா? இப்போது உனக்கு அந்தச் சௌபாக்கியத்தை வாங்கிக் கொடுத்தது எனக்கு எத்தனையோ திருப்தியாக இருக்கிறது. நேரடியாக நான் அடைந்திருக்கக் கூடிய சந்தோஷத்தைவிட இப்போது உன் சௌக்கியத்தைப் பார்த்து நான் அடையும் நிம்மதியும் சந்தோஷமும் எத்தனை மேலானது, தெரியுமா?''

கமலம் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள். நடையில் கோபாலன் வந்து கொண்டிருக்கும் காலடிச் சத்தம் கேட்டது.

தண்ணீர் சப்ளை விஷயமாக உங்கள் தேவை எதுவானாலும் சரி.

அதற்கென்றே டெமிங் பம்புகள் உள்ளன.



வீடு, தொழிற்சாலை, ஹோட்டல், ஆஸ்பத்திரி அல்லது கிராம தண்ணீர் தேவைகளுக்கு நம்பகரமான உழைப்புடன் நயமான விலையில் பம்பு செட்டுகள் உள்ளன.

- கைவசம் உள்ள ஸ்டாக்கிலிருந்தும், வந்துகொண்டிருக்கும் ஸ்டாக்கிலிருந்தும் எந்த மாடல்களையும் விரைவில் சப்ளை செய்யமுடியும்.
- ஸ்பேர் சாமான்களுக்கு நீங்கள் கவலைப்படவேண்டியதே இல்லை. அவை எப்பொழுதும் கிடைக்கும்.
- எங்கள் பொறுப்பு, சப்ளை செய்த பம்புகளை பொருத்துவதுடன் நின்றுவிடுவதில்லை. உள்ளூரானாலும் சரி, வெளியூரானாலும் சரி, பம்புகளை அவ்வப்போது சரிபார்த்து ஓடச்செய்வதும் எங்கள் பொறுப்பே. இதற்குவேண்டிய எல்லா வசதிகளும் எங்களிடம் உண்டு.
- ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து நேரில் எல்லா பம்பு செட்டுகளையும் பார்க்கவும். டெமிங் பம்புகளைப்பற்றிய ஆலோசனை எப்பொழுதும் எங்களிடம் எளிதில் கிடைக்கும்.

தண்ணீர் சப்ளை விஷயங்களை சுலபமாக தீர்த்துவைக்கக்கூடிய நிபுணர்கள்

ஈஸன் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்.

5-7 செகண்ட லைன் பீச், மதறாஸ்.


பயனீர் சைக்கிள் ஹவுஸ்

மேலக் கோபுர வீதி, மதுரை

வாழ்க



பம்பாய் [illegible] லைப்ரெரியை
சேர்ந்த திரு கே. ரி. [illegible] புதல்வி
சௌ. சுந்தராவுக்கும், திரு [illegible]
கும் சிறப்பாகத் திருமணம் நடந்திருக்கிறது




ஆந்திர அக்கௌண்டன்ட் ஜெனரல்
காரியாலயத்தைச் சேர்ந்த திரு பாலசுப்
பிரமணியம் சௌ. லலிதாவைக் கடந்த
[illegible] திருமணம் புரிந்து கொண்டார்.




ஜகன்மோகினி ஆசிரியை, வை. மு.
கோதைநாயகி அம்மாளின் பேத்தி சௌ.
விஜயலக்ஷ்மிக்கும், திரு கே. வி. வரதராஜ
னுக்கும் விவாகம் நடைபெற்றது.



நடன ஆசிரியர் திரு கே. என். தட்சிணா
மூர்த்தி அவர்களுக்கும், சௌ. ஜயலக்ஷ்
மிக்கும் [illegible] சிறப்பாகத்
திருமணம் நடந்திருக்கிறது




[illegible] ஆப்பரேட்டிவ்
சூப்பரின்டெண்டெண்ட் வி. ராமசுப்பன்
புதல்வி சௌ. சந்திரசேகரிக்கும், திரு
சீனிவாசனுக்கும் திருமணம் நடந்தது.



வக்கீல் திரு ஏ. ஏ. விசுவநாதய்யரின்
பேரன் வெங்கடராமனுக்கும் திரு ஏ. என்.
அய்யரின் பேத்தி சௌ. மீனாட்சிக்கும்
விவாகம் சென்னையில் சிறப்பாக நடந்தது.

மணமக்கள்




ஸ்ரீநகர் ஹஜூரின் செஞ்சிக்கோட்டைச் சேர்ந்த திரு வி. வி. நாதனின் புதல்வி சௌ. வனஜா, மேஜர் சந்திரராமனை மணம் புரிந்துகொண்டார்.



திரு ஏ. வி. நாதன் அவர்களின் புதல்வி சௌ. சுசீலாவுக்கும், திரு எஸ். ஜனார்த்தனனுக்கும் வெகு விமரிசையாக விவாகம் நடைபெற்றது.




சர்க்கார் வக்கீல் திரு கே. எச். தெய்வசாமி அய்யரின் புதல்வி சௌ. கல்யாணிக்கும், திரு எம். ஆர். சுந்தரத்துக்கும் தென்காசியில் திருமணம் நடந்தது.



சென்னை ராஜதானி டிரேடிங் கம்பெனி மானேஜர் திரு கே. சங்கரனுக்கும், சௌ. பொன்னம்மாளுக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.



காரைக்குடி வியாபாரி திரு சங்கரலிங்கம் அவர்களின் புதல்வர் திரு விசுவநாதன் பி. ஏ. பி. எல்.லுக்கும், சௌ. ராஜலக்ஷ்மி பாய்க்கும் குற்றாலத்தில் திருமணம் நடந்தது.



'கல்கி' காரியாலயத்தைச் சேர்ந்த திரு சங்கரநாராயணனுக்கும் சௌ. சென்னை குமாரிக்கும் சென்னையில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

கண்ணன்—
என் குழந்தை


கடிதத்தை முருகையா படித்ததும், மனைவி தருமுவுக்கு அழுகையே வந்துவிட்டது. இத்தனைக்கும் பட்டணத்தில் தம்பி செல்லையாவுக்குப் பெண் பிறந்து பெயர்ச் சூட்டலுக்கு அழைப்புத்தான் வந்திருந்தது!

"என்ன தருமு, சந்தோஷப் படாமே—" என்று இழுத்தார் முருகையா.

"சந்தோஷமா? ஒங்க தம்பி சம்சாரம் யோகத்துக்கல்லவா யோகம்? கண்ணனை நினைச்சா மனது துடிக்குது. தனக்கென்று பிறந்தப்புறம் நம்ம குழந்தையைக் கவனிப்பளா? உடனே போய் அவனைக் கூட்டியாங்க!"

"தத்துக் கொடுத்த பிள்ளையைத் திருப்பிக் கேட்க முடியுமா, தருமு? கண்ணனுக்கு ஒரு குறையும் வராது. நாளைக்கே நாம் போகலாம்!"

தருமுவின் தாயுள்ளமோ தவித்தது. யோகம் தன் வயிற்றுக் குழந்தையைச் சீராட்டிக்கொண்டு கண்ணனைப் புறக்கணிப்பது போன்ற கற்பனைகளே தருமுவின் மனதில்!



முப்பது ரூபாய் சம்பளத்தில் ஏழு குழந்தைகளுடன் கிராமத்தில் கஷ்டப்படுபவர் முருகையா. ஆனால் பட்டணத்தில் வசதியாக இருந்த செல்லையாவோ மணமாகிப் பத்தாண்டுகளாகியும் குழந்தையே பிறக்காததால் அண்ணனின் மகவொன்றை சுவீகாரம் கேட்டான். தம்பியின் வேண்டுகோளை முருகையா மறுக்கவில்லை; ஆனால் மனமில்லாத மனைவி தருமுவின் சம்மதம் பெறுவது கடினமாகப் போயிற்று. காலெலும்புகள் பலமின்றி சிரமத்துடன் நடந்த கடைக் குட்டி கண்ணன் குறையின்றி வாழட்டுமென முடிவாகத் தீர்மானமாயிற்று.

ஆனால் கண்ணன் சென்ற இரு வருடங்களுக்குள் யோகத்திற்கே பெண் பிறந்துவிட்டதே! இனி அவளுக்குக் கண்ணன் யார்?

தம்பி வீட்டிற்குள் நுழைந்த தருமுவின் குடும்பத்திற்கு யோகத்தின் அமோகமான வரவேற்பு! தருமுவின் கண்களோ கண்ணனையே தேடின. "எப்படியோ உன் கவி தீர்ந்து விட்டது, யோகம்! குழந்தை எங்கே...?" என்றாள்.

"கண்ணன் ஸ்கூல் போயிருக்கான்; கைக் குழந்தை தூங்குது, பாருங்க!"

"நல்ல அழகு! ஆயுசோட இருக்கணும்!"

"கேக்கணுமா? கண்ணனுக்குத் தங்கச்சி ஆச்சே!" என்றாள் யோகம். தருமுவுக்குப் பெருமையாக இருந்தாலும், பசப்புகிறளோ என்ற சந்தேகம்.

மூன்று சக்கர சைக்கிளும், கால்பந்தும் வாங்கிக்கொண்டு செல்லையா உள்ளே நுழைந்தான். பிறந்த குழந்தைக்கு விளையாட்டு சாமான்கள் போலும்! இனி கண்ணனுக்கு ஏது கவனிப்பு?" தருமு அலமலந்தாள்.

தருமுவின் மற்ற குழந்தைகளை அரவணைத்த செல்லையா, "அண்ணி, புள்ளைங்களெல்லாம் இளைச்சிருக்கே?" என்றான்.

"என்ன செய்யறது? பாலும் பழமுமாப் போட்டு வளர்க்கக் கட்டுதா எங்களுக்கு? கொல்லையிலே பூசணிக்கா காய்க்குதோ, சமையல் நடக்குது!"

"தினமும் பூசணியா? அண்ணி, ஆகார விஷயத்திலே ஒரு திட்டம் வேணுமா? தேக வளர்ச்சிக்கான நாலுவித ஆகாரமும் கலந்து சாப்பிடற நாங்கள் ஆரோக்கியமா இல்லையா?"

உணவருந்த யாவரும் அமர்ந்ததும், தருமு "என்ன திட்டமான சாப்பாடோ எனக்குப் புரியவில்லை. நாளும் கிழமையுமா அந்த ஆச்சி நெய்யையே எடுக்கல்லே! எல்லாத்துக்கும் அந்தப் பேரீச்சை மரப் படம் போட்ட டப்பாச் சரக்கை—" என்று இழுத்தாள்.

"அதுக்கென்ன? டால்டா வனஸ்பதி! புத்தம் புதிய தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிக்கப்படும் சமையல் கொழுப்பு. நாள் கிழமையோ தினச் சமையலோ எதற்கும் இங்கே 'டால்டா'தான்!"

"பட்சணத்துக்குச் சரிதான்! ஆனால் சாம்பார், ரசம், பொங்கல், புளிசாதம் எல்லாத்துக்குமே அதைக்கொட்டியிருக்காளே! உங்களுக்கு நெய்யே பிடிக்காதோ?"

செல்லையா சிரித்தான்: "பிடித்தால் போதுமா? வாங்கக் கட்டணுமே! நெய்க்கும் எண்ணெய்க்கும் பதிலாக எதற்கும் இங்கே 'டால்டா'தான். நெய்யிலுள்ள அதே அளவு வைடமின் 'ஏ'யும், அதோட வைடமின் 'டி'யும் 'டால்டா'விலே சேர்ந்திருப்பதால் பல்லும் எலும்பும் வலுவாகிறது; நோய்களை எதிர்த்து நிற்கவும் உதவுகிறது!"

திடீரென வாசலில் சத்தம்... "கண்ணனா இது?" தருமு அதிசயித்தாள். உள்ளே நுழைந்த சிறுவனிடம் அவ்வளவு வளர்ச்சி! கால்களைக் கவனித்தாள் தருமு. கையிலே கோப்பையின்ன ராஜநடையோடு, "அம்மா, ஓட்டப் பந்தயத்தில் பரிசு!" என்று கூவி வந்தான்.

"என்னைத் தெரியலையா, கண்ணா? தருமு அவனை அணைத்தாள்.

"அண்ணி, கண்ணன் ஓட்டத்தில் புலி; சைக்கிளும் கால்பந்தும் அவனுக்குத்தான்!" என்றான் செல்லையா.

ஆனந்தம் தருமுவின் வாயை அடைத்தது. பிறகு விருந்துண்கையில் பண்டங்களின் ருசிதான் அவளைப் பேச வைத்தது: "எல்லாம் அருமையா இருக்குதே! நான் 'டால்டா'வின் வாடை அடிக்குமோன்னு—"

"டால்டாவுக்குத் தனி ருசியோ வாசனையோ ஏது? அதை எதற்கு உபயோகித்தாலும், பண்டங்களின் சுய ருசியே பரிமளிக்கும்!" என்றாள் யோகம்.

"உம் ... இவ்வளவு நாள் தெரிஞ்சுக்காமே..." தருமு பிரலாபித்தாள். "நீ எதையுமே மெள்ளத்தானே தெரிஞ்சுக்குவே!" என்று கூறிச் சிரித்தார் முருகையா.

மெள்ளவே ஆனாலும் மனதார யோகத்தின் தூய அன்பைப் புரிந்துகொண்ட தருமு ஊர் திரும்புகையில், கண்ணனை அழைத்துப்போகவேண்டுமெனக் கோரவில்லை. ஆனால் யோகம் "கண்ணனின் அதிருஷ்டம்தான் தங்கை பிறந்திருக்கிறாள், கண்ணனிருக்குமிடம்தான் எங்கள் துவாரகை!" என்று மொழிந்தாள்.

தருமுவின் இதயம் பூரித்தது!



பாட்டாளியின் சபதம்

மண் குடிசைதான்; ஆனால் மிகவும் சுத்தமாகப் பெருக்கி, மெழுகி, கோலம் போட்டு, லக்ஷ்மி விலாசத்துடன் விளங்குகிறது.

சற்றுத் தூரத்தில், நவநாகரிக மோஸ்தரில், அதியற்புதமாகக் கட்டப்பட்டிருக்கும் ஒரு நூதன மாளிகை இருக்கிறது. ஆனால் அதன் சூழ்நிலை சுத்தமாக வைக்கப்படவில்லை. பெருக்கவில்லை; கோலம் போடவில்லை. எங்கும் தூசி படிந்து பாழாய்க் கிடக்கிறது.

மண் குடிசையை விட மாளிகை உயர்ந்தது தான் என்றாலும் நாம் சுத்தமாயிருக்கும் மண் குடிசையைத்தானே விரும்புவோம்!

'பாட்டாளியின் சபதம்' என்னும் இந்தப் படத்தில், கோட்டை, கொத்தளம், கத்திச் சண்டை, கார் சவாரி, மலர்ப் பொழில் சூழ்ந்த நந்தவனம்-இப்படிக் கண்கவர் காட்சிகள் எதுவும் இல்லை. திரைக்கதையில் கூடத் திடுக்கிடும் சம்பவங்கள் எதுவும் இல்லை. திடுக்கிடாத சாதாரண சம்பவங்கள் கூட அடுக்கடுக்காக இல்லை. திரைக்கதை வளைவு நெளிவு அதிகம் இல்லாமல் சுலபமாகவே செல்லுகிறது.

முதலாளி — தொழிலாளி தகராறுதான் இந்தப் படத்தின் அடிப்படைக் கருத்து. ஆனால், அந்தத் தகராறுகளை எல்லோரும் புரிந்துகொள்ளும் முறையில் மிகவும் சுலபமாகப் புகுத்தியிருக்கிறார்கள்.

ஒரு மரம் அறுக்கும் ஆலை காட்டுப் பிரதேசத்திலுள்ள ஒரு சிற்றூரில் இருக்கிறது. ஊர் வாசிகளில் பெரும்பான்மையோர் அந்த ஆலையில் வேலை செய்பவர்கள். இதைத் தவிர அவ்வூரில் விவசாயமோ, அல்லது வேறு எந்தத் தொழிலோ கிடையாது. ஆலை முதலாளி நல்லவர். அவர் காசியாத்திரை போயிருக்கும் சமயம் அவர் மகன் சின்ன முதலாளியின் ஆதிக்கம் தொடங்குகிறது. அவன் மேல் நாட்டிலிருந்து மரம் அறுக்கும் யந்திரங்களைத் தருவித்து எல்லாத் தொழிலாளர்களையும் வேலையிலிருந்து நீக்கி விடுகிறான். அவ்வூரில் உள்ள ஒரு குன்றில் சிவன் கோயில் இருக்கிறது. அந்தக் கோயில் காரணமாக அவ்வூருக்கு வரும் யாத்திரிகர்கள் அதிகம். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கோயில் சற்றுத் தூரத்தில் இருப்பதால் அவ்வூரில் குதிரை வண்டிகளுக்குக் கிராக்கி அதிகம். சின்ன முதலாளி ஒரு பஸ்ஸை வாங்கி ஸ்டேஷனிலிருந்து கோயிலுக்கு விட்டு, வண்டி ஓட்டும் தொழிலை நசுக்குகிறான். சங்கர் ஒரு குதிரை வண்டிக்காரன். அவன் சின்ன முதலாளியை எதிர்த்து பஸ்ஸுடன் போட்டி விட்டு வெல்லுவதாகச் சபதம் கூறுகிறான். சங்கரின் ஆப்த நண்பன் கிருஷ்ணன்- விலகுகமாறி வேலைசெய்வது திரைக்கதையில் ஒரு திருப்புமுனை.

பாலுக்குச் சர்க்கரை மாதிரி திரைக் கதைக்குக் காதல் இன்றியமையாததாகி விட்டது. இந்தப் படத்தில் வரும் காதல் பாலுக்குச் சர்க்கரை போட்ட மாதிரியே இனிக்கிறது. கதாநாயகி என்பதற்காக விசேஷ 'மேக்கப்' எதுவுமின்றி, ஆடம்பர அலங்கார உடைகளும் இன்றிச் சாதாரண உடையில் வைஜயந்திமாலா வந்து படத்தில் சுகமான சூழ்நிலையை உண்டாக்கி விடுகிறார். வனப்பும், வாளிப்பான உடற்கட்டும் உள்ள நடன ராணியான வைஜயந்திமாலாவுக்கு இந்தப் படத்தில் ராணி என்று பெயர்; நடிப்பிலும் ராணியாகவே விளங்குகிறார். சங்கரோடு சேர்ந்து அமர்ந்து குதிரை வண்டி சவாரி செய்த போதும், கோயில் மணியை அவனுடன் சேர்ந்து ஒலித்தபோதும், சின்ன முதலாளியிடம் சவால் விட்டுவிட்ட பிறகு தோழர்களின் ஒத்துழைப்பில்லாமல் போனதும் ஏங்கிய சங்கருக்கு உறுதுணையாய் நின்று ரோடு போடுவதில் உதவியபோதும் வைஜயந்திமாலாவின் நடிப்பு இணையற்று விளங்குகிறது. படம்முழுவதும் தொழிலாளி-முதலாளி தகராறுகளே இடம் பெற்றுச் சாரமற்றதாகப் போய் விடாமல், வைஜயந்திமாலாவின் நடிப்பும், நடனக் காட்சிகளும் நன்கு சுவையூட்டுகின்றன.

திலீப்குமார் சங்கராக நடிக்கிறார். வேஷப் பொருத்தம் தத்ரூபமாயிருக்கிறது. அவருக்

தாந்தன்

ளும் 'மேக்கப்' சாதாரணமா யிருப்பது நன்றாயிருக்கிறது. நடிப்பிலும் பிரமாதப்படுத்தி விட்டார். நண்பன் கிருஷ்ணனோடு இணைந்து பழகியது, குதிரை வண்டியை மிகவும் லாவகமாக ஓட்டியது, சின்ன முதலாளியோடு பந்தயம் போட்டது, பிறகு உற்சாகமாகப் புது ரோடு போட்டது ஆகிய எல்லாக் கட்டங்களிலும் அவர் நடிப்பு மிகவும் இயல்பாயிருந்தது பாராட்டுக்குரியது.

"பாட்டாளியின் சபத"த்தில் முக்கியமான அம்சம், கிருஷ்ணன் — சங்கர் இருவரும் ராணியை நேசிப்பதுதான். இந்த நேசத்துக்குக் குறுக்கே, சங்கரின் தங்கை பட்டு கிருஷ்ணனிடம் கொண்ட பிரேமை முளைத்துக் கதையை மிகவும் நல்லபடியாக முடித்து வைக்கிறது. அந்தத் திறமையான கதைப் போக்கு மிகவும் நன்றாயிருக்கிறது.



அத்யந்த நண்பர்களாயிருந்த சங்கர் கிருஷ்ணன் இருவரும் ராணியின் நேசம் காரணமாகக் கடும் பகைவர்களாகிவிடுகின்றனர். கிருஷ்ணன் வெறுத்து ஒதுக்க ஒதுக்க, பட்டு அவன் மீது கொண்ட பிரேமை அதிகமாகிறது. கடைசியில் அந்தப் பிரேமை, அவனை நண்பனுக்காக எதையும் தியாகம் செய்யும் உத்தம நண்பனாக மாற்றி விடுகிறது. இந்தக் கட்டம் படத்தில் பிரமாதமாயிருக்கிறது.

கிருஷ்ணனாக நடிப்பவரும் அன்பு, வெறுப்பு, குரோதம் ஆகிய எல்லா பாவங்களையும் ததும்ப மிகவும் நன்றாய்ப் பாராட்டும்படி நடித்திருக்கிறார்.

ஜானிவாக்கரின் ஹாஸ்ய நடிப்பும் இந்தப் படத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் அவர் பேச்சைக் கேட்பதுதான் மிகவும் கஷ்டமாயிருக்கிறது. பாதிக்கு மேலே ஒன்றும் விளங்கவில்லை. படத்தில் ஹாஸ்யம் வேண்டும் என்று விரும்பினால் அதைச் சகித்துக் கொண்டிருப்பதைத் தவிர, வேறு வழியில்லை.

"நயா தௌர்" என்னும் ஹிந்திப் படம் தமிழில் 'டப்' செய்யப்பட்டுப் "பாட்டாளியின் சபத"மாக வெளிவந்திருக்கிறது. ஆனால், தமிழாக்கம் குறை சொல்ல இடம் இல்லாமல் நன்றாயிருக்கிறது. அது ஒரு சிரமமான காரியம் அல்லவா?

ஹிந்தியிலிருந்து தமிழில் 'டப்' செய்யப்பட்ட படங்களில் பாத்திரங்களின் உதட்டு அசைவுக்கும் தமிழ்ப் பேச்சுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பதை நான் பல படங்களில் கண்டிருக்கிறேன். ஆனால் "பாட்டாளியின் சபதம்" அந்த நிலையிலிருந்து அபூர்வமாகத் தப்பிப் பிழைத்த படம். இந்தப் படத்தின் தமிழாக்கமும், அதன் மேற்பார்வையும் எஸ். டி. சுந்தரம் அவர்களால் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. அவர் சினிமாத்துறைக்குப் புதியவரல்லர்; தமது பொறுப்பை மிகவும் பாராட்டத்தக்க முறையில் நிர்வகித்திருக்கிறார். ஆகவே, தமிழிலேயே தயாரிக்கப்பட்ட படம்போல் தோன்றுகிறது.

இந்தப் படத்தில் வரும் ஒன்பது பாடல்களையும் கம்பதாசன் இயற்றியிருக்கிறார். ஆனால் பாடல்கள் ஒன்றும் மனத்தில் பதியவில்லை. காரணம், மெட்டுக்கள் கவர்ச்சிகரமாயில்லாதது தான் என்று நினைக்கிறேன்.

இப்படம் முழுவதும் கவர்ச்சிகரமான இயற்கைக் காட்சிகள் நிறைந்திருப்பது மிகவும் நன்றாயிருக்கிறது.

இந்தப் படத்தைப் பார்த்துக் குதூகலத்தில் திளைத்த என் உள்ளத்தில் ஒரு ஏக்கம் தோன்றியது. இந்தப் படம் பார்ப்பவர்கள் எல்லோருக்குமே அந்த ஏக்கம் ஏற்படுவது இயல்புதான். இந்தப் படம் ஒரு அசல் தமிழ்ப் படமாகவே இருந்திருக்கக் கூடாதா என்னும் ஏக்கம் தான் அது.

நம் படாதிபதிகளெல்லாம் "பாட்டாளியின் சபதம்" போன்ற நல்ல படங்கள்தான் எடுப்போம் என்று எப்பொழுது சபதம் எடுத்துக் கொள்வார்களோ!

ராசி பலன்



வாகன சுகம்!
குடும்பத்தில் சௌஜன்யம்!
இந்த ராசிக்காரர் உடனே புதையல் காணலாம்!
புதையல்
பண வருவாய்க்கு சனிபார்வை பாதக அம்சம்!
உத்தியோகத்தில் சற்று உயர்வு!

பங்களூரில் தமிழ் மகாநாடு

'சேம முறத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்!'

என்று முழங்கினார் பாரதியார். அந்தத் தமிழோசை சென்ற மாதம் மைசூர் ராஜ்யத்தில் முழங்கியது. மைசூர் தமிழ் இலக்கிய மகாநாடு 14-6-'58 சனிக்கிழமை மாலை நான்கு மணிக்குப் பங்களூர் சிவில் ஏரியா ஸ்ரீ ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடாலயத்தில் மைசூர் உதவிக் கல்வி மந்திரி திருமதி கிரேஸ்டக்கர் அம்மையார் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. மகாநாட்டைத் திறந்து வைத்து மைசூர் கல்வி அமைச்சர் திரு அன்னூராவ் கானமுக்கி அவர்கள் பேசினார். "சகோதர மொழிகளாகிய தென்னிந்திய மொழிகளுக்கிடையே போட்டி உணர்ச்சி இருக்கக்கூடாது. சிறந்த தமிழ் இலக்கியங்கள் கன்னடத்தில் மொழி பெயர்க்கப்படுகின்றன. அதேபோல் கன்னட நூல்களும் மற்றத் தென்னிந்திய மொழி நூல்களும் தமிழில் மொழி பெயர்க்கப்படல் வேண்டும். உலக க்ஷேமமே இலக்கியங்களின் லட்சியமாகும். மற்றும் ஒரு காலத்தில் தோன்றும் இலக்கியங்கள் அந்தக் காலத்தின் சமூக, பொருளாதார, தார்மிக அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பது இயற்கையே. இலக்கியக் கர்த்தர்கள் தன்மையில் சென்று உண்மையைக் கண்டு அசற்று உணர்ச்சியைக் கலந்து எழுத்துருவம் கொடுத்து உலகுக்கு வழங்க வேண்டும். இலக்கியம் என்பது ஆத்மீக ஞானத்துக்கும் மனிதர்களுக்கும் மிடையே உள்ள ஒரு தொடர்பாகும்" என்று தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்.



ஸ்ரீ அன்னூராவ் கானமுக்கி

கல்வி உதவி மந்திரி திருமதி கிரேஸ்டக்கர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், தமிழ் இலக்கியத்தின் பெருமை பற்றிக் குறிப்பிட்டு அதைப் பரப்ப வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினார். ஆரம்பத்தில் பங்களூர் நகரசபை அங்கத்தினரும், மகாநாட்டுக்கு வரவேற்புக் கர்த்தாவுமான ஸ்ரீ எம். எம். தேவராஜ செட்டியார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மைசூர் ராஜ்யத்தில் கன்னடக்காரர்களிடையே தமிழ் இலக்கியத்தைப் பரப்புவதற்காக இத்தகைய மகாநாடுகள் அடிக்கடி ஏற்பாடு செய்யப்படுவதாகவும், இந்த வரிசையில் சிலப்பதிகார, கம்பராமாயண மகாநாடுகள் ஏற்கனவே நடத்தப்பட்டிருப்பதாகவும் கூறினார். புதுச்சேரியைச் சேர்ந்த ஸ்ரீ சிவகண்ணப்பர் 'தமிழும் பிரஞ்சு இலக்கியமும்' என்பது பற்றிப் பேசினார். "என்னைக் கவர்ந்த இலக்கியங்கள்" என்ற தலைப்பில் புலவர் காஞ்சி அமிழ்தனார் அவர்கள் அழகிய சொற்பொழிவாற்றினார்.

ஜூன் 15ந் தேதி இரண்டாம் நாள் நிகழ்ச்சி பங்களூர் செயிண்ட் ஜோசப்பர் கல்லூரிப் பேராசிரியர் திரு கே. வெங்கடாசலனார் தலைமையில் ஆரம்பமாகியது. திருவனந்தபுரம் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை ஆராய்ச்சியாளர் டாக்டர் ஐ. சுப்பிரமணியனார் பேசுகையில், "தற்போது தமிழைக் கற்கும் ஆவல் மேநாடுகளில் பெருவாகப் பரவியுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அமெரிக்கர்களிடையே இந்த ஆவல் வளர்ந்திருப்பதைக் கண்டேன். தமிழில் ஏராளமான இலக்கியங்கள் இருப்பதுதான் அதற்குக் காரணம்" என்று குறிப்பிட்டார். பிறகு, புலவர் காஞ்சி அமிழ்தனாரின் உரை நிகழ்ந்தது. "கட்டபொம்மன் நாடகம்" விமரிசையாக நடித்துக் காட்டப்பட்டது. வந்திருந்த ரசிகர்கள் அனைவரும் நாடகத்தை ரசித்து மகிழ்ந்தனர்.

மூன்றும் நாள் நிகழ்ச்சி ஜூன் 16ந் தேதி திரு புலவர் காஞ்சி அமிழ்தனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாவடுதுறை ஆதீனப் புலவர் திரு வீரசிவம் அவர்கள் "இலக்கியமும் வாழ்வும்" என்ற பொருள் பற்றியும், கிருஷ்ணகிரி பண்டிதை கே. என். தெய்வயானை அம்மாள் அவர்கள் "திருக்குறளில் ஒரு பா" என்பதைப் பற்றியும் பேசி, வந்திருந்தவர்களை தமிழமிர்தத்தில் மூழ்கடித்தார்கள். விழாவுக்குப் பாரதரத்னம் ராஜாஜி, கேரள மந்திரி திரு மத்தாய், சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தார், சர்தார் ஏ. வேதரத்னம் பிள்ளை, கவிஞர் ராமலிங்கம் பிள்ளை ஆகியவர்களிடமிருந்தெல்லாம் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. மகாநாட்டின் காலஞ்சென்ற மைசூர் பல்கலைக் கழக உபதலைவர் திரு எஸ். உருத்திரபதியார், திரு சர்க்கரை செட்டியார் ஆகியோர் மரணம் அடைந்ததைக் குறித்து அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பங்களூர் நகராண்மைக் கழக உறுப்பினர் திரு எம். எம். தேவராஜ செட்டியார் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். தெலுங்கு அன்பர் திரு டி. வெங்கடேசலு மகாநாடு இனிது நிறைவேறுவதற்கு நிறையப் பொருள் கொடுத்து உதவியதைப் பாராட்ட வேண்டும்.

மகாநாட்டின் முடிவில் "தூக்குத் தண்டனை" "இன்ப முடிவு" ஆகிய நாடகங்களும் வெகு சிறப்பாக நடைபெற்றன.


மூன்று நாட்களும் மைசூர் ராஜ்யத்தில் தமிழ் மணம் கமழ்ந்தது; தமிழ் இசை முழங்கியது; தமிழ்ப் புலவர்கள் பவனி வந்தார்கள். மகாநாடு இனிது முடிந்தது.



அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
COLGATE
COLGATE DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்



நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அழகும் ஜொலிப்பும் பெற கூந்தலுக்கு காஸ்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயிலே தடவுங்கள். கூந்தலின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துக.
காஸ்கேட்
பெர்ஃபியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்



பொங்கிவரும் பெருநிலவு

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 25

கருவிழியும் கண்ணீரும்

பகலென்றும் இரவென்றும் பாராமல் நடராஜனை இரு கண்கள் ஆட்டி வைத்தன. அவனை உறக்கமின்றித் தவிக்கச் செய்த அந்தக் கண்களுக்கு உரியவளே அன்று இரவு அவனை அழைத்தாள். அவளுடைய குரல் அவன் காதுகளில் இன்பத் தேனாகப் பாய்ந்து இனித்தது. படுக்கையை விட்டுத் துள்ளி எழுந்து வாசலுக்கு வேகமாக ஓடினான்.

''என்ன நிர்மலா? என்ன நடந்தது?''

அவனுடைய பதற்றத்தைக் கண்டு வியந்தாள் நிர்மலா. ''நீங்கள் இவ்

வளவு பதற்றம் அடையும்படியாக ஏதும் நடந்துவிட வில்லை.''

''பதற்றத்துக்கு வேறு காரணம் இருக்கிறது நிர்மலா! நீ எதற்காக வந்தாய்? முதலில் அதைச் சொல்லு!''

''நர்ஸிங் ஹோமில் ஒன்பதாவது நம்பர் கட்டிலில் இருக்கும் நோயாளி உறக்கமின்றிக் கஷ்டப்பட்டார். என்ன செய்வது என்று தெரியவில்லை. யோசனை கேட்டுப் போக வந்தேன்.''

''உண்மையான உடல் கோளாறு பாதியும் மனப்பிரமை பாதியுமாக இருக்கும். வா, போய்ப் பார்ப்போம்'' என்றான் நடராஜன்.

கனிவுடன் நோயாளியைப் பரிசோதித்தான். அவர் கண்களைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே, ''உங்களுக்கு ஒன்றும் இல்லை. என்னை நம்புங்கள். எல்லாம் சரியாகவே இருக்கிறது. அமைதியாகத் தூங்குங்கள்'' என்று திரும்பத் திரும்பச் சொல்லித் தைரியமூட்டினான். மனப்பிரமை நீங்கி நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தார் அந்த நோயாளி.

அவரை விட்டு அகன்று வாசல்புறம் வந்தார்கள். ''உங்களை அனாவசியமாக ஒன்றுமில்லாததற்குத் தொந்தரவு செய்துவிட்டேன்'' என்றாள் நிர்மலா.


''நோயாளிகளைக் கவனிக்க வேண்டியது என் கடமை. அந்தக் கடமைக்கு நேரம், போது கிடையாது. என்னை எப்போது வேண்டுமானாலும் கூப்பிட அவர்களுக்கு உரிமை உண்டு.''

''இருந்தாலும் உங்கள் தூக்கம் என்னால் கெட்டுப் போயிற்று, இல்லையா? மன்னியுங்கள்.''

''தூக்கமா? எனக்கு ஏது தூக்கம்? லண்டனிலிருந்து சென்னைக்குத் திரும்பிய அன்று உன்னை முதன் முதலாகச் சந்தித்தேனே, அப்போதே தூக்கத்தைப் பறி கொடுத்து விட்டேன். அன்று முதல் இன்று வரையில் எனக்குத் தூக்கமே கிடையாது நிர்மலா!'' என்று சொன்னான் நடராஜன்.

நிர்மலாவின் மனம் துணுக்குற்றது. 'இது என்ன இன்றைக்கு இவர் திடீரென்று இப்படிப் பேசுகிறார்?' அவன் கூறிய சொற்களின் கருத்தைப் புரிந்துகொள்ளாதவள்போல் நடித்தாள்.

''அவரைத் தூங்கச் செய்ய ஆனமட்டும் முயன்று பார்த்தேன். அவர் அசைந்து கொடுக்கவில்லை. 'எனக்கு உடம்பு நிச்சயம் சரியாக இல்லை. டாக்டர் உடனே வந்து பார்த்தால் ஒழிய நான் செத்துப் போவேன்' என்று சொல்லிக்கொண்டேயிருந்தார். கடைசியில் வேறு வழியில்லாமல் உங்களை வந்து அழைத்தேன். நீங்கள் தொட்டதுமே அமைதியாகத் தூங்கி விட்டாரே? உங்களிடம் ஏதோ மந்திர சக்தி தான் இருக்க வேண்டும்!''





''உன் கண்களில் இருக்கும் மந்திர சக்தியை விடவா?''

சிரித்தாள் நிர்மலா. கபடமற்ற அந்தச் சிரிப்பு அவன் உடலின் வெப்பத்தை அதிகரித்துத் துன்புறுத்தியது.

''என் கண்களில் மந்திர சக்தி இருக்கிறதா, என்ன? எனக்குத் தெரியவே தெரியாதே? இந்த நோயாளி அதற்குக் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லையே?''

வீட்டு வாசலில் நின்று, ''டாக்டர்! டாக்டர்!'' என்று நிர்மலா அழைத்ததை நடராஜன் கேட்டதுபோல் விமலாவும் கேட்டு விட்டு எழுந்தாள். நடராஜன் வாசலுக்கு ஓடிச் சென்றதை உணர்ந்தாள். கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு நடுநிசியில் அத்தான் ஒரு நோயாளியைக் காணச் சென்ற காட்சி அவளை நெகிழச் செய்தது.

அத்தான் திரும்பி வரும் ஓசையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவன் போய்ப் படுத்த பின்னர்தானே அவளுக்குத் தூக்கம்? அவளால் அமைதியாக உட்கார்ந்திருக்கமுடியவில்லை. 'அத்தான் திரும்ப ஏன் இவ்வளவு நேரம்? ஒரு வேளை நோயாளிக்கு ஏதாவது ஆபத்தோ? நாம் எந்தவிதத்திலாவது உதவியாக இருக்க முடியுமா?' விமலாவின் கால்கள் அருகேயே இருந்த நர்ஸிங் ஹோமுக்கு அவளை இழுத்துச் சென்றன.

முகப்பை அவள் அடைந்தபோது நிர்மலாவின் கேள்விக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான் நடராஜன். இரவின் நிசப்தத்தில் அவனுடைய சொற்கள் விமலாவின் காதுகளில் மிகத் தெளிவாக விழுந்தன!

''உன் கண்களில் இருந்த மந்திரசக்தியைத்தான் என்னிடம் பிரயோகித்து விட்டாயே, நிர்மலா? அதன்பின் அந்த நோயாளியை உன்னால் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?''

''ஏதோ ஏடாகூடமாகப் பேசுகிறீர்கள், எனக்குப் புரியவில்லை.''

''நிஜமாகவே புரியவில்லையா? அல்லது புரிந்து கொள்ள விரும்பவில்லையா? இன்னும் தெளிவாகச் சொல்கிறேன். உனது கருவிழிகளுக்குள் என்னைச் சிறைப்படுத்தி விட்டாய், நிர்மலா! உனது நயனங்களில் உள்ள மந்திர சக்தியால் என்னை மயக்கி விட்டாய்! உனது விழிச் சுழலில் நான் சிக்கித் தவிக்கிறேன்! இப்போதாவது புரிகிறதா, நிர்மலா? அல்லது இன்னமும் புரியவில்லையா? அப்படியானால் கேள். மேலும் எனது நிலையைத் தெளிவுபடுத்துகிறேன்.

''நம்மிடையே ஏற்பட்டுள்ள இந்தத் தொடர்பு இன்று நேற்று புதிதாக உண்டானதல்ல! யுகம் யுகமாக நாம் ஒருவரை ஒருவர் காதலித்து வருகிறோம் என்று தோன்றுகிறது!''

''ஐயா! ஏதேதோ பிதற்றுகிறீர்கள். தூக்கக் கலக்கமா அல்லது ஒருவேளை...'' மேலே அந்த வார்த்தையைச் சொல்லி முடிக்கத் தயங்கினாள் நிர்மலா.

''ஒரு வேளை என்ன நிர்மலா?''

''பைத்தியமா?''

''ஆமாம், நிர்மலா! சரியாகச் சொல்லி விட்டாய். எனக்குப் பைத்தியம்தான். உன்னைக் கண்டது முதல் நான் பித்துப் பிடித்துத்தான் அலைகிறேன். அந்தப் பித்தம் தெளிவதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. உன்னை நான் அடைவது தான்!''

அழகுத் தெய்வத்தின் அவதாரம் என்று என்னை வர்ணித்த அதே அத்தானா இன்று நிர்மலாவை இப்படி வர்ணிக்கிறார்? பொங்கி வரும் பெருநிலவு என்று என் முகத்தைச் சிலாகித்த அதே அத்தானா இன்று நிர்மலாவின் கண் வீச்சிலே மயங்கி விட்டதாகச் சொல்கிறார்?

துக்கம் தொண்டையை அடைக்க, நெஞ்சு விம்ம, கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க, நிழலில் மறைந்து அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த விமலா திரும்பி ஓடினாள்.

ஏன் விமலா அவசரப்பட்டாய்? இன்னும் சற்று நேரம் அங்கே இருந்து அவர்கள் பேச்சு முழுவதையும் கேட்டிருக்கக் கூடாதா?

''போதும் ஐயா! போதும்! நிறுத்துங்கள். இந்தப் பேச்செல்லாம் உங்கள் மீது உயிரையே வைத்து நேசிக்கிறாளே விமலா, அவளிடம் சொல்ல வேண்டியவை. உங்களையே நம்பியிருக்கும் தந்தையற்ற அந்தப் பெண்ணை ஏமாற்றுகிறீர்கள்!'' என்றாள் நிர்மலா.

''அவளை நான் ஏமாற்றவில்லை, நிர்மலா! அவள் மனம் வேறு ஒருவன் மீது சென்று விட்டது. உன்னை அடைவதின் மூலம் விமலா—மணி இவர்களின் நல்வாழ்வுக்கு வழி வகுத்தவனாவேன்!''

''என்னால் நம்பவே முடியவில்லை. அப்படி அது ஒரு வேளை உண்மையாயினும் அதற்குக் காரணம் இரக்கமற்ற நீங்களாகத்தான் இருக்க வேண்டும். உங்களை அழைக்க வந்தபோது இப்படியெல்லாம் நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. தெரிந்திருந்தால் வந்திருக்கவே மாட்டேன். நோயாளி எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்று பேசாமல் இருந்திருப்பேன். இப்போதாவது நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். கேட்டு மனம்திருந்தி, வீடு போய்ச் சேருங்கள். உங்கள் காதலுக்கு நான் அருகதையற்றவள்!''

"ஏன் அருகதையற்றவள் என்கிறாய்? நான் எஜமானன். நீ எனக்குக் கீழ் வேலை செய்யும் பணிப்பெண் என்ற எண்ணமா? என் வாழ்நாள் முழுதும் நீ கடைக்கண்ணால் இட்ட பணியைச் சிரமேற்கொண்டு செய்யக் காத்திருக்கிறேன். திருப்தி தானே? அல்லது சாதியில் வித்தியாசம் என்று நினைக்கிறாயா? எனக்கு அந்த அசட்டுச் சம்பிரதாயங்களில் நம்பிக்கை கிடையாது! அந்தஸ்தில் நான் உயர்ந்தவன் என்று யோசிக்கிறாயா? உன்னைக் கரம் பிடிப்பதைவிட வேறு பெரிய பதவி எனக்குக் கிட்டப் போவதில்லை!"

பீறிக் கொண்டு வந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள் நிர்மலா. பட்டுப் பூச்சியின் சிறகுகளைப் போல் அவள் கண் இமைகள் படபட வென்று அடித்துக் கொண்டு கண்ணீர் பொங்காமல் தடுத்தன.

"ஐயா! என் மனத்தை மாற்ற யாராலும் முடியாது. தங்களைக் கெஞ்சுகிறேன். என்னை விட்டு விடுங்கள்."

"விடமாட்டேன், நிர்மலா! விடவே மாட்டேன். ஒரே ஒரு வார்த்தை 'சரி' என்று சொல்லு. நாளைக்கே, இல்லை இப்பொழுதே, நம்முடைய திருமணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்."

"இந்த அசட்டுப் பிடிவாதம் நீடித்தால் நான் ராஜினாமா செய்து விட்டுப் போவதைத் தவிர எனக்கு வேறு வழியே இல்லை. என்னைத் துன்புறுத்தாதீர்கள். உங்களுக்குச் சத்தியம் வேண்டுமானாலும் செய்து தருகிறேன். உங்களுக்கு நான் அருகதையற்றவள்."

"எந்த விதத்தில் அருகதையற்றவள் நிர்மலா? அதையாவது சொல்லு!"

"வேண்டாம். அதைச் சொல்லும்படி தயவு செய்து என்னை வற்புறுத்தாதீர்கள். கடவுள் ஆணையாகச் சொல்கிறேன். உங்களுக்கு நான் அருகதையற்றவள் தான். அதற்குமேல் ஏதும் என்னைக் கேட்காதீர்கள்."

"கேட்கத்தான் கேட்பேன். உன்னை அடையக் கூடாது என்றால் அதற்குக் காரணம் கூறு!"

நாத்தழுதழுக்க, கண்களில் நீர் மல்க "நான் ஒரு விதவை!" என்றாள் நிர்மலா. வேறு பக்கமாகத் திரும்பிக் கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உடல் குலுங்க விம்மி விம்மி அழுதாள்.

உள்ளே மணம் பெருகிப் பெருகிக் குமுறிக் கொண்டிருந்த செந்தாமரை மொட்டு உதய சூரியனின் அன்புக் கிரணங்களுக்காகக் காத்திருக்கும் சமயம், தண்டோடு அதை அறுத்து நெருப்பில் போட்டு வாட்டியதாகத் தோன்றியது நடராஜனுக்கு. அவள் கடைசியாகச் சொன்ன மூன்று வார்த்தைகளினால் ஏற்பட்ட பேரதிர்ச்சியில் அவன் பித்தம் தெளிந்து விட்டது. தன் நிலையை உணரத் தொடங்கினான். வெட்கித் தலைகுனிந்தான்.

"என்னை மன்னித்து விடு, நிர்மலா! உனக்கு எவ்வளவு மன வருத்தத்தை அளித்து விட்டேன் என்பதை உணர்கிறேன். ஆனால் ஒரே ஒரு விஷயம். உன் நிலையைப் புரிந்து கொண்ட பிறகும் என் தீர்மானம் உறுதியாகவே இருக்கிறது. நீ விரும்பினால் நான் ஆட்சேபிக்க மாட்டேன்!"

வறட்டுச் சிரிப்பு சிரித்தாள் நிர்மலா. "சற்று முன்னால் உங்கள் குரலில் இருந்த உறுதியை இப்போது காணோமே, டாக்டர்! கம்பீரமாகப் பேசிய உங்கள்



தொண்டை இப்போது கம்மிப் போய் விட்டதே? பயப்படாதீர்கள். உங்களைப் பரிசோதிக்க மாட்டேன்! விமலாவின் வாழ்வைப் பாழாக்க நான் விரும்பவில்லை. பதினைந்தாவது பிராயத்திலேயே நான் இழந்த இன்ப வாழ்வைத் தொண்டு புரிவதின் மூலம் மறக்க முயற்சி செய்கிறேன். நோயாளிகளைக் கவனித்துப் பணிவிடை செய்து முற்றிலும் வேறு வகையான இன்ப நிலையை அடைந்து வருகிறேன். அதில் எனக்கு உற்ற துணையாக நின்று உதவி புரியுங்கள். விமலா என் சகோதரியைப் போன்றவள். அவளைச் சந்தோஷமாக வைத்திருங்கள். இன்று நடந்ததையெல்லாம் ஒரு துர்சொப்பனமாக எண்ணி அடியோடு மறந்து விடுங்கள்."

மௌனமாகத் தலையை அசைத்து விட்டுத் திரும்பி நடந்தான் நடராஜன். தன் அறையை அடைந்து படுப்பதற்கு முன்னால் விமலாவின் அறைக்கு அருகே சற்றுத் தயங்கி நின்றான். உள்ளே யிருந்து விம்மல் சத்தம் கேட்பது போல் தோன்றியது. 'வீண் பிரமை! சற்று முன் நடந்த சம்பவத்தால் பேதலித்த என் மனம் ஏதேதோ எண்ணி ஏமாறு கிறது. விமலா ஏன் அழவேண்டும்? அவ ளுக்கு நடந்தது ஒன்றுமே தெரியாதே?'

பல நாட்களுக்குப் பிறகு அன்று கவலையை மறந்து நிம்மதியாகத் தூங் கினான் நடராஜன். மற்றொரு அறையில் பேதை விமலா தூக்கமின்றிக் கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருந்தாள்.

அத்தியாயம் 20

புது முகத்தின் புகைப்படம்

மல்லிகா தன் காதலனிடம் ஏமாற் றம் அடைந்தவுடன் அவனையே நினைத்து ஏங்கி, ஏங்கி உள்ளம் உருகி உலகை வெறுத்து விடவில்லை. அதற்கு மாறாக உலக வாழ்க்கையில் அவளுக்குப் பற்று தல் அதிகமாகத் தொடங்கியது.

அந்தப் பற்றுதல் வளர நாதன் உதவி புரிந்தார். மல்லிகாவுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வந்தார். 'நடிப்புக் கலையில் உன்னத நிலைக்கு உன்னைக் கொண்டு வந்து விடுகிறேன்' என்று கங்கணம் கட்டிக் கொண்டு முனைந்து வேலை செய்தார். நாடக ஒத்திகைகள் தினம் தவறாமல் நடந்து வந்தன.

அந்தச் சமயங்களில் சேகர் மல்லிகா வைத் தேடி வரவேயில்லை. மல்லிகா அதை எதிர்பார்க்கவும் இல்லை. வராத வரையில் க்ஷேமம். அவனைப் பற்றி நினைத்தாலே அவளுக்கு ஆத்திரம்தான் உண்டாயிற்று. தன் கவனம் முழுவதை யும் நடிப்புக் கலையில் செலுத்தி அவனை அறவே மறக்க முயன்றாள்.

ஒரு மாத காலத்துக்குப்பிறகு மல்லிகா நடித்த அந்த முதல் நாடகம் அரங்கேறி யது. நாதனும் மல்லிகாவும் எதிர்பார்த் ததற்கு நேர்மாறாக அது மல்லிகாவுக்குத் தோல்வியாகவே முடிந்தது. பொது மக்களின் வரவேற்பு பிரமாதமாக இல்லை. பத்திரிகைகளில் வெளிவந்த நாடக விமர்சனங்கள் மல்லிகாவைப் புகழவில்லை. சிலவற்றில் 'நடிப்பு மோசம்' என்று கண்டிருந்தது. வேறு சிலர் போனால் போகிறது என்று 'கதா நாயகியின் நடிப்பு பரவாயில்லை' என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

ஒவ்வொரு விமர்சனமாகக் கிழித் தாள் மல்லிகா. சுக்குச்சுக்காகச் சின் னஞ் சிறு துண்டுகளாகக் கிழித்து எறிந் தாள். அப்போது அடித்த காற்றிலே அவை நாலாபுறமும் பறந்து சிதறி விழுந் தன. அதைப் பார்த்துக் கொண்டே உள்ளே வந்தார் நாதன்.

"என்ன மல்லிகா! எதை இப்படிச் சுக்குச் சுக்காகக் கிழித்து எறிகிறாய்?"

"பத்திரிகை விமர்சனங்களை!"

"நல்ல காரியம் செய்தாய். நீ எங்கே அவற்றைப் பார்த்து விட்டு மனம் நொந்து, கண்ணீர் விடுவாயோ என்று பயந்து கொண்டே வந்தேன். நீ என் னடாவென்றால் மனம் கலங்காமல் அலட்சியமாக அவற்றைக் கிழித்து எறி கிறாய். ரொம்ப சந்தோஷம்."

"என் கண்ணில் இனி எந்த நாளும் யாராலும் கண்ணீரை வரவழைக்கவே முடியாது. அழுது அழுது அவை வற்றிப் போய் விட்டன. இனி துன்பம் வந்தா லும் நான் சிரிக்கத்தான் செய்வேன்."

"சபாஷ்! துக்கப்படுவது மிகவும் சுல பம், மல்லிகா. எதற்கும் அழுதுவிட லாம். அல்லது கண்ணீர் விடாமல் மௌனமாக மனத்துக்குள்ளேயே புழுங் கலாம். ஆனால் சந்தோஷமாக இருப் பதுதான் கடினமான விஷயம். சூழ்நிலை எப்படி யிருந்த போதிலும் சிரிப்பது தான் உயர்ந்த குணம். அதற்குத்தான் மன உறுதி வேண்டும். அந்த உறுதி உன்னிடம் இருக்கிறது என்பதை இந் தக் காகிதத் துகள்கள் காட்டுகின்றன!"

"நீங்கள் வரும்போது நான் வேறுவித மாக நினைத்துக் கொண்டிருந்தேன். சுக் குச் சுக்காகச் சிதறிப் போன என் வாழ்க்கையையும் சிதைந்து போன என் லட்சியங்களையும் அவை எடுத்துக்காட்டு வதாக எண்ணினேன்."

"அம்மாதிரியான எண்ணங்களை ஒரு கணம்கூட உன் மனத்தில் புகவிடாதே, மல்லிகா! உன் வாழ்க்கையில் என்ன நேர்ந்து விட்டது? சேகர் உன்னை ஏமாற்றிவிட்டான் என்பதால் உன் வாழ்வு பாழாகி விடுமா? அப்படிப் பாழாகும்படி விட்டு விட்டு நான் பார்த் துக்கொண்டு இருப்பேனா? உன் லட்சி யங்கள்தான் என்னவாகி விட்டன? ஏன் அவை சிதறிப் போனதாக நினைக் கிறாய்? தோல்வியில் காணும் வெற்றி யிலேதான் இன்பம் இருக்கிறது என் பதை நீ உணரவில்லையா? அல்லது என் னிடம் உனக்கு நம்பிக்கையில்லையா?"



"உங்களிடம் இருக்கும் நம்பிக்கையினால்தான் நான் இன்னமும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன்."

"அப்படியானால் நான் பாக்கியசாலிதான். அந்த நம்பிக்கை ஒருகாலும் வீண் போகாது, மல்லிகா!"

"உங்களிடம் நம்பிக்கை இருக்கிறதே ஒழிய என் நடிப்புத் திறமையில் எனக்கு நம்பிக்கை போய்விட்டது."

"சரியாகப் போச்சு! 'விடிய விடிய ராமாயணம் கேட்டு....' என்பது போல் இவ்வளவு நேரம் என்னுடைய உபதேசங்களைக் கேட்டு விட்டு நடிப்பில் நம்பிக்கை போய்விட்டது என்கிறாயே! இதோ பார், மல்லிகா! தோல்வி இம்முறை ஏற்பட்டது உண்மைதான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் தோல்வியை வெற்றியாக மாற்ற வேண்டுமானால் ஏன் அந்தத் தோல்வி ஏற்பட்டது என்பதை முதலில் ஆராய வேண்டும். நம்மிடம் இருக்கும் குற்றங் குறைகளை அலசிப் பார்க்கவேண்டும். உலக மகா யுத்தத்தின் போது வெள்ளைக்காரன் என்ன செய்தானாம், தெரியுமா? தனது ராணுவத்தில் உள்ள ஊழல்களையும் குற்றங் குறைகளையும் திரைப்படமாக எடுத்துத் தனது சிப்பாய்களுக்கே காண்பித்தானாம்! எப்போது ஒருவன் தனது குற்றங் குறைகளை உணர்கிறானோ அப்போது அவன் நிச்சயம் வெற்றி அடைவான். யோசித்துப் பார்! உனக்கு ஏதாவது தோன்றுகிறதா?"



"நன்றாகத் தெரிகிறது. குற்றமெல்லாம் உங்களுடையதுதான்!"

"என்னுடைய குற்றமா? அப்படி நான் என்ன செய்து விட்டேன்?"

"கதாநாயகியின் வேஷத்தைச் சேகருடைய வற்புறுத்தலினால் பலவந்தமாக என் தலையில் கட்டினீர்கள். என்னுடைய மன நிலைக்கு ஏற்றவாறு அமையவில்லை என்று நான் அப்போதே சொன்னேன். நீங்கள் அதை மறுத்தீர்கள். 'நீ வாழ்க்கையில் ரொம்பத் துன்பப்பட்டிருக்கிறாய். அதேபோல் இந்தக் கதையின் நாயகியும் ரொம்பக் கஷ்டப்படுகிறாள். அதனால் இந்தப் பாகத்தை நீ ஏற்று நடித்தால் தத்ரூபமாக இருக்கும், சிறப்பாக அமையும்' என்றெல்லாம் சொல்லி ஆசைகாட்டினீர்கள்!"

"உண்மைதான், மல்லிகா! ஆனால் அப்படி நான் சொன்னதில் தவறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே?"

"மிகப் பெரிய தவறு இருக்கிறது. வாழ்க்கையில்தான் நான் கஷ்டப்பட்டேன். ஆனால் என்னுடைய மனம் அதை விரும்பவில்லையே? என் மன நிலைக்கு ஏற்றவாறு ஒரு பாகத்தைக் கொடுங்கள். அதில் நிச்சயம் வெற்றி பெறுவேன்."

"புரிந்து கொண்டேன், மல்லிகா! வாழ்க்கையில் கஷ்டப்பட்டபோதிலும், குதூகலமாக இருப்பதையே நீ விரும்புகிறாய். அப்படித்தானே?"

"ஆம் ஐயா! வானம்பாடியைப்போல் பிரேம கீதம் பாடிப் பரவச நிலையிலே பறக்க விரும்புகிறேன். தோகை விரித்தாடும் மயிலைப்போல் வண்ண வண்ணப் பட்டாடைகளை உடுத்தி வசீகரமாக நடனமாடி மகிழ விரும்புகிறேன். அந்தப் பாடலிலும் ஆடலிலும் உலகமே மயங்கிப் போய் என் காலடிகளில் கிடக்கும். என்னிடம் செல்வம் பொங்கிப் பெருகிக் கொழிக்கும். அப்போது நான் காலால் இட்ட பணியை, விரலால் கட்டிக் காட்டிய வேலையை, கடைக்கண்ணால் காட்டும் உத்தரவை நிறைவேற்றுவதற்காக எத்தனையோ பேர் காத்துக் கிடப்பார்கள். அப்படிச் செய்வதை ஒரு பாக்கியமாகக் கருதுவார்கள். அவர்களிடம் ஒரு வார்த்தை அன்புடன் பேச மாட்டேனா என்று ஏங்குவார்கள். எனது கடைக்கண் நோக்குக்காகத் தவம் இருப்பார்கள்!"

பிரமித்துப் போனார் நாதன். பண்டைக் காலத்தில் எகிப்து நாட்டின் அரசி கிளியோபாட்ரா தனது அழகினால் உலகையே ஆள முயற்சி செய்ததைப் பற்றிப் படித்திருந்தார். பிரான்ஸ் தேசத்திலே பதினைந்தாவது லூயியின் காதலியாக வாழ்ந்து தன் அழகினால் நாட்டை ஆண்ட 'பொம்படோர்' என்பவளைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். அம்மாதிரியான சிலர் இங்கிலாந்திலும் வாழ்ந்திருக்கிறார்கள் என்று அறிந்திருந்தார். அவர்களையெல்லாம் தோற்கடிக்கப் பார்க்கிறாளா இவள்? அந்தப் பெண்களைப் போலவே உலக வாழ்க்கையின் இன்பத்தின் உச்சியை எட்டிப் பிடித்து விட்டு மடிந்துவிட வேண்டுமென்று விரும்புகிறாளா?

இரண்டாவது நாடகம் அமோகமான வெற்றியுடன் அரங்கேறியது. அவளுக்கென்றே இந்தக் கதையைத் தேடிப் பிடித்து 'வில்லி'யின் பாகத்தை அவளுக்குக் கொடுத்தார் நாதன். துடுக்குப் பேச்சாலும் கள்ளச் சிரிப்பாலும் அனைவரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டாள் மல்லிகா. எடுப்பான உடை அணிந்து பம்பரம் போலச் சுழன்று ஆடினாள். பட்டாம்பூச்சிபோல் பறந்து ஆடினாள். எடுப்பும் மிடுக்கும் நெளிவும் குழைவும் அபிநயங்களும் பாவங்களும் அந்த நடனங்களிலே கலந்து தோன்றின. கதையில் வந்த கதாநாயகனைப் போலவே' சபையோரும் அதில் மயங்கிப் போனார்கள். அப்படி மெய்மறந்து ரசித்தவர்களில் முதல் வரிசையில் அமர்ந்திருந்த மணி சேகரனும் ஒருவன். நாடகம் முடிந்ததும் திரைக்குப் பின்னே சென்று நாதனையும் அபாரமாக நடித்த மல்லிகாவையும் அவன் பாராட்டினான்.

ஒரு மோகனப் புன்னகையை அவன் பக்கமாக வீசிக்கொண்டே தனது மென் கரங்களைக் கூப்பி நமஸ்கரித்தாள் மல்லிகா.

மணியை மல்லிகாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார் நாதன். "டைரக்டர் சுகுமாரனின் வலதுகை இவர்"

"ஏன்ஐயா! என்னைப் பார்த்தால் மனிதனாகத் தோன்றவில்லையா? வெறும் கை என்று ஏசுகிறீர்களே?"

"பேச்சுக்கு அப்படிச் சொன்னேன், ஸார்! அதற்குள் ஒரேயடியாகக் கோபித்துக் கொள்கிறீர்களே?"

"கோபம் ஒன்றுமில்லை, சுவாமி! உங்களிடம் கோபித்துக் கொள்ள முடியுமா என்ன? எவ்வளவு பிரமாதமான காரியத்தைச் சாதித்திருக்கிறீர்கள்!" என்றான் மணி. பின்னர் மல்லிகாவைப் பார்த்து, "'ஏ — ஒன்!' போங்கள். கதாநாயகனைக் கோபித்துக் கொண்டு துரத்தும் காட்சியில் வெளுத்து வாங்கியிருக்கிறீர்கள்!" என்றான்.

"நீங்கள் எல்லோரும் 'இப்படி உற்சாகப் படுத்தும்போது நான் நன்றாக நடிப்பதற்குக் கேட்பானேன்?" என்றாள் மல்லிகா அடக்கமாக.

"எங்களுடைய தூண்டுதல் மட்டும் போதவே போதாது. உங்களுக்கே நடிப்பில் ஒரு ஆர்வம் இருக்க வேண்டும். அதனால்தான் இவ்வளவு நன்றாக அமைந்து விட்டது."



"நடிப்புக் கலையில் எனக்கு ஆர்வம் இருப்பது உண்மைதான்."

"எனக்கு நீங்கள் ஒரு உபகாரம் செய்ய வேண்டுமே?"

"காத்திருக்கிறேன், சொல்லுங்கள்."

"நாளைக்குக் காமிராவை எடுத்து வருகிறேன். நாடகத்தின் போதும் அதன் பிறகு தனிமையிலும் தங்களைச் சில புகைப்படங்கள் எடுப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும்."

"தாராளமாக; இதற்குப் போய் அனுமதி கேட்கவேண்டுமா என்ன?"

தன் நன்றியைத் தெரிவித்து விட்டுத் திரும்பினான் மணி.

"அப்போதே நினைத்தேன்" என்றார் வைத்தியநாதன்.

"என்ன நினைத்தீர்கள்?"

"சோழியன் குடுமி சும்மா ஆடாது என்று நினைத்தேன்."

"அவருக்குக் குடுமி யிருக்கிறதா என்ன? நான் கவனிக்கவில்லையே?" என்றாள் மல்லிகா சிரித்துக்கொண்டே.

"குடுமி யில்லையானால் தலை ஆடுகிறது. உன்னைப் பார்க்க அவன் மேடைக்குள் வந்தபோதே எனக்குத் தெரியும்."

"என்ன தெரியும்?"

"உன்னைப் புகைப்படம் எடுக்க விரும்புகிறானே, எதற்குத் தெரியுமா? டைரக்டர் சுகுமாரன் தான் பிடிக்கப் போகும் திரைப் படத்துக்குப் புதுமுகம் தேடுகிறார் என்று கேள்வி. இப்போதெல்லாம் திரைப்பட டைரக்டர்கள் பழைய நட்சத்திரங்களையே கட்டிக் கொண்டு அழுகிறார்கள். புதுமுகங்களைப் படத்தில் புகுத்தினால் படம் வெற்றி யடையாமல் போய் விடுமோ என்று வீணாகப் பயப்படுகிறார்கள். ஆனால் டைரக்டர் சுகுமாரன் மட்டும் அசாத்தியத் துணிச்சலுடன் பல புதிய நட்சத்திரங்களை உருவாக்கியிருக்கிறார். உனக்கும் அந்த அதிர்ஷ்டம் அடித்தால் ஆச்சரியப்பட மாட்டேன்."

"நிஜமாகவே அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டுமா?" என்று கேட்டாள் மல்லிகா. அளவுகடந்த ஆர்வத்தினால் அவள் கண்கள் விரிந்துகொண்டன.

"தீர்மானமாகச் சொல்ல முடியாது. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் அதை வரவேற்க மாட்டேன்."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? இதுவரையில் எனக்கு ஊக்கம் அளித்து வந்த நீங்கள் தொடர்ந்து எனக்கு உற்சாகமூட்ட வேண்டாமா?"

"எப்படி முடியும்? மாதக் கணக்கில் பாடுபட்டு உன்னை நடிகையாக உருவாக்கிப் புகழடையச் செய்த பின்னர் காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் கொத்திக் கொண்டு போனான் என்ற கதையாகச் சுகுமாரன் உன்னைத் திரை உலகுக்குக் கொண்டுபோவதா?"

"ஐயா! என்னுடைய லட்சியக் கனவுகள் நிறைவாகும் சமயத்தில் எல்லாவற்றையும் பாழாக்கி விடாதீர்கள். திரைப்பட நட்சத்திரமாக நான் ஜொலிக்கும்போது, ஏராளமான செல்வம் என்னை வந்து அடையும். அப்போது எனது நன்றிக் கடனைத் தீர்த்துக்கொள்கிறேன்!" என்றாள் மல்லிகா.

"உன்னுடைய செல்வம் யாருக்கு வேண்டும்? செல்வத்தை அடையத்தான் உன்னைச் சிறந்த நடிகையாக்க முயற்சி செய்தேனா? பொருளாசையினால்தான் உனக்கு இத்தனை நாட்களாக உதவிபுரிந்து வருகிறேன் என்று நம்புகிறாயா? மல்லிகா! பல மாதங்களாக என்னிடம் நெருங்கிப் பழகியும் என்னை நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லையா? 'வருங்காலத்தில் உன்னுடைய ஒரு அன்பு வார்த்தைக்காக எத்தனையோ பேர்கள் ஏங்குவார்கள்' என்று அன்றைக்குச் சொன்னாயே, ஞாபகம் இருக்கிறதா? நானும் அவர்களில் ஒருவன் தான் மல்லிகா! உனது கடைக் கண் நோக்குக்காகத் தவமிருப்பவர்களுள் முதன்மையானவன் நான்! அந்த ஏக்கத்தைத் தீர்ப்பாயா? தவத்துக்கு வரம் அளிப்பாயா?" என்று கேட்டார் நாதன்.

* * *

மறு நாளும் நாடகத்தைக் காண வந்தான் மணி. கையில் கொண்டுவந்திருந்த காமிராவால் நாடகம் நடக்கும் போதும், அதன்பிறகும் பல கோணங்களில் மல்லிகாவை போட்டோ பிடித்தான். படங்களைக் கழுவிப் பெரிதாக்கிக் கொண்டு சுகுமாரனின் வருகைக்காகக் காத்திருந்தான். நீண்ட நாட்களுக்குப் பிறகு வழக்கம் போல் அலுவலகத்துக்கு வந்தார் அவர்.

"உங்கள் மகனுக்கு உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டான் மணி.

"மோகனைத்தானே கேட்கிறாய்? எல்லாம் சரியாகி விட்டது. இன்று பள்ளிக்கூடம் கூடப் போயிருக்கிறான். அதனால்தான் நான் நிம்மதியாக வந்தேன். நான் வராத நாட்களில் என்ன நடந்திருக்கிறது? விவரமாகச் சொல்லு."

"நீங்கள் குறிப்பிட்டிருந்த ஹிந்திப் படத்தைப் பார்த்தேன். கதை ரொம்ப நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் உங்கள் போக்குத்தான் எனக்குப் பிடிக்கவில்லை. தமிழில் நல்ல கதைகள் இல்லையா? ஏன் இந்த ஹிந்திக் கதைகளில் அர்த்தமற்ற ஒரு பிரமை உங்களுக்கு?" என்று கேட்டான் மணி.

"திரைப்படத்துக்கு ஏற்றவாறு நல்ல கதைகள் அமைவதில்லை, மணி!"

"காரணம் ஹிந்திக் கதைக்கு யோசனை செய்யாமல் பணத்தை அள்ளிக் கொடுப்பவர் தமிழர் கதை என்றதும் யோசனை செய்ய ஆரம்பித்து விடுவதுதான்; பணத்தை எண்ணுவதற்கு ஆரம்பிப்பதுதான்! ஒன்று ஹிந்திப் படத்தைத் தமிழில் எடுக்க வேண்டும். இல்லையானால் பத்து அல்லது பதினைந்து கதைகளிலிருந்து முக்கிய சம்பவங்களை எடுத்து ஒன்றுசேர்த்து ஒரு கதம்ப மாலையாகப் புதுக்கதை அமைத்துப் படமெடுக்க வேண்டும். அதைத்தானே பெரும்பாலான தமிழ்ப் படாதிபதிகளும், டைரக்டர்களும் செய்கிறார்கள்?"

"சிறந்த கதையாகப் பொறுக்கியெடு, நான் வேண்டாம் என்று சொல்லவில்லை" என்றார் சுகுமாரன்.

"தமிழ்த் திரைப்பட உலகில் ஒரு புதுமையை உண்டாக்குங்கள். நல்லதொரு தமிழ்க் கதையை, குறுகிய நீளத்தில், புது முகங்களைக் கொண்டு தயாரியுங்கள். நல்ல முகவெட்டுள்ள ஒரு புது முகத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். அவளுடைய புகைப்படம்.— இதோ இருக்கிறது, பாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே மல்லிகாவின் பெரிய புகைப்படம் ஒன்றை நீட்டினான் மணி.

சுகுமாரன் அதை வாங்கிப் பார்த்தார். பார்த்தது பார்த்தபடியே இருந்தார். தான் தேர்ந்தெடுத்திருக்கும் புது முகம் அவருக்குப் பிடித்து விட்டது என்று நினைத்து மகிழ்ந்தான் மணி. நேரம் ஆக ஆக வேறு ஏதோ காரணத்தால் அந்தப் புகைப்படத்தை அப்படி உற்றுப் பார்த்துக் கொண்டே இருக்கிறார் என்று அவனுக்குத் தோன்றியது.

"என்ன அப்படிக் கூர்ந்து பார்க்கிறீர்கள்?" என்று கேட்டான் மணி.

"ஒன்றுமில்லை இந்தப் பெண்ணை இதற்கு முன்னால் எங்கேயோ பார்த்தது போல் ஒரு பிரமை."

"ஒரு நாளும் இருக்காது. நாடக உலகுக்குக்கூட இவள் புதியவள்தான்."

"இப்பொழுது பார்த்ததாகச் சொல்லவில்லை, மணி! என் பூர்வாசிரமத்தில் இவளைப் பார்த்திருக்கிறேனோ என்று சந்தேகம்!" என்றார் சுகுமாரன். **(தொடரும்)**



ஏ எல் எஸ் புரொடக்ஷன்ஸ்
பெருமையுடன் அளிக்கும்
இயல், இசை, நாடகம்
கலந்த இன்னிசைச் சித்திரம்
கண்ணதாசன் பிலிம்ஸ்
மாலையிட்ட மங்கை
வசனம் பாடல்கள்
கண்ணதாசன்
சங்கீதம்:
விஸ்வநாதன் & ராமமூர்த்தி
டைரக்ஷன்: ஜி. ஆர். நாதன்
ஸ்டுடியோ:
பரணி
ALS
இப்பொழுது
நடைபெறுகிறது
... சென்னை ...
பாரகன் · ஸ்ரீகிருஷ்ண
உமா

ARUNA

பாலர் மலர்

குமரி முத்து

சேத்தூர் கூத்தன்



13. முத்து கிடைத்தது!

வீராங்கனுக்கு மூச்சு முட்டியது. எலும்பு நொறுங்குவது போல் தோன்றியது. புழுக்குச் சமானமான முத்துச் சிப்பிகளிடம் தோல்வியுற்றதை நினைத்துப் பொருமினான். சிறு துளி பெரு வெள்ளம் என்பது எவ்வளவு உண்மையான வாக்கு !

அந்தச் சிப்பிகளிடமிருந்த ஒற்றுமையும் கட்டுப்பாடும் தான் வீராங்கனின் வீரத்தை முறியடிக்க உதவின. கடலில் வாழும் இந்தப் பிராணிகளிடம் இருக்கிற அருங்குணம் மனித இனத்தில் இல்லையே என்று மனம் நொந்தான்.


பலவாறு எண்ணியபடியே உடலை அசைத்துப் பார்த்தான். முடியவில்லை. பளிச் சென்று பவளக்கொடியின் நினைவு அவனுக்கு வந்தது. ஆபத்துச் சமயத்தில் அதை அறுத்தெறியும்படி அவனுக்குக் கூறிய இராட்சத நண்டுகளை மனமார வாழ்த்தினான்.

பிறகு 'இந்த முத்துச் சிப்பிகள் அத்தனையையும் ஒரு மூட்டாகக் கட்டி மூலையில் தள்ளி விட்டு என்னை விடுதலை செய்' என்று மனத்தில் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு, கையை வெகு சிரமப்பட்டுச் சிறுகச் சிறுக அசைத்து இடுப்பின் அருகில் கொண்டு வந்தான். பவளக் கொடியைப் பற்றி அவன் அறுத்தானோ இல்லையோ, அது மள மள வென்று நீளமாக வளர்ந்தது. ஒரு முனை ஒரு சிப்பியைப்பற்றி மாறி மாறி வலை போல் சுற்ற ஆரம்பித்தது. அப்படி வலை போல் சுற்றும் பொழுதே ஒவ்வொரு சிப்பியாகச் சேர்த்துச் சுற்றியது. சிறிது நேரத்தில் எல்லாச் சிப்பிகளும் அந்த வலையில் அகப்பட்டுக் கொண்டன. எல்லாச் சிப்பிகளும் வலைக்குள் அகப்பட்ட பிறகுதான் பவளக் கொடி வளர்வது நின்றது. பவளக் கொடியின் வலையில் அகப்பட்ட சிப்பிகள் சிறிய மலைக் குன்றைப் போல் காட்சி அளித்தன.

வீராங்கன் வெற்றிப் பெருமிதத்தோடு எழுந்து நின்று ஒரு தடவை அசதி முறித்துக் கொண்டான். அவனுடைய கண்கள், வாளையும் ஈட்டியையும் தேடின. ஆனால் அவை காணவில்லை. பவளக் கொடி முத்துச் சிப்பிகளைக் கட்டும்

பொழுது வாளையும் ஈட்டியையும் சேர்த்துக் கட்டி விட்டது. இத்தனை நாட்களும் அவன் உடன் இருந்து காதுகளைக் கொன்று அவனைப் பாதுகாத்த அந்த ஈட்டியையும் வாளையும் இழந்து விட அவனுக்கு மனம் வரவில்லை. இருந்தாலும் அதை அவிழ்த்து எடுக்கப் போய் ஏதேனும் அசம்பாவிதம் நடந்து விடுமோவென்று எண்ணி முத்து இருந்த மாடத்தை நோக்கி மிகுந்த ஆவலோடு சென்றான்.

என்ன துரதிர்ஷ்டம்! அங்கே குமரி முத்து காணப்படவில்லை. மாடம் காலியாக இருந்தது. வீராங்கனுக்கு அழுகையே வந்து விடும் போல் இருந்தது. அப்பொழுது நல்ல காலமாக அவன் பார்வை அவன் புகுந்து வந்த சுரங்கப் பாதையில் விழுந்தது. அங்கே கண்ட காட்சி அவனுக்கு உயிரையே கொடுத்த மாதிரி இருந்தது.



மின்னல் பாய்வது போல் சுரங்கத்துக்குள் ஓடினான் வீராங்கன். சிறிது தூரத்தில் ஒரு பெரிய முத்துச் சிப்பி அழகும் அற்புதமும் வாய்ந்த குமரிமுத்தை தவாயில் கவ்விக் கொண்டு சென்று கொண்டிருந்தது.

அதனுடைய பக்தியைக் கண்ட அவன் கண நேரம் மனம் நெகிழ்ந்தான். பிறகு, தான் வந்த நோக்கத்தை நினைவுபடுத்திக் கொண்டு அந்த முத்துச் சிப்பியைப் பிடித்து முத்தை எடுத்துக் கொண்டு சிப்பியைக் கீழே அடித்துக் கொல்லுவதற்காக மேலே தூக்கினான்.

"ஐயையோ! என்னை நீ கொன்று விடாதே. எங்கள் மூதாதையர்களின் செல்வம் என்பதால் அதை நாங்கள் தெய்வம் போல் போற்றி வருகிறோம். அதைக் கவர்ந்து செல்ல முயன்ற எத்தனையோ பேர்கள் தோல்வியைத் தான் கண்டார்கள். ஆனால் நீ வெற்றி பெற்று விட்டாய். மகிழ்ச்சிதான். தாராளமாக எடுத்துக் கொண்டு போ. ஆனால் என்னைக் கொன்று போடாதே. இந்தச் சிப்பிகளுக் கெல்லாம் நான்தான் தலைவன். நான் இப்படி அநியாயமாக இறந்ததைக் கண்டால் அவைகளும் தங்களுடைய உயிரை மாய்த்துக் கொள்ளும். பின்பு கடல் உலகில் முத்து உற்பத்தியே இல்லாமல் போய் விடும்......"

இவ்வாறு கல்லும் கரையும்படி கண்ணீர் மல்கக் கூறியது அந்தப் பெரிய முத்துச் சிப்பி.

அதைக் கேட்ட வீராங்கனின் மனம் இளகியது. அந்தச் சிப்பியைப் பத்திரமாகக் கீழே இறக்கி விட்டான். அவன் கீழே இறக்கி விட்டதும் அந்தச் சிப்பி மேலும் கூறியது :

''தம்பி! உன்னுடைய கருணை உள்ளத்தைக் கண்டு பூரிப்பு கொள்கிறேன். நீ கபாடபுரத்தை அடைந்த பின்பு நீயும் உன் தாயாரும் மற்ற உலக மக்களும் நினைக்க முடியாத ஒன்று நடக்கப் போகிறது. நீ சீரும் சிறப்புமாக நீடூழி காலம் வாழ்வாய்!...இதோ இந்த வழியாகப் புறப்படு. வழியில் ஒரு ஆபத்து வரும். ஆனால் வீரத்தைக் கைவிடாதே.''

முத்துச் சிப்பி இவ்வாறு கூறி விட்டு அவன் பதிலுக்குக் கூடக் காத்திராமல் 'விடுவிடு'வென்று நகர்ந்து சென்று சிறிது நேரத்தில் அவன் பார்வையிலிருந்தே மறைந்து போய் விட்டது.

வீராங்கன் முத்துச் சிப்பி கூறியதைக் கேட்டு மகிழ்வெய்தினான். நினைக்க முடியாத அந்த நிகழ்ச்சி என்னவாக இருக்கும் என்று நினைத்து நினைத்துப் பார்த்தபடியே, முத்துச்சிப்பி காட்டிய வழியில் புகுந்து கடலுக்கு வந்து சேர்ந்தான்.

நெஞ்சுத துணிவும், விடாமுயற்சியும், கூரிய புத்தியும் ஒருவனிடம் அமைந்திருந்தால் அவன் மேற்கொண்ட காரியம் நிச்சயம் வெற்றி பெறும். எதிர்ப்பட்ட இன்னல்கள் மறைந்து இன்பங்களாகும்.

அத்தகைய குணத்தைக் கொண்டு வெற்றி பெற்ற வீரன் தான் வீராங்கன். அவன் வெற்றி பூர்த்தியாகாதபடி வழியில் இன்னும் சில சிறு தடைகள் ஏற்பட்டன. அவற்றையெல்லாம் நீக்கி விட்டு இராட்சத நண்டின் குகையை அடைந்தான்.

இராட்சத நண்டுகள் வெற்றியோடு திரும்பிய வீராங்கனைக் கண்டு ஒரே மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன.

வீராங்கன் தான் பத்திரமாகக் கொண்டு வந்திருந்த குமரி முத்தையும் குமரிப் பவளத்தையும் நண்டுகளுக்கு எதிரே எடுத்து வைத்தான். அந்த ஜகஜ் ஜோதியான முத்தையும் பவளத்தையும் பார்த்த நண்டுகள் இரண்டும் இரண்டு நொடியில் உண்மையான உருவத்தை அடைந்து விட்டன.

வீராங்கன் அந்தப் பிரமிப்பூட்டும் காட்சியைக் கண்டு வியந்தபடியே அவர்களை வணங்கினான். தேவர்கள் இருவரும் அவனைத் தூக்கி மிகுந்த அன்போடு அணைத்துக் கொண்டார்கள்.

பிறகு, ''குழந்தாய்! உன் வீரத்தை மெச்சினோம். எங்கள் சாபத்தைப் போக்கிய உனக்கு எங்கள் அன்பின் அடையாளமாக இந்த முத்துக் குவியலையும், பவளக் குவியலையும், சங்குக் குவியலையும் தரு

கிரேம். இதைத் தவிர அற்புத சக்தி வாய்ந்த ஒரு படகும் தருகிரேம். அதில் இவற்றை ஏற்றிக் கொண்டு உன் நாட்டுக்குச் செல். வழியில் ஒரு பெரும் ஆபத்துக் குள்ளாவாய். எத்தனை ஆபத்து வந்தாலும் குமரி முத்தை மட்டும் பிறர் கையில் கொடுத்து விடாதே. நீ ஊர் போய்ச் சேருகிற வரையில் குமரிமுத்தை ஒருவரிட மும பார்ப்பதற்காகக் கூடக் கொடுக்கக் கூடாது. இதில் மிகவும் எச்சரிக்கையாக இரு'' என்று கூறி மறைந்து விட்டார்கள்.

அவர்கள் மறைந்த இடத்தில் வெள்ளி நிறமுடைய படகு ஒன்று காட்சி அளித்தது. அதில் முத்தையும் பவளத்தையும் சங்கை யும் ஏற்றிக் கொண்டு குமரிப் பவளத்தை யும் எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டு படகில் ஏறி அமர்ந்தான். இதைத் தவிர, தங்கத் தீவுக் கிழவன் கொடுத்த நான்கு குடுவைகளும் அவன் இடையில் இருந்தன.


வீராங்கன் படகில் ஏறி அமர்ந்ததும் அது தானகவே நகர ஆரம்பித்தது. சில விநாடிகளில் கடல் மட்டத்தை அடைந்து வடக்கு நோக்கிச் சீரான வேகத்தில் போகத் துவங்கியது.

வீராங்கனுக்கு ஒரு புதிய உலகுக்கு வந்ததைப் போல் இருந்தது. தன் உடம்பை யும் கைகால்களையும் ஒரு முறை தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். வானத்தையும், சூரியனையும், மேகத்தை யும் மாறி மாறிப் பார்த்தான். அவன் கடலுக்குள் சென்று எவ்வளவு நாட்கள் ஆகி விட்டன!

வீராங்கனுக்குப் பசி எடுக்க ஆரம்பித்தது. பசியை எப்படித் தீர்த்துக் கொள்வது என்று அவனுக்குப் புரிய வில்லை. படகு நிறைய முத்தும் பவளமும் இருக்கின்றன. ஆருல் அவன் பசியைத் தீர்க்கும் சக்தி அவைகளிடம் இருக்க வில்லை. இதை எண்ணியபொழுது விலையுயர்ந்த முத்தும் பவளமும் அவனுக்குத் துச்சமாகத்தான் தென்பட்டன.

எல்லாமே உணவுக்கு அடுத்தபடிதான் என்று எண்ணிய வீராங்கன் முதலில் தங்கத்தீவுக்குப் போய்ப் பசியைத் தணித் துக் கொண்டு, இந்த மாபெரும் வெற்றிக் குப் பேருதவி புரிந்த தங்கத் தீவுத் தாத்தா வுக்கு நன்றி கூறி அவரையும் அழைத்துக் கொண்டு கபாடபுரத்துக்குச் செல்ல வேண் டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

படகு தங்கத் தீவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. அவன் 'நில்' என்றால் படகு நின்றது. 'போ' என்றால் வேகமாகப் போயிற்று. தேவர்கள் கொடுத்த படகு அல்லவா? அதனல் அது அத்தனை சக்தி பெற்றிருந்தது. (தொடரும்)



தலை மாணவி - சுசீலா

செலவழிந்த சக்தியை அவளுக்கு திரும்பத்தந்து உதவும் சமையல் சாதனம் காமதேனு வனஸ்பதி

சுசீலா வகுப்பிலும், விளையாட்டிலும் எப்பொழுதும் முதல் வருபவள். தேக ஆரோக்கியம், புத்திசாலித்தனம் இரண்டும் உள்ளவள்; உற்சாகம், தெம்பு நிறைந்தவள்.

சுசீலாவின் இல்லத்தில் உபயோகிக்கப்படும் சமையல் சாதனம் காமதேனு வனஸ்பதி. கைபடாமல், சாஸ்திரீய முறையில் தயாரிக்கப்படும் காமதேனு வனஸ்பதி நெய்போன்றது. ஆனால் விலை குறைவானது. கண்பார்வைக்கு தேவையானதும், சரும உபாதைகளை போக்க வல்லதுமான வைடமின் 'A' கலக்கப்பட்டது.

36 பவுண்டு டின்களிலும் 10, 5, 2 பவுண்டு டின்களிலும் கிடைக்கும்

காமதேனு - இல்லாள் கைகண்ட வனஸ்பதி



தயாரிப்பு:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா


மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:

சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

MC-527

குங்குமம்

கோமதி நாகராஜன்



தர்முவுக்கு அன்று மூச்சுவிடக்கூட நேரமில்லை. மருமக்கள் நால்வரும் சமையற்கட்டில் ஓடி ஓடி வேலை செய்து கொண்டிருந்தனர். காமிரா அறையில் பிள்ளைகளும், பேத்திகளும் உரக்கப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர். பல வருஷங்களுக்குப் பிறகு நேற்றுத்தான் ஒன்றுசேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் சந்தோஷத்தைக் கலைக்க விரும்பாத தர்மு டபராவில் மாக்கோலத்தைத் தயாரித்தபடி கூடத்துக்கு வந்தாள்.

கோலச் சித்திரத்தில் ஆழ்ந்திருந்த தர்மு கணவரின் கனத்த குரலைக் கேட்டு எழுந்தாள். கையில் அழைப்பிதழ்களைச் சுமந்து கொண்டு உள்ளே வந்தார் சபேசன். ''எல்லோருக்கும் பத்திரிகை அனுப்பி விட்டேன்; வழக்கம் போல் உன் பெரிய மருமகளுக்கும் ஒன்று அனுப்பி வைக்கட்டுமா?'' என்று மனைவியிடம் வினவினார்.

''அனுப்பினாலும் அவள் எங்கே வரப் போகிறாள்? பெரிய இடத்து மனுஷி'' என்று உதடுகளைக் கடித்துக் கொண்டாள் தர்மு.

''கடனுக்கு ஒன்று போட்டு வைக்கிறேன்.'' சபேசன் ஓர் பத்திரிகையை எடுத்து வேண்டா வெறுப்புடன் விலாசம் எழுதினார்.

அப்பொழுதுதான் உள்ளே நுழைந்த பாஸ்கரன், ''யாருக்கு? பெரிய மன்னிக்குத்தானே? அப்படியே அவளையும் புறப்பட்டு வரச்சொல்லி ஓர் கடிதம் எழுதுங்கள், அப்பா!'' என்றான்.

தர்மு கோபம் கூத்தாடும் முகத்தைத் திருப்பி மகனை நோக்கினாள்; ''ஏண்டா! தெரிந்துதானா பேசுகிறாய்? அவள் இந்த வீட்டு உறவை அறுத்துக் கொண்டு போய்ப் பதினாறு வருஷங்களாகின்றன. நல்லது பொல்லாதது ஒன்றுக்குக் கூட அவள் எட்டிப்பார்க்கவில்லை. இப்பொழுது உன்னுடைய கல்யாணத்துக்கு வந்து நிற்கப் போகிறாளோ, மகாராணி?'' கொடூரம் கொட்டும் முகத்தைக் குலுக்கினாள்.

''மற்றவர்கள் விஷயம் வேறு. என்னை மடியிலே போட்டு வளர்த்தவளே அவள்தானே? அந்த அன்பு மறந்திருக்குமா! நான் நன்றாயிருப்பதைக் கேட்க ஓடோடி வருவாள் பார்!'' என்று தாயிடம் அழுத்தமாகக் கூறி விட்டு, ''நீங்கள் கடிதத்தை எழுதி என் கையில் கொடுங்கள், அப்பா! நான் தபாலில் சேர்த்து விடுகிறேன்'' என்று தந்தையிடம் கூறினான்.

''அவள் வளர்த்த தோஷம்தான் உனக்கும் அந்தப் பிடிவாதம் உரமேறியிருக்கிறது.''

தந்தை எழுதிய கடிதத்தை வாங்கிப் படித்தான். பாகைளுக்கு என்ற வார்த்தைக்கு முன்பு 'உன்' என்று திருத்தம் செய்து கடிதத்தை உறையிலிட்டான். அதையும், பத்திரிகையையும் எடுத்துக் கொண்டு சைக்கிளில் விரைந்து சென்றான்.

விரலினின்றும் சிதறிச் சொட்டிய மாவை ஈரத்துணியால் அழித்து விட்டு, மீண்டும்

கோலம் போடுவதில் மூழ்ந்தாள் தர்மு. தெறித் தெறித்த அந்தச் சம்பவத்தை மட்டும் மனத் திரையிலிருந்து அவளால் அழிக்கவே முடியவில்லை.

"உங்கள் பெரிய மன்னி இந்தக் கல்யாணத் துக்கு வரப் போகிறாளாமே? கடிதம் பறக் கிறதே?" பின்கட்டில் இளைய மருமகள் கணவனைக் கேட்டாள்.

"அவள் இந்த வீட்டுப் படியேறி வர மாட் டாள்."—இது பிள்ளையின் பதில்.

"அப்படி என்ன மனஸ்தாபம் திரும்பிக் கூடப் பாராதபடி...?" என்று வினவினாள் சின்ன மருமகள். அவள், கணவன் வீடு புகுந்து முழுசாக ஒரு வருடம் கூட ஆகவில்லை. புக்க கத்தைப் பற்றிய விவரங்களை அறிய ஆவல்!

"அது பெரிய கதை. இப்பொழுது நேர மில்லை. பத்து மணிக்குள் புடவைக் கலம் தயாராக வேண்டும். வேலையைப் பார்ப் போம், வா." சாரதா புடவையைக் கொசு வியபடி உள்ளே சென்றாள்.

கைகள் தரையில் சித்திரமிட்டுக் கொண் டிருக்க, தர்முவின் மனம் கடந்த காலச் சித்தி ரத்தைத் துருவிக் கொண்டிருந்தது.

★

சபேசன் பெரிய உத்தியோகத்தில் இருந் தார். ஆறு மாதங்களுக்கு ஒரு தரமாக நிலை யின்றி வேலை மாற்றம். தர்முவும் குடித்தனத் தைக் கலைப்பதும் போடுவது மாகச் சுற்றிக் கொண்டிருந் தாள். பெரிய மகன் விசுவ நாதன் மட்டும் படிப்பை முடித்துவிட்டு வேலையில் இருந் தான். மற்றப் பிள்ளைகளுக் குப் படிப்பு வசதியின்றித் திண்டாடிக் கொண்டிருந்தார் சபேசன். இந் நிலையில் பார் வதி அந்த வீட்டின் மூத்த மரு மகளானாள். பார்வதி முகம் கோணாது குடும்பத்துக்கு உழைத்தாள். இப்பொழுது தர்முவுக்குப் பிள்ளைகளைப் பற் றிய கவலை விட்டது.



குடும்ப பாரம் பார்வதியின் தலையில் சுமத்தபொழுது அவள் மலைக்கவில்லை. மூன்று வயதுக் கடைசிப் பையன்கூட அவளிடம் ஒட்டிக் கொண்டு விட்டான். அவனைத் தோளிலே போட்டுச் சீராட்டி வளர்த்தாள். அனுபவமும், முதிர்ச் சியும் அடைவதற்கு முன்பே பார்வதி உழைப் பைத் தூணாக நிறுத்திப் பெரிய சம்சாரத்தை நிர்வகித்து வந்தாள். இடையே வந்த பார் வதியின் சகோதரன் அவளது சிறை வாழ்க் கையைக் கண்டு சீற்றம் கொண்டான்.

பத்து வருடங்கள் ஓடின. இரண்டு வயதுப் பெண் குழந்தையுடன் பார்வதியின் வாழ்வு துளிர்த்து வரும் பொழுது, மங்கள வாழ்வு பறிக்கப்பட்டு விட்டது! கணவனை இழந்த அதிர்ச்சி மென்மையான இதயத்தைத் தாக்கிய பொழுது, நெற்றியில் இலகும், மஞ்சள் சரடும் உறுத்தச் சுற்றி வந்த அந்த வீட்டில் பழைய நினைவுகளைச் சுமந்து கொண்டு தங்க அவளது மனம் இடம் தரவில்லை.

கணவனது காரியங்கள் முடியவும், குழந்தை யின் கையைப் பிடித்துக் கொண்டு சகோதர னுடன் கிளம்பிய பார்வதியைக் காணவும், தர்முவுக்கு மகனை இழந்த துக்கத்தைவிடப் பன்மடங்கு அகங்காரம் கொதித்து எழுந்தது.

"என் தங்கையை நான் அழைத்துப் போகி றேன். அவளுடைய பாத்திரங்கள், நகைகள், சேரவேண்டிய அவள் பங்கு சொத்து எல்லா வற்றையும் கொடுத்து விட்டால் நல்லது" என்றான் சபேசனிடம்.

தர்மு ரௌத்ராகாரமானாள். "சீ! இந்தச் சமயத்தில் இந்தப் பேச்சை எடுக்க வெட்க மாக இல்லை? பெற்ற மனசின் கொதிப்பு இன்னும் அடங்கவில்லை."

"என் தங்கையின் துக்கத்தை விட யாருடைய கொதிப்பும் எனக்குப் பெரிதல்ல. உங்கள் உழைப்பு மாடாகப் பன்னிரண்டு வருஷப் பொறி அவளுக்கு இங்கு போட்டு வைத்திருந்தது. இனி உழைப்பு, கடன் ஒன்றும் பாக்கி வேண்டாம்" என்றான் நெடு நாளையச் சீற்றம் பீறிட்டெழ.

"புண்பட்ட மனத்தைக் கோலிட்டுத் துன் புறுத்தும் நீயும் ஒரு மனித ஜன்மமா? படி யேறி வந்து வார்த்தைகளைக் கொட்டுகிறானே, பாவி!" என்று உரக்கப் பிரலாபித்தாள் தர்மு. மருமகளின் துன்பத்தை அளவிட்டவ ராக மௌனம் சாதித்தார் சபேசன்.

"உங்கள் அல்பத்தனத்துக் குப் பிரதி ஒரு நாள் கிடைக் கும். சொத்தை வாங்கிக் கொள்ளும் விதம் எனக்குத் தெரியும். ஆனால் என் தங்கை இனிமேல் இந்த வீட்டு வாசற் படி ஏறி வர மாட்டாள்...... இது சத்தியம்" என்று சூளுரை விட்டபடி கண்ணீர் பொங்க நின்ற பார்வதியை இழுத்துக் கொண்டு வண்டியேறினான்.

அன்று அறுந்த உறவுதான்! கோர்ட்டில் வழக்கு போட்டுத் தங்கையின் பங்கை வாங்கி னான். பதினாறு வருடங்களில் தர்முவுக்கு நாலு மருமக்கள் வந்து விட்டனர். பேரன் பேத்திகள் கூட எடுத்து விட்டாள். கல்யா ணங்களும், பண்டிகைகளும் மாறி மாறி வந்தன. பார்வதி திரும்பிக் கூடப் பார்க்க வில்லை. தலைவன் இட்ட தலைக்குள் அவளது வாழ்க்கைச் சக்கரம் ஓடிக் கொண்டிருந்தது.

நினைவுப் புயலினின்றும், சிந்தனை மீண்ட வளாக டபராவை 'ணங்' கென்று சத்தம் கேட்கும்படியாகக் கீழே வைத்தாள் தர்மு.

★

புடவைகளை மடித்துப் பெட்டியில் அடுக் கிக் கொண்டிருந்த பார்வதியின் கைகள் நடுங்கின. நீண்ட வருடங்களுக்குப் பிறகு சந்திப்பு! இதயத்தில் பழைய அனுபவங்களின் தழும்பு உறுத்தியது.

"அம்மா! சித்தப்பா கல்யாணத்துக்கு நீ போகப் போகிறாயா?" மாலா தாயின் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள். வய துக்கு மீறின தளதளப்பு! இளமையின்

வசீகரம்! தாயின் மனம் கலங்கியது. பார்வதி லேசாகத் தலையசைத்தாள்.

"நானும் வருகிறேன், அம்மா! அப்பா வழி மனிதர்களையும் நான் பார்க்க வேண்டாமா?" தாயின் தோள்களை வருடிக் கொண்டே கெஞ்சினாள்.

பார்வதியின் சிந்தனை சிறகடித்துப் பறந்தது. "எல்லாக் கல்யாணங்களுக்கும் இதே அழைப்புத்தான். போகவே நாட்டமில்லை. 'உன்' பாஸ்கரனுக்கு என்ற வாசகங்களைப் படித்தால் பறந்து வந்து விடுவேன் என்ற ஆவல் அவளுக்கு. இப்பொழுது பாஸ்கரன் வளர்ந்து வாட்டசாட்டமாக இருப்பான்." பார்வதியின் இமைகள் தாழ்களை உடைத்தெறிவன போல் கொட்டிக் கொட்டி விரிந்தன.



"அம்மா! என்னையும் அழைத்துப் போகிறாயா?" மாலாவின் கேள்விக்குப் பதில் வெளிவரவேயில்லை. அவளது புடவைகள் பெட்டிக்குள் புகுந்தன. மாலா சிறுமி போல் பாடிக் குதித்தாள்.

ஸ்டேஷனுக்குப் பாஸ்கரன் வந்திருந்தான்.

"பாஸ்கரா!" கணவனின் பிரதிச்சாயலாக நின்ற பாஸ்கரனைக் காணவும் பார்வதியின் கண்டம் அடைத்தது.

"இந்தச் சுண்டைக்காய்ப் பெண் இப்போது எப்படி வளர்ந்திருக்கு! கீழே இறங்கடி, மாலா!" என்று மாலாவின் பின்னலைப் பிடித்து இழுத்துக் கேலி செய்தான் பாஸ்கரன்.

வண்டியிலிருந்து இறங்கிய பார்வதியை மைத்துனர்களும், ஓரகத்திகளும் மூலைக்கொருவராக நின்று கொண்டு ஜாடையாகக் கவனித்தனர். அவர்கள் முகங்களில் அலட்சியம் தேங்கி நின்றது.

பிரிந்து சென்ற கிளைநதியின் சங்கமம்!

"வழி தெரிந்ததா அம்மா இந்த வீட்டுக்கு?" தர்முவின் குரோதம் பொங்கிய விழிகள் மாலாவின் மேல் பதிந்தன.

பார்வதி வறண்ட புன்னகை செய்தாள். விரிந்த கலசத்தினின்று பெருகிய உணர்ச்சி வெள்ளம் கண்களுக்குக் கரை கட்டின. அவை கண்ணீர் முத்துக்களைச் சிந்துவதற்குள் விடுவிடென்று உள்ளே போய் விட்டாள். பாலு, சாமா இருவரும் கல்யாணத்துக்கு வந்த புதிய முகத்தைப் பார்ப்பது போல் கடந்து சென்று விட்டனர். பன்னிரண்டு வருஷங்கள் அவர்களுக்கு உழைத்துத் தேய்ந்த உடலம் அடிபட்ட பறவைபோல் துடித்தது.

"இந்த அறையில் உங்கள் சாமான்களை வைத்துக் கொள்ளுங்கள், மன்னி!" பாஸ்கரன் பெட்டி படுக்கைகளை உள்ளே வைத்து விட்டு வெளியேறினான்.

அறை முழுவதும் சுழன்ற பார்வதியின் கவனம் எதிரேயிருந்த புகைப்படத்தின் மீது சென்றது. வளிந்த ரோஜா ஹாரத்துக்கு நடுவே விசுவத்தின் புன்னகை! பாஸ்கரன் மட்டும் அண்ணனின் அன்பை மறக்கவில்லை! பார்வதி ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். மாலாவின் உள்ளத்தில் புரியாத வேதனை ஊற்றெடுத்துப் பெருகி வழிந்தது.

"இந்தாருங்கள்! காப்பி சாப்பிடுங்கள்" என்று கூஜாவை மேசையின் மேல் டக்கென்று வைத்து விட்டுப் போன பெண்மணியை வெறுப்புடன் நோக்கினாள் மாலா.

"வந்ததும் வராததுமாக அபசகுனம் போல் அழுகிறீர்களே. இவளுக்கு எல்லாம் அஸ்தமித்து விட்டதென்றும் இருக்கிறவர்கள் நன்றாய் இருக்க வேண்டாமா?" கூடத்திலிருந்து வந்த குரலைத் தொடர்ந்து, மாலா அலங்காரத்துடன் படீரென்று அறையின் கதவைச் சாத்தினாள்.

"அம்மாவின் பாதி அகந்தை இருக்கும் போலிருக்கிறதே!"

பார்வதி கனன்ற கண்களுடன் மாலாவை நோக்கி, "மாலா! நீ என்ன சிறு பெண்ணா மனிதர் முகமறியாது நடந்து கொள்ள?" என்று கடிந்து கொண்டாள்.

"வரவேற்பிலேயே தெரிகிறதே, மனிதர்கள் தன்மை!"

மாலாவின் மகிழ்ச்சி யாவும் தெறித்தேய்ந்து ஒழிந்தது.

பார்வதி பதிலொன்றும் சொல்லாது அவள் மனத்தை மாற்றுவதற்குப் பின்கட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

பார்வதி அவளுக்கே உரித்தான புன்னகை செய்தாள். அதில் வேதனை கொட்டியது. அவள் அந்த வீட்டிலே வாழ்ந்த சுவடு கால வெள்ளத்திலே கரைந்துவிட்டது. அவள் யாருக்குப் பதில் கூற வேண்டும்?

கல்யாண காரியங்கள் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தன. சாரதாவும், லட்சுமியும் பூத்தொடுத்துக் கொண்டிருந்தனர். "பெரியவளாக வந்திருக்கிறாளே, நாலு காரியங்களை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யக் கூடாதா? இன்னமும் அவள் பார்வை இந்த வீட்டைச் சுருட்டிக் கொள்ளாதது என்ன பாக்கியிருக்கிறது என்ற ஆராய்ச்சியில்தான் இருக்கிறது" என்று உரத்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

மாலாவின் முகம் கோபத்தில் சிவந்தது. பார்வதியிடம் வந்து, "உன்னை அலட்சியம் செய்யும் இந்த மனிதர்களை எடை போட்டுத்தான் மாமா இத்தனை வருடங்கள் நம்மைத் தூரத்திலேயே வைத்திருக்கிறார்!" அவளது உதடுகள் துடித்தன.

"மாலா! நீ இதையெல்லாம் மனத்தில் வைக்கக் கூடாது. பிரிந்துசெல்லும் கிளையைப் பற்றித் தாய் நதி கவலைப்படுவதில்லை. இது இயற்கையின் நியதி" என்றாள் மகளை நோக்கி.

வாசற் பக்கம் குழந்தைகளின் ஆரவாரம்! பார்வதி எட்டிப் பார்த்து விட்டு, "மாலா! உன்னுடைய ஒரே அத்தை ஊரிலிருந்து வந்திருக்கிறாள். போய்ப் பார்" என்றாள்.



"ஒண்ணு வாங்கிக் கொள்கிறீர்களா?"

"இனி நமக்குப் ஒரு போக்கு கிடைக்கும். விடு அம்மா, இந்த உறவை." மாலாவின் இதயத்தில் எப்படி இவ்வளவு வெறுப்பு விசுவரூபம் எடுத்தது? பார்வதி நீண்ட பெருமூச்செறிந்தாள்.

"பார்வதி! எங்கள் நினைவு கூட வந்ததா?"

வைரங்களால் குலுங்கி நின்ற அத்தையைக் கசந்த நினைவுகளுடன் நமஸ்கரித்தாள் மாலா. அத்தையின் பின்னே அந்த இளைஞன் நின்று கொண்டிருந்தான். பளீரென்று துலங்கிய உடையில் நெடிதுயர்ந்த கம்பீரம்! விழுங்கும் கண்கள் மாலாவை ஊடுருவித் துளைத்தன.

இரவு ஏழு மணி. தூரத்திலிருந்து வந்த நாதசுர ஒலி மாப்பிள்ளை அழைப்பை அறிவுறுத்தவே மாலா வாசற்புறம் வந்தாள். கூடம் சந்தடியின்றி வெறிச்சென்று இருந்தது. தூரத்தே காஸ்லைட்டின் ஒளியில் பெண்களின் சிரிப்பலைகள் மிதந்து வந்தன.

"மாலா! இந்தத் தட்டில் சர்க்கரை எடுத்துக் கொண்டு வருகிறாயா?" சுந்தர் கையில் தட்டுடன் பின்புறம் நின்றுகொண்டிருந்தான். மாலாவின் உள்ளத்தின் ஒரு மூலையில் வெறுப்பு தலைதூக்கியது. அலட்சியமாகப் பின்னலை வீசியபடி உள்ளே திரும்பினாள்.

"நானும், என் தாயாரும் இந்த வீட்டுக்கு அறிமுகமில்லாத புதிய விருந்தாளிகள். சாமான் இருக்கும் இடம் தெரியாது..."

சுந்தர் வலிய அவள் கைகளைப் பற்றித் தட்டை அவள் கையில் கொடுத்தான். "இதோ பார், மாலா! உன் விருப்பு வெறுப்புகளை அப்புறம் காட்டிக் கொள்ளலாம். முதலில் சாமான் அறையிலிருந்து சர்க்கரை எடுத்துக் கொண்டு வா. ஊர்வலம் நெருங்கி விட்டது" என்று சிரித்தபடியே கூறினான். கண நேரத்தில் அவளது பார்வை அந்தச் சுந்தர வதனத்துடன் கலந்தது. அதன் தண்மை நெஞ்சை நிறைத்தது.

இரவு பெண்கள் பந்தியில் சந்தடி! கடைசிப் பந்தி ஓயும் நேரம் மாலா ஒளியிலிருந்தும் விலகியவளாக, மாடி வராந்தாவின் கைப்பிடிச் சுவரின் மீது சாய்ந்தபடி எண்ணங்களில் குளித்துக் கொண்டிருந்தாள். எல்லாக் களியாட்டங்களிலிருந்தும் விலக்கப்பட்ட தாயின் துன்பம் முன் போன்று உறுத்தியது. நெஞ்சை கசக்கும் அனுபவங்கள்! உதட்டினை நெருடிய விரல்கள் இனித்தன. "சர்க்கரை எடுத்த பின் கையைக் கழுவ வில்லையோ? கைக்கும் சிந்தனையூடே இனிக்கின்ற நினைவுகள் எங்கிருந்து வருகின்றன?"

"மாலா! இன்னமும் சாப்பிடாமல் இன்று என்ன உண்ணாவிரதம்?" நட்சத்திரங்களின் மெல்லொளியில் சுந்தர் நெருங்கி வந்தான்.

"எனக்குப் பசிக்கவில்லை. நீங்களெல்லாரும் சாப்பிடுங்கள்." "ஒருவரைப் பட்டினி போட்டு விட்டு, நாங்கள் மட்டும் சாப்பிட அப்படி இதயமற்றவர்களல்ல நாங்கள்..." அவன் குரல் குழைந்தது.

மாலா விருட்டென்று வராந்தாவைக் கடந்து உள்ளே வந்தாள். அவள் அதரத்தில் ஏளனப் புன்னகை நெளிந்தது. "இந்த வீட்டிலுள்ள மனிதர்களுக்கு இதயம் கூட இருக்கிறதா?"

"மாலா! உனக்கு ஏன் இவ்வளவுகோபம்?" வராந்தாவில் பாஸ்கரனின் நிழல் ஆடியது.

மாடி அறையில் கூடியிருந்த பெண்கள் வாயில் வம்பு புரண்டு கொண்டிருந்தது.

"அம்மாவும், பெண்ணும் வந்திருக்கிறார்களே, கலகலவென்று எல்லாரோடும் பழகினால் என்ன? வாழ வந்த மற்றப் பெண்கள் கொழிக்கிறார்களே என்று..." அத்தை அதை முடிக்கவில்லை. பின்னாலிருந்து ஒரு குரல் சீறி ஒலித்தது.

நெற்றி நரம்புகள் தெறிக்க, உதடுகள் துடிக்கத் தாயின் பிரதிநிதியாகக் கொழித்து நின்றாள் மாலா. "அத்தை! அம்மாவையும் என்னையும் வேண்டுமென்றே அழைத்து அலட்சியப்படுத்துவதற்குத்தானா இந்த அழைப்பு? அறுந்த உறவை இணைக்க அன்போடு வந்தால், தாயாரை ஏன் சொல்லால் சுடுகிறீர்கள்? இதோ தெய்வமாகி விட்ட என் தந்தைக்குப் பிறகு எங்கள் உறவும் போயிற்றென்றால் இப்பொழுதே விடை கொடுங்கள். நாங்கள் போகிறோம். போதும் உங்கள் உதாசீனம்." கண்களின் கருக்களில் கண்ணீர் திரையிட்டது.

பாஸ்கரன் உள்ளே வந்தான். "பொறு, மாலா! பிரிந்து செல்வதற்காக இந்தச் சந்திப்பை நான் ஏற்படுத்தவில்லை. பல வருடங்களுக்குப் பிறகு மன்னி வெறுங்கையுடன் வரவில்லை. ஒரு விலையில்லா ரத்தினத்தைக் கொண்டு வந்திருக்கிறாள். அக்கா! அதை உரியபடி நீ பெற்றுக் கொள்" என்றான், தன் தமக்கையிடம்.


"அம்மா! எந்த மகளின் சொத்து உன்னை விட்டுப் போய் விட்டது என்று பிரலாபித்துக் கொண்டிருந்தாயோ, அதை இப்பொழுது இரட்டிப்பு மடங்காகப் பேரன் கல்யாணத்தில் வாங்கிக் கொண்டு விடு. என்ன, சுந்தர்! நான் சொல்வது சரிதானே?" என்றான் பாஸ்கரன் புன்னகையுடன்.

பார்வதியின் உள்ளம் பொங்கிப் பூரித்தது.

சுந்தரின் முகத்தில் மலர்ந்த குறும்புப் புன்னகை கண்களை ஊடுருவ மாலா தலை குனிந்தாள். அந்த இரு ஜோடிக் கண்களின் சங்கமத்திலே, பிரிந்து கிடந்த அந்த இரு குடும்பங்களின் சங்கமமும் இணைந்தது.


அவன் சொல்வது சரியே. பித்தளை,
தாமிர சாமான்களில் பிராஸோ
ஏற்படுத்தும் மாறுதலைப் பற்றி
அவன் கண்டறிவான். பிராஸோ
சுத்தம் செய்வதோடு பளபளப்
பாகவும் செய்கிறது — அதுவும்
மிருதுவாக, விரைவாக, எளிதாக.
"பிராஸோ மட்டுமே
பித்தளையை அவ்வளவு
பளபளப்பாகச்
செய்கிறது"
BRASSO
திரவம் அல்லது பசை
பிராஸோ
மெட்டல் பாலிஷ்
உங்கள் வீட்டிற்கு பிரகாசத்தை
கொண்டுவருகிறது
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப் பெற்றது)


வஸந்தத்தின் புத்துணர்ச்சி
உங்களுக்கு இன்றும்..என்றும்
மிக்க கீர்த்தி வாய்ந்த காஷ்மீர் பொக்கே
உங்கள் உடலுக்கு இளவேனிற்காலயின்
புத்துணர்ச்சியளிக்கிறது...
அதைக் குளிர்ச்சியாகவும்
வாசனை திகழவும்
வைக்கிறது.
Cashmere Bouquet
காஷ்மீர்
பொக்கே
டால்கம் பௌடர்



64. நேயர்கள் கடிதம்

கடிதம் 160/2ல் ராஜகிரி சகோதரி எழுதுகிருர், தனது சகோதரர் ஒருவருக்கு ;

''விஷ சம்பந்தத்தால் (காணு கடி) உடம்பெல்லாம் வட்ட வடிவாக ஓரங்களில் தடிப்பாகப் பத்து, 20 வருஷங்களுக்கு மேல் ஏற்பட்டது. பின் பல.........மருந்தில் தடிப்புகள் மறைந்தன. பூர்ண சுகம் கிடைக்கவில்லை. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தடிப்பு வரும். ஏதாவது இன்ஜெக்ஷன் போட்டால், மருந்து சாப்பிட்டால் மறைந்து விடும். பின்னுல், சென்ற நான்கு வருஷங்களாய்க் கை கால் எரிச்சல், வலி, தூக்கமின்மை ஏற்பட்டன. அதற்கு ஒரு......டாக்டரிடம் சிகிச்சைக்குப் போனதில் மார்பியா ஸல்பேட் இஞ்செக்ஷன் போட்டு எரிச்சலேயும் வலியையும் நிறுத்தினுர்கள். தூக்கமும் வந்தது. பின் அதுவும் மாறிவிட்டது. இப்போது வாரத்தில் ½ கிரெயின் அல்லது ¼ கிரெயின் மார்பியா ஸல்பேட் இஞ்செக்ஷன் போட்டாக வேண்டும். அது போடா விட்டால் அவரால் ஒரு நிமிஷம் கூட நிம்மதியாக இருக்க முடியாது. முதலில் மார்பியா போட்ட.........டாக்டர் இறந்து விட்டார். பின் பல டாக்டர்களைக் கலந்ததில் அவர்கள் சொல்லும் மருந்துகள் ஒன்றும் பலனளிக்கவில்லை. இவர் ஏழை. டாக்டர்கள் இந்தஊசி போட அதிகப்பணம் கேட்கிருர்கள். இவருக்கு வயது 50. இப்போது வாரத்துக்கு 2 ஊசியாவது போட வேண்டும். மாதத்துக்கு 8 ஊசி ஆகிறது. ஆனுல் இந்த ஊசியைப் போட டாக்டர்கள் மறுக்கிருர்கள். இந்த ஊசி போடாமல் வேறு ஏதாவது முறை இருந்தால் எழுதவும். உங்களுக்கு மிகவும் நன்றி உடையவர்களாக இருப்போம்.''

அம்மணி ! மார்பியா பழக்கத்தை நிறுத்துவது அவ்வளவு எளிதல்ல. கள் அரக்கனுக்கு அடிமையானவரை மீட்பதைப் போலவே கடினமானது.

கை கால் எரிச்சல்—வலிகளையும், உடம்பில் வரும் அர்டிகேரியாவின் (சீதபித்தம்) வட்ட வட்டமான தடிப்புகளையும் போக்கச் சிகிச்சை செய்யலாம். இவை ஓரளவு குணமாகுமானுல் மார்பியாவைக் கேட்காமல் இருக்கலாம் அல்லவா ? அவ்வளவு தான் அம்மா செய்ய முடியும். பலன் கிடைப்பதற்குச் சிறிது தாமதமாகும். ஆயினும் பொறுமையுடன்உபயோகித்து வந்தால் குணமில்லாமல் போகாது.

முதலாவதாக இவருக்குத் தினமும் இரவில் படுக்கப் போகுமுன் ஒரு தோலா அளவு மாணிபத்ரகுடம் என்ற மருந்தைக் கொடுத்து வரவேணும். மாணிபத்ரம் என்பதிலும் ஒரு சிறிய வித்தியாசம் அவசியம். திராக்ஷையின் கஷாயத்தில் வெல்லத்தைக் கரைத்துப் பாகு வைத்துப் பிறகு மாணிபத்ரகுடத்துக்குச் சொன்ன பிரக்ஷேப சூர்ணத்தைக் கூட்டிக் கிண்டியதுதான் இவருக்கு நல்லது. இதனுல் ஒன்றிரண்டு தரம் தினந்தோறும் மல சோதனை ஏற்படும்.

தவிர, வாரத்தில் ஒருநாள் திராக்ஷாதி கஷாயத்தைக் குடிக்கச் சொல்லி மூன்று நான்கு தரம் மலசோதனை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். இவ்விதப் பிரயோகத்தால் பலஹீனம் ஏற்படாது.

காலை மாலை ¼ தோலா அளவு குடூசீஸத்வம் என்னும் சீந்திற் சர்க்கரையை வாயிலிட்டு, குடூச்யாதி கஷாயம் அல்லது சீதகஷாயம் இரண்டு அவுன்ஸ் அளவை அதன் மேல் அனுபானமாகக் குடிக்க வேண்டும்.

பரிணதகேரீக்ஷீராதி (பழுத்த தேங்காயின் பால்) என்ற தைலத்தை எரிச்சல் எடுக்கும் உள்ளங்கால் உள்ளங்கைகளில் சதா சொட்டச் சொட்டத் தடவி வைறவிடுவதோடு அதையே தினந்தோறும் உடம்புக்குத் தேய்த்துக் குளித்து வர வேண்டும்.

பகல் இரவு போஜனத்துக்குப் பிறகு ½ தோலா விதம் ச்யவனபிராச ரஸாயனத்தைச் சாப்பிட்டு வரவும் சொல்ல வேண்டும்.

ஒன்றிரண்டு மாசமான பிறகு குணகுணங்களை எழுதவும்.

கடிதம் 163/2ல் அம்லதாஹி (சித்தரஞ்சன்) சகோதரி எழுதுவது மிகவும் ஆச்சரியமானதா யிருக்கிறது.

இச்சகோதரி ச்யவனப் பிராசத்தை உள்ளுக்குச் சாப்பிட்டு, க்ஷீரபலா தைலத்தை மேலுக்குமாக உபயோகித்து வந்ததில்,—

''...இப்போது நன்ருகக் குணம் தெரிகிறது. மேலும் சாப்பிடப் பூர்ண குணமாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது. முன்னுக்கு இப்பொழுது தலை சுற்றல், மயக்கம், படபடப்பு எவ்வளவோ தேவலை, முன்னுல் இருந்த மாதிரி பசியின்மை, சாப்பாட்டைப் பார்த்தாலே ஒரு குமட்டல், அருவருப்பு-பேதி இவை இல்லை. இப்பொழுது வேளா வேளைக்கு கொஞ்சம் பிடித்துச் சாப்பிடுகிறேன். பசி ருசி இருக்கிறது.......''

இப்படி எழுதிக் கொண்டு போகும் இந்தச் சகோதரி சில சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டு எழுதுகிருர் :

''12 வருஷ காலமாக என் கணவர் தீராத வயிற்று வலியால் கஷ்டப்பட்டு, பல வைத்தியம் செய்தும் பிரயோசனமில்லாமல்

ஆபரேஷன் செய்து கொள்ளவும் மனமில்லாமல் என்ன செய்யலாமென்று யோசனை செய்து கொண்டிருந்த சமயத்தில், உங்கள் வைத்தியத்தையும்தான் செய்து பார்த்து விடுவது, பிறகு பகவான் விட்ட வழியாகட்டும் என்று தீர்மானித்து நெருங்கினார். ''கல்யாண க்ஷாரம் 1½ வருஷ காலமாக என் கணவருக்குக் கொடுத்ததில் நன்றாகக் குணமிருக்கிறது. அதை வயிற்று வலியால் துடிப்பவர்களுக்கு நானே யொரிக செய்து வருகிறேன். அப்பேர்ப்பட்ட உசத்தியான மருந்து, கல்யாண க்ஷாரத்தினால் கைகண்ட பலன் உண்டு என்பதைக் கல்கி நேயர்களுக்குத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். பெரியோர் சொல் என்றும் வீண் போனதில்லை. வியாதிகளால் கஷ்டப்படுபவர்கள் தங்களது நாட்டு வைத்திய முறைப்படி சிகிச்சை செய்து கொள்ள முன் வந்து உடம்பு குணமாகவேணுமென்பதே என் ஆசை.

கடிதம் 166/2ல் சகோதரி ராதை...... இல்லை இல்லை ஸ்ரீஹரி தாத்தாவின் 'அன்புள்ள பேத்தி ராதை' ஆமாரஸ்த்யாதி தைலத்தைச் செய்யும் வகையில் ஏற்பட்டுள்ள சில சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டிருக்கிறாள். ஆனால் ஊரோ, முகவரியோ ஒன்றுமே இல்லை. தபால் கூலியைப் பற்றிக் கூடக் கவலையில்லை. முகவரியாவது தெரிந்தால் அல்லவா பதில் எழுத முடியும்? இப்படியேதான் வேறொரு நண்பர் ''ஒரு தஞ்சைவாசி'' என்று மட்டும் எழுதியிருக்கிறார். நேயர்கள் தமது பெயர் முகவரிகளைக் கொடுக்க ஏன் சங்கோசப்பட வேண்டும்?

கடிதம் 169/2ல் கோர்காம் [பம்பாய்] சகோதரி எழுதுகிறார்:

''...எனக்கு உங்கள் கட்டுரையும் அதில் வெளியாகி வரும் மருந்துகளும் மிகவும் உபயோகமாகின்றன. நடுத்தர வருமானமுள்ள குடும்பத்தினரான எங்களுக்குப் பம்பாய் டாக்டர்களிடமிருந்து உங்கள் மருந்துகளினால் நல்ல விடுதலை கிடைக்கிறது. தாங்கள் வெளியிடும் மருந்துகளில் பலவற்றை நான் செய்து உபயோகித்துப் பயன் அடைகிறேன். அருகாமையில் ஒரு மதராஸ் பெண்மணி வசிக்கிறார். அந்தச் சகோதரிக்கும் மழைக்காலத்தில் சேற்றுப் புண் மருந்து, இப்பொழுது நீலிபிருங்காதி தைலம் முதலியவை கொடுத்துப் பலன் காணவும் இப்பொழுது நம்பிக்கை பிறந்திருக்கிறது'' என்று முடிக்கிறார். பிறகு அந்தச் சிநேகிதிக்காக ஏதோ மருந்து விஷயமாய்க் கேட்டிருக்கிறார்...

எப்படி! தான் இந்த நாட்டு முறைகளால் பயன் அடைந்ததல்லாமல்—பிறருக்கும் இவைகளைப் பிரசாரம் செய்யும் ஆற்றல் எத்தனை பெரிய விஷயம்!

கடிதம் 170/2-ல் தூத்துக்குடி சகோதரி எழுதுகிறாள்:—

''...இரண்டு வருஷங்களுக்கு முன் மார்வலி, கோழை, ஜுரம் ஓய்ச்சலுமாக இருந்ததால் டாக்டர்.........யிடம் காண்பித்ததில் அவர் பரிசோதனைகள் செய்தும், எக்ஸ்ரே எடுத்தும் எனக்கு பல்மனரி ட்யுபர்குலாஸிஸ் [சுவாஸாசய க்ஷயம்] இருக்கிறது என்று தீர்மானித்தார். மருந்துகள்.........இவற்றை உபயோகிக்கும்படி தெரிவித்தார். இவைகளை இரண்டு வருஷங்களாக மாற்றி எடுத்துக் கொள்கிறேன். இப்பொழுது மேலே எழுதிய உபாதைகள் இல்லை. ஆனால் இரண்டு மாதங்களாகக் காதில் ஒரே இரைச்சலாயிருக்கிறது. காதும் சரியாகக் கேட்பதில்லை. அதற்காக...... டாக்டரை ஆலோசனை கேட்டேன். அவர் ஒரு மாத்திரை கொடுத்தார். அதைச் சாப்பிடும் வரை சிறிது குணம் கண்டேன். இக் காது இரைச்சலால் நான் கஷ்டப் படுகிறேன்.......''


''அம்மணி! இப்படிச் சில மருந்துகள் மேல் நாட்டு வைத்திய முறையில் உண்டு. மிகவும் ஜாக்கிரதையுடன் உபயோகிக்கத் தக்கவை. வகை தவறி இவைகளை உபயோகித்தாலும் ஓரளவுக்குமேல் உபயோகித்தாலும் இவை தொல்லைகளை விளைவிக்கும் இயல்பு பெற்றவை. மிகவும் ஆலோசித்த பிறகு தான் இவைகளை உபயோகிக்கலாம் என்று மேல்நாட்டு வைத்தியர்களே எச்சரிக்கின்றனர். கூடுமானால் இவ்வகை மருந்துகளை உபயோகியாமலிருப்பதற்கு வழியுண்டா என்று பார்ப்பது தான் சிறந்தது என்று சொல்கின்றனர். அப்படி உபயோகிப்பதானால் மிகவும் ஜாக்கிரதையுடனும் விழிப்புடனும் உபயோகிக்க வேணும். சரீரத்துக்கு ஏற்கவில்லை என்பதின் அறிகுறிகள் சிறிது உண்டாகும்போதே இவற்றை நிறுத்த வேணும் என்று வலியுறுத்துகின்றனர்.

இதனாலெல்லாம் என்ன பலன்? இப்போது உங்கள் விஷயத்தில் இந்த மருந்துகளை அதிகம் உபயோகித்ததால் வந்த வினைதானோ இந்தக் காது இரைச்சல் என்று எண்ணவேண்டி இருக்கிறது.

இதற்கு என்ன செய்யலாம்? இம் மருந்தினால் விளைந்த[?] வினையும் தீர வேணும். க்ஷயரோகமும் திரும்ப வரக் கூடாது. இதற்கு, 1. உள்ளுக்குத் தஞ்சை அரண்மனை முறைப்படி தயாரித்த அச்வகந்தா லேஹியம் — 2. இதற்கு அனுபானமாக வெள்ளாட்டுப் பால்— 3. தலைக்கு க்ஷீரபலா தைலம் தேய்த்தல்......ஸ்நானம் கூடாது. இவைதான் செய்யத் தக்கவை.

மற்றும் விளக்கங்களுக்குக் 'கர்ண நாதம்' என்ற கட்டுரையின் கீழ்க் காணவும்.

(தொடரும்)



தேநீரை
அனுபவிக்க
ஒன்றுக்கு
மேற்பட்ட வழி
யுண்டு
Take under tea
in hot weather!
டீ ஸெண்டருக்கு
விஜயம் செய்து.
இந்தப பிரசுரத்தின்
இலவசப் பிரதியை
தயவுசெய்து
கேட்டு வாங்கிக்
கொள்ளுங்கள்
டீ ஸெண்டர், பமபாய்
ரேஷாம் பவன்
78 வீர் நாரிமன் ரோட்.
டீ ஸெண்டர், சென்னை
பழைய பொஸ்டாபீஸ் பில்டிங்ஸ்
177-179 மவுண்ட் ரோட்.

தெய்வத்தின் தீர்ப்பு

ஜ. சாமிநாதன்

குழந்தையைத் தொட்டிலிட்டுத் தாலாட்டிக் கொண்டிருந்த கமலா வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு ஜன்னல் வழியே பார்த்தாள். உடனே குழந்தையைக் கீழே விட்டு விட்டு வாசலுக்கு ஓடினாள். கார் நிற்கும் ஓசை கேட்ட ஒண்டுக்குடித் தனக்காரர்கள் நிலை தாண்டித் தலை நீட்டினர். அவர்கள் பார்வையிலே பட்டுவிட்ட பெருமையுடன், வைரத் தோடு காதிலே மின்ன, மெல்லச் சிரித்துக் கொண்டே வண்டியை விட்டுக் கீழே இறங்கினாள் ருக்மிணி.

''வாருங்கள், மாமி!'' என்று சிரித்துக் கொண்டே வரவேற்றாள் கமலா.

''இந்தப் பக்கம் வரவேண்டும் என்று இரண்டு வாரமாக நினைத்துக் கொள்கிறேன். முடிந்தால்தானே?'' என்று சொல்லிக் கொண்டே வீட்டினுள் புகுந்தாள் ருக்மிணி.

''எனக்குக் கல்யாணமான பிறகு இப்போதுதான் முதன் முறையாக எங்கள் வீட்டுக்கு வருகிறீர்கள் அல்லவா?''

''ஆமாம். கல்யாணத்துக்குக்கூட வர முடியவில்லை. இது என்ன வீடு பார்த்திருக்கிறாய்? நீங்கள் இருக்கும் போர்ஷனுக்குப் போக வேண்டுமானால் ஒரு மைல் நடக்க வேண்டும் போல் இருக்கிறதே!''

''ஆமாம். என்ன செய்வது? இந்தத் திருவல்லிக்கேணியில் இந்த வீடாவது கிடைத்ததே, அதுவே பெரிய காரியம்!''

''போகிற நடை வழியாவது நன்றாய் இருக்கக்கூடாதா? ஏதோ குகை மாதிரி இருக்கிறதே! தட்டித் தடவிக் கொண்டு நான் போக வேண்டும் போல் இருக்கிறது!''

''ஆமாம்!'' கமலா வலியச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள்.

''இதுதான் மாமி எங்கள் 'போர்ஷன்'' என்று காண்பித்தாள் கமலா. ருக்மிணி அம்மாள் குனிந்து உள்ளே சென்றாள்.

''எனக்கு மனசில் உறுத்திக் கொண்டே இருந்தது. உன்னை ஒன்று கேட்க வேண்டுமென்று...'' என்று பேசிக் கொண்டே பட்டுப் புடவையில் அழுக்குப் படாதபடி நாசூக்காய் உட்கார்ந்தாள் ருக்மிணி அம்மாள். கமலா உடனே ஒரு பலகையை எடுத்துப் போட்டு அதன் மேல் உட்காரச் சொன்னாள்.

''எப்படியடி அவரை இரண்டாந்தாரமாக மணப்பதற்குச் சம்மதித்தாய்?'' என்றாள் ருக்மிணி வியப்புடன்.

''ஏன், மாமி! இரண்டாம்தாரமாக இருந்தால் என்ன? வரதட்சிணை கேட்டு ஆளையே விழுங்கும் பிசாசுகளிடம் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுவதை விட....''

''எனக்கு என்னவோ பிடிக்கவில்லை. உன் அப்பாவுக்கு இரண்டாயிரம் கூடத் தேறாதா, என்ன?'' என்றாள் ருக்மிணி.

கமலா கேலியாக ருக்மிணி அம்மாளுடைய வருத்தத்தைக் கண்டு சிரித்தாள். இந்தக் கல்யாணத்தின்போது அவசரம் என்று கடனாக ஐம்பது ரூபாய் கேட்ட போது, ''முடியவே முடியாது. உங்களுக்குத் திருப்பிக் கொடுக்க வழியேது?'' என்று கூறி விட்டவள் ருக்மிணி அம்மாள்.

''என்ன போர்ஷனடி, கமலா இது! சூரிய ஒளியே இங்கு வராது போல் இருக்கிறதே! இதற்கு என்ன வாடகை கொடுக்கிறாய்?''

''இந்த இடமாவது கிடைத்ததே, மாமி! எத்தனை பேர்கள் வெய்யிலிலும், மழையிலும் அவதிப்பட்டுக் கொண்டே வாழ்கிறார்கள்... இதற்கு என்னவாடகை என்று கேட்கிறீர்கள்? பதினைந்து ரூபாய் கொடுக்கிறோம்!''

''பதினைந்து ரூபாய்க்கென்றால் இப்படித்தான் வீடு இருக்கும். நாற்பது ஐம்பது ரூபாய் கொடுத்து நல்ல இடமாகப் பார்த்து இருக்கக் கூடாதோ?'' என்றாள் ருக்மிணி.



பணத்தின் மிதப்பினால் அவள் மிகவும் அலட்சியமாகப் பேசினாள்.

"நாற்பது ரூபாயா? அது எப்படிக் கட்டும் மாமி? அவருக்கே குறைந்த சம்பளம். என் மாமியார் மாமனார் இருக்கிறார்கள். அவருடைய கல்யாணமாகாத சின்னத் தங்கை வேறு இருக்கிறாள்."

"இந்தப் பிச்சுப்பிடுங்கல் வேறு உண்டா?" என்று ஏதோ தலையில் பாரம் என்பதைப் போலக் கழுத்தை நொடித்துக் கொண்டாள் ருக்மிணி அம்மாள்.

"இப்போது அவர்களெல்லாம் எங்கே?"

"மாமனாரும் மாமியாரும் கோவிலுக்குப் போயிருக்கிறார்கள். என் நாத்தனார் வெளியே 'ட்யூஷன்' சொல்லிக் கொடுப்பதற்குப் போயிருக்கிறாள்."

"அனு பரியமாக அவர்களுக்கு இடம் கொடுத்து விட்டு அப்புறம் திண்டாடாதே!" என்று பயங்கரத்தைத் தடுக்க வந்தவளாகத் தன்னை நினைத்துக் கொண்டு உபதேசம் செய்தாள் ருக்மிணி அம்மாள்.

கமலா பதில் பேசவில்லை.

பிறகு, "இருங்கள் மாமி! காப்பி போட்டுக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி உள்ளே சென்றாள் கமலா.

ருக்மிணி அம்மாள் மயிலாப்பூரில் இருப்பவள். வயது நாற்பது ஆயிற்று. அவள் பக்கத்தில் நின்றாலே பணத்தின் மணம் வீசும். அவள் வாய் பணத்தின் புகழ் பேசும்; செய்கை பணத்தின் பெருமிதத்தைக் காட்டும். கல்யாணம் ஆகுமுன்னர் கமலா மயிலாப்பூரில் இருந்தபோது ருக்மிணி அம்மாள் வீட்டிலே சமையல் செய்து கொண்டிருந்தாள் கமலாவின் தாயார். அந்தப் பழக்கம் தான் இந்த ஏழை வீட்டுக்கு ருக்மிணி அம்மாளை வரச் செய்தது. இல்லாவிட்டால் சுருதி இறங்கிப் பழகும் சுபாவம் ருக்மிணிக்குக் கிடையாது.



காப்பியை ருக்மிணி அம்மாள் முன் கொண்டு வந்து வைத்தாள் கமலா.

"உனக்கு நல்ல புடவையாக வாங்கித் தரச் சொல்லக் கூடாதா? ரவிக்கையிலும் எண்ணெய் ஏறிக் கிடக்கிறதே! எனக்குத்தான் அவமானமாக இருக்கிறது. குடும்பம் பெரிசாக இருந்தாலும் எப்படியாவது இதையெல்லாம் செய்து கொண்டுவிட வேண்டும்!" என்று கூறிக் கொண்டே காப்பியைப் பார்த்தாள் ருக்மிணி அம்மாள்.

"எடுத்துக் கொள்ளுங்கள், மாமி!"

"இப்போது எதற்கு இது? வரும் போது தான் 'ஓவல்' சாப்பிட்டு விட்டு வந்தேன்!"

"பரவாயில்லை. எடுத்துக் கொள்ளுங்கள்."

அரை மனசுடன் ருக்மிணி அம்மாள் காப்பித் தம்ளரைத் தனக்கு அருகில் இழுத்து வைத்துக் கொண்டாள்.

"இங்கே ஜவுளிக் கடைக்கு வந்தேன். அப்படியே உன்னையும் பார்த்து விட்டுப் போகலாமே என்று..."

"ரொம்ப சந்தோஷம்."

கல்யாணி அம்மாள் காப்பியை ஒரு மிடறு குடித்தாள். அதற்குள் முகம் அஷ்டகோணலாக மாறியது.

"யார் வறுத்தார்கள் காப்பிக் கொட்டை? கடையில் கொண்டு போய் வறுத்துக்கொண்டு வருவதுதானே! காப்பி நல்ல மணத்துடன் இருக்குமே......" என்றாள் ருக்மிணி.

"இல்லை. வீட்டிலே வறுத்து அரைத்து விடுகிறோம். கடையானால் வீசைக்கு ஆறணா அரைப்பதற்குக் கூலி கேட்கிறார்கள்."

"பார்த்தாயா? வந்த விஷயத்தை மறந்து விட்டுப் பேசிக் கொண்டே இருக்கிறேனே... குழந்தையைக் காட்டு, பார்க்கலாம்."

கமலா உள் ஓரத்திலே படுத்துக் கொண்டிருந்த குழந்தையை எடுத்துக் கொண்டு வந்து ருக்மிணி அம்மாள் பக்கத்தில் விட்டாள். குழந்தை கையையும் காலையும் பலமாக உதைத்துக் கொண்டது.

"என்ன பெயர் வைத்திருக்கிறாய்?"

"ராமநாதன் என்று..."

"கர்நாடகப் பேராக வைத்திருக்கிறாயே? சுந்தர், ரவி என்று 'பாஷ்'ஆகப் பெயர் வைத்திருக்காமல்......"

"குழந்தை, யாருடைய ஜாடையைக் கொண்டிருக்கிறது, கமலா?"

"அச்சு அவரேதான்!"

இதைச் சொல்லும்போது கமலா பெருமையில் பூரித்துப் போனாள்.

"செல்வத்தில் அவரைக் கொள்ளாமல் இருக்கட்டும்!" என்று இடக்காகச் சொன்னாள் ருக்மிணி அம்மாள்.

இதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போய் விட்டாள் கமலா. தன் எதிரிலேயே கணவரைப் பற்றிக் கேவலமாகப் பேசுவதா? உண்மையாக அன்புடையவர்கள் பேசும் பேச்சா இது?

ருக்மிணி அம்மாளுக்கு இன்னதும் தெரியாமல் இல்லை. ஆனால் இங்கிதக் குறைவாகப் பேசுவதில் ஒரு தனி இன்பம் போலும்! தன்னை யாரும் ஒன்றும் சொல்ல முடியாதல்லவா?

கமலா ஒரு கணம் ருக்மிணி அம்மாளை வெறுப்புடன் பார்த்தாள்.

அப்போது அங்கே நுழைந்தாள் வயதான ஒரு பாட்டி. "வாருங்கள், பாட்டி!" என்று முகமலர்ந்து அவளை வரவேற்றாள் கமலா. பாட்டி கோலால் தட்டித் தடவிக் கொண்டே உள்ளே வந்து உட்கார்ந்தாள்.

"சரி! அப்போ நான் போய் வருகிறேன்" என்று கூறி விட்டுக் கிளம்பி விட்டாள் கல்யாணி அம்மாள்.

"இருங்களேன். அவர்களெல்லாம் வந்து விடுவார்கள்!" என்றாள் கமலா.

"ஐயோ! ஒரே கூட்டமாக இருக்கும். எனக்கு டவுனில் தட்டானிடம் வேலை இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே ருக்மிணி அம்மாள் எழுந்தாள். பிறகு ஏதோ ஞாபகம் வந்தவள் போல, 'ஹாண்ட் பாக்'கைத் திறந்து இரண்டு வெள்ளி ரூபாய்களை எடுத்துக் குழந்தையின் கையில் வைத்தாள். உடனே கதவு ஓரத்தில் போட்டிருந்த செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டாள். கமலா வாசல் வரை சென்றாள். ருக்மிணி அம்மாள் நடந்து சென்றதில் அவள் இடுப்பில் உடம்போடு உடம்பாக ஒட்டி யிருந்தது அவளைப் பிரிந்தே யறியாத சாவிக்கொத்து. அது 'ஜல் ஜல்' என்று தாளமிட்டது. ஒண்டுக் குடித்தனக்காரர்கள் மறுபடியும் வாசலுக்கு வந்தார்கள். ருக்மிணி அம்மாள் காரில் ஏறிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

கமலா தனக்குள் சிரித்துக் கொண்டே வீட்டினுள் நடந்தாள்.

பாட்டி அங்கே குழந்தையருகில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். மிகுந்த பிரயாசைப்பட்டு அவளுடைய நடுங்கும் கரங்கள் குழந்தையைத் தடவிக் கொண்டிருந்தன. அவள் கமலாவுக்குத் தூரத்து உறவு. அவளும் மயிலாப்பூரிலே கமலாவைப் போல ஒண்டுக் குடித்தனத்தில் இருப்பவள்தான்.



கமலா பாட்டியின் பக்கத்திலே அமர்ந்து கொண்டாள்.

"பாட்டி! எப்படி உங்களுக்கு வழி தெரிந்தது?" என்றாள் கமலா வியப்புடன்.

"எனக்குத் தெரியாமல் என்ன? எப்படியோ விசாரித்துக் கொண்டு வந்து விட்டேன். என் பக்கத்திலே வந்து உட்கார்."

"கல்யாணம் ஆனபோது பார்த்தது. அப்புறம் தினம் தினம் பிள்ளையிடம் சொல்லிப் பார்த்தேன். அவனுக்கும் ஏதோ தினமும் வேலை இருந்து கொண்டுதான் இருக்கிறது. எனக்குப் பொறுக்கவில்லை. எப்படியோ வந்து விட்டேன்..." என்று மூச்சு வாங்கப் பேசினாள் பாட்டி. பிறகு அவள் காலை நீட்டிக் கொண்டாள். அவளுக்குக் கூனல் முதுகு.

"உன்னுடைய கணவர், மாமியார் எல்லோரும் சௌக்கியமா?"

"சௌக்கியம், பாட்டி!"

"எப்படியோ கஷ்டப்பட்டு உன் அம்மா கல்யாணம் செய்து விட்டாள். பிறந்த இடத்தில் பெயர் வாங்குவது சுலபம். ஆனால் புகுந்த இடத்தில் நல்ல பெயர் வாங்க வேண்டும், அம்மா!......"

கமலா தலையைக் குனிந்து கொண்டாள். மனக்கண்ணின் முன்னால் ருக்மிணி அம்மாள் வந்து நின்றாள்.

"கொஞ்சம் வயதானவர்களும், நாத்தனார்களும் மிரட்டத்தான் மிரட்டுவார்கள். அப்போதெல்லாம் எதிர்த்துப் பேசவே கூடாது. அவர்களுக்குப் பணிந்து நடக்க வேண்டும். அப்போது அவர்களையுமறியாமல் உன் மீது அன்பு சுரக்கும். கட்டின பசுப்போல இருந்தால்தான் குடும்பத்தில் சந்துஷ்டி. என்னவோ கிழவி இதையெல்லாம் சொல்லுகிறாளே என்று நினைத்து விடாதே. நீ என்னுடைய பேத்தி மாதிரி..."

பாட்டியின் கண்களைச் சுற்றி அடுக்கடுக்காய் மடிந்து நின்ற தசைகளில் கண்ணீர் குளமாகி நின்றது. கமலாவின் நெஞ்சம் பாட்டியின் அன்பை நினைத்து உருகியது.

"குழந்தை தங்க விக்கிரகம் போல இருக்கிறது!" என்று சொல்லிப் பாட்டி தன் எலும்பு விரல்களைக் குழந்தையின் கன்னங்களில் பதித்தாள். பல் முளைக்காத குழந்தை பொக்கை வாய் திறந்து சிரித்தது. அது கண்டு பல் உதிர்ந்து விட்ட பாட்டியும் மகிழ்ச்சியினால் பொக்கை வாய் திறந்து சிரித்தாள்.

பாட்டியை அப்போது நன்றாகப் பார்த்தாள் கமலா. புடவை ஒரே கந்தல். உடல் எங்கும் தோல் சுருங்கித் தொங்கியது. கூனல் முதுகு. அப்படியிருந்தும் தன்னைப் பார்ப்பதற்காகத் தனியாக வந்தாளே என்ற நினைவு விழியில் நீர் கொண்டு வந்து நிறுத்தியது.

பாட்டி குழந்தையைக் கொஞ்சினாள். ருக்மிணி அம்மாள் இருந்தபோது இல்லாத மலர்ச்சி பாட்டி வந்தபோது குழந்தையின் முகத்தில் பொலிந்து கொண்டிருந்தது. பாட்டியின் பழுத்த முகம் குழந்தையின் இள முகத்துடன் உரசியது. பாட்டி கொஞ்சினாள்.

"கண்ணே! நன்றாகப் படித்து உன் குடும்பத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவா. உனக்குள் எல்லாச் சக்தியும் இருக்கிறது. உன்னைக் காண வேண்டும் என்ற ஆவலுடன் வந்த இந்த ஏழைக் கிழவியால் உனக்கு என்ன கொடுத்துவிட முடியும்? பொன்னை வைக்கிற இடத்தில் பூவை வைக்கிறேன்" என்று சொல்லி விட்டுப் பாட்டி இடுப்பைச் சுற்றிக் கையால் துழாவினாள். பிறகு மிகவும் கஷ்டப்பட்டுத் தான் முடிந்து வைத்திருந்ததைக் கண்டு பிடித்தாள். ஐந்தணாவிலே ஒரு வெள்ளி நாலணாவை எடுத்துக் குழந்தையின் கையிலே வைத்தாள்.

தெய்வத்தைக் கண்டது போலச் சிரித்தது குழந்தை. கமலா, பாட்டியின் செய்கையைப் பார்த்துக் கொண்டே நின்றாள்; வாய் அடைத்துப் போயிற்று. "என் செல்வமே! நான் போய் வருகிறேன்" என்று குழந்தைக்குத் திருஷ்டி கழித்தாள் பாட்டி. "எல்லோரும் வந்தால் நான் வந்தேன் என்று சொல்லுகிறாயா, அம்மா!" என்று சொல்லிக் கமலாவை ஆதரவுடன் அணைத்துக் கொண்டு கிளம்பி விட்டாள் பாட்டி.

இருவரும் வாசலுக்கு வந்தார்கள். பாட்டியைக் காணுவதற்கு ருக்மிணி அம்மாளைக் காண வந்தது போல ஏன் ஒண்டுக் குடித்தனக்காரர்கள் வாசலுக்கு வரவில்லை? ஓகோ,



சாணுவக் கல்லூரியில் பயின்ற திரு வி. ஜெ. சுந்தரம் தொழில் நுணுக்கப் பயிற்சியில் முதன்மையாகத் தேறி வெள்ளிப் பதக்கம் பெற்றார். தமது பெற்றோர்களான பஸ்ஸூர் மேஜர் திரு சுந்தரம் அவர்களுடனும், ஸ்ரீமதி சுந்தரம் அவர்களுடனும் பங்குபெற்ற இளைஞர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

பாட்டி பணக்காரி இல்லை அல்லவா? அவளுக்குக் கார் இல்லை அல்லவா?

இந்த உலகம் வீண் டம்பத்துக்கும் பணத்துக்கும்தானே மதிப்பு தருகிறது. இதனால் தானே, 'இல்லானை இல்லாளும் வேண்டாள்' என்ற பாட்டும் எழுந்தது. இந்த உலகத்தில் பணம் இல்லாவிட்டால் ஒருவரும் இலட்சியம் செய்ய மாட்டார்கள். உறவு முறை, நட்பு அனைத்துமே இந்தப் பணத்தில்தான் அடங்கியிருக்கின்றன போலும்!

''பணம் இன்றைக்கு வரும், நாளைக்குப் போகும். பழகிய மனிதர்கள் கிடைப்பார்களா? மனிதர்களுக்குக் குணம்தான் முக்கியம்!'' என்று அனேகம் பேர்கள் மிகவும் அலட்சியமாகச் சொல்லுவார்கள். ஆனால், அவர்களை நெருங்கிப் பார்ப்போமானால், அவர்களும் அந்தப் பணப் பெருமைக்கு அடிமைகளாயிருப்பதைத் தெளிவாகக் காணலாம். பெரிய பணக்காரன் சின்னப் பணக்காரனை அலட்சியம் செய்தால், சின்னப் பணக்காரன் அவனையும் விட ஏழையை அலட்சியம் செய்கிறான். ஆக, இப்படியே இந்தப் பணத்தின் வறட்டுப் பெருமை, பொய்ப் பெருமை வளர்ந்து கொண்டே போகின்றன. இது உலக இயல்பு. இந்நிலையை இலேசில் மாற்றிவிட முடியாது. வாழ்வின் உண்மை நிலை கண்டவர்கள்தான் இந்த இழி குணத்துக்கு ஆளாகாமல் தப்ப முடியும்.

ஆனால் இவையனைத்துக்கும் விதிவிலக்காக அல்லவா இந்தப்பாட்டி விளங்கினாள்? 'பணத்தைச் சம்பாதித்து விடலாம். ஆனால் குணத்தைச் சம்பாதித்து விட முடியுமா? அது இயற்கையிலேயே படிய வேண்டியதல்லவா? ருக்மிணி அம்மாளுக்கு எவ்வளவு பணம் இருந்து என்ன பயன்? அவளுக்குக் குணம் இல்லையே?' கமலாவின் உள்ளத்திலே இத்தகைய சிந்தனைகள் அலைபாய்ந்தன.

அப்போது பூக்காரி பூ விற்றுக் கொண்டு போனாள். அவள் கையில் மணம் பரப்பும் அழகிய வண்ண மலர்கள் இருந்தன. பூவின் வாசனையே அவள் வருவதைக் கட்டியம் கூறியது.

''ஏ, பூக்காரி! இங்கே வா'' என்று அவளைக் கூப்பிட்டாள் பாட்டி.

''என்னம்மா! பூ எவ்வளவு வேணும்? முழம் ஓரணாவுக்குக் குறைந்து கிடையாது!'' என்றாள் பூக்காரி கண்டிப்பாக.

''இந்தா! ஓரணாவுக்குக் கதம்பம் கொடு'' என்று கூறி அவளிடம் ஓரணா கொடுத்துக் கதம்பம் வாங்கினாள் பாட்டி. அதை இரண்டாக மடித்துக் கமலாவின் தலையில் சூட்டி விட்டாள்.

''நான் ஒரு ரவிக்கைத் துண்டு கூடக் கொடுக்கவில்லை. என்ன பிரயோசனம்?'' என்று ரொம்பவும் குறைப்பட்டுக் கொண்டாள் பாட்டி.

''அப்படிச் சொல்லாதீர்கள், பாட்டி...'' என்றாள் கமலா, நெஞ்சம் சுழுகழுக்க.

''அமா தேவம்மா. சமர்த்து என்று பெயர் எடுத்துக் கொள்.''

அந்த அன்பு உருவம், பஸ்ஸுக்கு வைத்திருந்த ஓரணாவுக்குப் பூ வாங்கி விட்டதால், கோல் பிடித்து நடந்து சென்றது.

கமலா நினைவற்று அங்கே நின்றாள். செல்வ மிதப்பிலே இருந்த ருக்மிணி அம்மாளும் அன்பு நிறைந்த ஏழைப் பாட்டி அம்மாளும் இரண்டு துருவங்களாக நின்றார்கள். பகட்டிலே இல்லாத அன்பை அந்த ஏழைப் பாட்டியிடம் கண்ட போது அவளுக்குத்தான் எத்தனை மன நிறைவு உண்டாயிற்று!

உள்ளே சென்ற கமலா குழந்தையைப் பார்த்தாள். அங்கே அவள் கண்ட காட்சி அவள் உடம்பை யெல்லாம் சிலிர்க்க வைத்தது. அவள் உள்ளத்தில் சற்று முன் நடந்த போராட்டத்துக்குப் பதில் கிடைத்துவிட்டது.

ருக்மிணி அம்மாள் கொடுத்த இரண்டு வெள்ளி ரூபாய்கள் அந்தப் பிஞ்சுக் கால்களுக்கிடையே மிதிபட்டுக் கொண்டிருந்தன. பாட்டி கொடுத்த கால் ரூபாயைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தது குழந்தையின் கரம். கமலாவைப் பார்த்துச் சிரித்தது குழந்தை. கமலா குழந்தையை எடுத்து முகத்துடன் முகம் இழைத்துக் கொண்டாள்.

''என் செல்வமே! ஏனடா சிரிக்கிறாய்? எளிமை உருவத்தில் வந்த அன்பைக் கண்ட மன நிறைவுடன் சிரிக்கிறாயா? அல்லது பகட்டிலே மினுமினுக்கும் பணத்தைக் கண்டு இகழ்ந்து சிரிக்கிறாயா? கண்ணே! நன்றாகச் சிரி. பாவிச் சிறு உருக்கு பணத்தால் அன்பை விலை பேச எண்ணுவதைக் கண்டு சிரி!'' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

பச்சிளம் குழந்தையின் தீர்ப்பு தெய்வத்தின் தீர்ப்பல்லவோ?


நாள் முழுவதும்
கவர்ச்சிகரமாக
தோற்றமளிக்க
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
ஸாண்டல்வுட்
டாய்லட் பவுடர்
சுத்தமான தனி சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது...
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய
டால்கம் பவுடர்....
டி. எஸ். ஆர் & கோ
கும்பகோணம்

படித்துப் பாருங்கள்

வால்மீகி ராமாயணம்

வால்மீகி முனிவர் இயற்றிய ராமாயணம், உலகம் போற்றும் மஹாகாவியம் என்று அனைவரும் அறிவர். அத்தகைய பெருமை வாய்ந்த வால்மீகி ராமாயணத்தின் இரண்டாவது பதிப்பை, லாஜர்னல் அச்சகத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆர்ஷ ஞானம் தோய்ந்து, வேதங்களுக்குச் சமானமான இந்த ராமசரிதோபனிஷத்தை, பக்தர்கள் நியமத்துடன் அத்யயனம் செய்வதற்கு அனுகூலமான பூஜாக்ரமம், தியான சுலோகங்களுடன் முன்னணியில், வடமொழியில் அமைக்கப்பட்டிருக்கிறது.

தவிரவும், காவியத்துக்கும், பதிப்புக்கும் சிறப்பளிக்கும் வகையில் ஆங்காங்கு தருமம், பக்தி, வீரம், கற்பு, தியாகம் முதலிய சீரிய பண்புகளை விளக்கக்கூடிய அழகிய ஓவியச் சித்திரங்கள் மிளிர்கின்றன.

இந்தப் பிராசீன நூலின் பழைய பதிப்புகள் பல உள்ளன. அந்தப் பதிப்புகளின் பாட பேதங்களை ஆராய்ந்து உணர்ந்து நல்ல பாட முறையில் இந்தப் பதிப்பு பெரும்பாலும் அமைந்திருக்கிறது. ஆனால், பால காண்டத்தில் 45-வது சருக்கத்தில், 'அம்ருதமதனம்' என்ற கதாபாகத்தில் உள்ள பாடவேற்றுமை, பிராசீனப் பதிப்புகளுடன் பொருந்தாமல் இருப்பது குறிப்பிடத் தக்கது. பாற்கடலைக் கடையும் பொழுது, கொடிய ஹாலாஹல விஷம் கிளம்பியதும், தேவர்கள் அனைவரும் பயந்து, மஹாவிஷ்ணுவை முன்னிட்டுக் கொண்டு, மஹாதேவனைச் சரணடைவதும், சிவபெருமான் விஷத்தை அருந்தி உலகத்தை ரக்ஷித்த தனிப்பெரும் கருணையும் மிக அழகான சுலோகங்களால் வருணிக்கப்பட்டிருப்பதை பிராசீன பண்டிதர்கள் அறிவார்கள். இந்த சுலோகங்களை மூலக் கிரந்தத்திலிருந்து அகற்றி 67-வது பக்கத்தில், அடிக்குறிப்பாய்க் காண்பிக்க வேண்டிய பொருத்தம் எவ்விதம் என்று வாசகர்கள் சந்தேகப்படக்கூடும்.

மற்றப்படி, நூலின் மகிமைக்குகந்த ரீதியில், முகப்பு அட்டையும் அதில் துலங்கும் அழகிய சிற்ப வரைகளும் ராமாயணத்தில் காண்டம் தோறும் அமைந்துள்ள தெய்விகம் கமழ உதவுகின்றன.

மேலும், இந்தப் பதிப்புக்கு பூர்ணானுக்ரஹம் அளிக்கும் வகையில் ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபர், ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி பாதர் அருளியிருக்கும் ஸ்ரீமுகமும், அவ்வித்தகரின் திருவுருவப்படமும், பக்தர்களின் உள்ளக் களிப்பைப் பெருக்க வல்லன. அன்பர்கள் இந்தப் புனித நூலை பக்தியுடன் ஓதி உணர்ந்து, ராம கிருபையால், சகல புருஷார்த்தங்களையும் அடையக் கூடிய வகையில் ஞானப்பணி புரிந்திருக்கும் பதிப்பாளர்களின் பணி எக்காலமும் நன்றியுடன் பாராட்டத் தக்கதாகும்.

கிடைக்குமிடம் : மதராஸ் லாஜர்னல் பிரஸ், மயிலாப்பூர், சென்னை விலை ரூ. 12.

உல்லாசக் குடும்பம்

பாலர்களுக்காக எழுதும் கதை—கட்டுரைகள் வெறும் பொழுதுபோக்குக்காக மட்டும் இராமல், அவர்களது வாழ்வை வளம்படுத்தவும், பிற்கால வாழ்க்கைக்கு ஓர் வழி வகுக்கவும் உதவ வேண்டும். சிறு பிராயத்திலேயே அவர்கள் மனப் போக்கு அறிந்து, போதனை முறை நிறுவப்படுமானால், சிறுவரது வாழ்க்கையில் உல்லாசம் நிறைந்திருக்கும்.

இந்த நோக்கத்தைத் தமது ஆதார கருதியாகக் கொண்டு ருஷ்ய எழுத்தாளர்களிடையே பிராபல்யம் வாய்ந்த ஸ்ரீ என். நோசாவ் இந்நூலைப் புனைந்துள்ளார்.

கோழிப் பண்ணையில் செயற்கை முறையில் குஞ்சு பொரிக்கும் பெரிய விஞ்ஞான விஷயத்தைச் சிறுவர்கள் அநுபவ ஆராய்ச்சி மூலமாக அறிந்து கொள்ளுவதைப் பிரமிக்கத்தக்க வகையில் வர்ணித்திருக்கிறார். 'உல்லாசக் குடும்பம்' என்னும் இக்கதையைப் படிக்கும் பாலர்கள், தாமே இச்செயலில் இறங்கி வெற்றி பெற முடியும் என்று உறுதி பெறுவார்கள்.


தேனீ வளர்த்தலை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டிருக்கும் 'கோல்யா ஸினிட்ஸினின் நாட் குறிப்பு' என்னும் கதையிலே, தேனீக்களின் வாழ்க்கை முறை அழகாக விளக்கப்பட்டுள்ளது.

மிஷ்காவின் சமையல் என்ற கதை சிறந்ததொரு ஹாஸ்யக் கதை. சமைக்கத் தெரியாத பாலர்கள் முதற் கொண்டு பெரியவர்கள் வரை, மிஷ்காவைப் போலவே ஒருபடி வடிக்கும் பானைக்கு எத்தனை அரிசி போட வேண்டும் என்று தெரியாமல் வழிய வழிய நிரப்பிச் சமைக்கத் தெரியாமல் திண்டாடுவார்கள். ஆனால் கதையைப் படித்து மகிழ்வார்கள்.

கைத் துப்பாக்கி, கெண்டைமீன் மோட்டார்கார் போன்ற கதைகள், தவறு இழைக்கும் பாலர்கள், தானாகவே திருத்தும் வழியை வெகு அழகாகப் போதிக்கின்றன.

வளர்ந்திருக்கும் ருஷ்ய இலக்கியத்தை—சிறுவர்களுக்கான கதைகளை நல்ல பழகு தமிழில் தந்துள்ளார் மா ஜீ வி. அநாவசியமான இடங்களில் மெய்யெழுத்துகள் போடுவதைத் தவிர்த்து, 'பீட்ரூட் போல அவன் முகம் சிவந்து விட்டது' என்ற நேரடியான மொழி பெயர்ப்புக்களையும் தவிர்த்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். எனினும் 'உல்லாசக் குடும்பம்' குழந்தைகளுக்கு உல்லாசத்தை அளிக்க வல்லது என்பதில் ஐயம் இல்லை.

பிரசுரம் :—நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 199, மவுண்ட்ரோட், சென்னை. 2. விலை ரூ. 3-50.





பல் முளைக்கும்போது
உண்டாகும்
உபாதைகள்
குடல்வலி
வாயு
வயிற்றுக்
கோளாறுகள்

அவனுக்கு

க்ரைமிக்ஸ்

க்ரைப் மிக்சர்
கொடுங்கள்

க்ரைமிக்ஸ் உங்கள் குழந்தையின் குடல்வலி, வாயு, இதர வயிற்றுக் கோளாறுகள் முதலியவைகளுக்கு துரித நிவாரணம் அளிக்கிறது. உங்கள் குழந்தையை ஆரோக்கியமாகவும், புன்சிரிப்புடனும் இருக்கச் செய்கிறது. குழந்தைக்கு க்ரைமிக்ஸ் கொடுங்கள்.

க்ரைமிக்ஸ்
க்ரைப் மிக்சர்



உங்கள் குழந்தையை ஆரோக்கியமாக இருக்கச்செய்கிறது.

HG1

க்ரைமிக்ஸ் க்ரைப் மிக்சர் ஒவ்வொரு பாட்டிலுடனும் ஒரு அழகிய ஸ்பூன் இனமாக அளிக்கப்படும்



வேகமாக ஓடிக் கொண்டிருந்த தன் புரவியின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து அதை, அந்த ஒற்றையடிப் பாதையின் ஓரமாக நிறுத்தினான் விஜயாலயன். அந்த உயர் ஜாதிக் குதிரையின் வாயின் இரு புறங்களிலும், நீண்ட நேரம் பிரயாணம் செய்த களைப்பினால், நுரை கட்டி நின்றது.

தன் முகத்தில் இருந்து வழிந்த வேர்வைத் துளிகளைத் தன் மேல் அங்கியால் துடைத்துக் கொண்டு, குதிரையை விட்டுக் கீழே இறங்கினான். சற்றுத் தூரத்தில் காணப்பட்ட தாமரைத் தடாகத்தருகே அதை நடத்திச் சென்றான். அது வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்தது. அவனும் தன் முகத்தை நன்றாகக் கழுவிக் கொண்டு, தன் இரு கைகளாலும் மொண்டுமொண்டு அந்தக் குளத்தின் தண்ணீரைக் குடித்தான்.

குதிரை குளக்கரையில் இருந்த ஒரு மாமரத்தின் நிழலில் போய் நின்றது. விஜயாலயனும் அந்தப் பெரிய மரத்தின் நிழலில் போய் அமர்ந்து கொண்டான்.

அவன் பாண்டி நாட்டின் தலைநகரை விட்டுப் புறப்பட்டு இன்னும் சரியாக ஏழு தினங்கள் ஆகவில்லை. இவ்வளவு சீக்கிரத்தில் அவன் தன் ஊரின் எல்லையை அடைந்து விடுவான் என்ற நம்பிக்கை புறப்படும்போது அவனுக்கே இல்லை. ஆனால் மூன்று மாதங்களுக்கு முன் அவன் சென்றபோது அந்த ஊரும் அவன் சொந்த ஊரான துவார சமுத்திரமும் அதன் சுற்றுப் புறமும் அளித்த காட்சிக்கும், இப்பொழுது அவன் காணும் காட்சிக்கும் எத்தனை பெரிய மாறுதல்!

துவார சமுத்திரம் இன்னும் அரைகாதத் தூரத்தில்தான் இருந்தது. அஸ்தமிப்பதற்குள் அவன் அங்கு போய் விடலாம். ஆனால், அவன் மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. அவன் மனத்தில் மேலோங்கி நின்ற எண்ணமெல்லாம் பிரபாவதியைப் பற்றித்தான். இந்தக் கலவரத்தில்—குழப்பத்தில்— அவள் எங்கிருக்கிறாளோ? என்ன ஆனாளோ? நினைத்தாலே அவன் தலை சுற்றியது; இதயம் விம்மியது.

அரை நாழிகை நேரம் தான் அவன் அந்த மரத்து நிழலில் உட்கார்ந்திருப்பான். அதற்கு மேல் அங்கு உட்கார அவனுக்குப் பிடிக்கவில்லை. மனவேதனை அவன் இதயத்தைத் துளைத்தெடுத்தது.

மரத்தின் நிழலில் நின்று கொண்டிருந்த குதிரையின்மேல் மீண்டும் ஏறி அதைத் தட்டி விட்டான். அவன் குறிப்பை அறிந்து கொண்டது போல் அந்தப் புரவியும் அந்த ஒற்றையடிப் பாதை வழியாக நான்கு கால் பாய்ச்சலில் கிளம்பியது.

நகரை நெருங்க நெருங்க அப் பிரதேசத்தின் பாழடைந்த தன்மை அதிகரித்தது. குடிசைகள் எரிந்து கருகிக் கிடந்தன. பெரிய கட்டடங்கள் இடிக்கப்பட்டுக் காட்சியளித்தன. லக்ஷோபலக்ஷம் ஜனங்கள் வாழ்ந்த அந்த ஊரும் அதன் சுற்றுப்புறமும் சூன்யமாகக் காட்சியளித்தன. முகம்மதியரின் வெறியாட்டத்திலிருந்து ஒரு கட்டடமோ ஒரு மனிதரோ தப்பவில்லை. செல்வத்தில் கொழித்த துவார சமுத்திரம்—கலையில் சிறந்து விளங்கிய ஹொய்சால ராஜ்யத்தின் அந்தத் தலைநகரம்—சுடுகாடுபோல் தென்பட்டது. வஞ்சக ஆப்கானியர் ஏற்றிய தீ நகரின் பல பாகங்களில் இன்னும் எரிந்து கொண்டிருந்தது. அரை காத தூரத்தில் இருந்தபோதே விஜயாலயன் கண்ட இக் காட்சிகள் அவன் இரத்தத்தை உறையச் செய்தன.

வட இந்தியாவில் ஆப்கன் மன்னர்கள் ஆண்ட காலம். அப்போது தென் இந்தியா

வில் யாதவர்கள், ஹொய்சாலர்கள், காகதி யர்கள்—மூன்று பரம்பரையினரும் சிறப்புடன் விளங்கினார்கள். துவார சமுத்திரம் ஹொய்சால ராஜ்யத்தின் தலைநகராக விளங்கியது.

பல ஆண்டுகள் ஹொய்சால மன்னர்கள் சமணமதச் சார்புள்ளவர்களாய் இருந்தனர். பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துவார சமுத்திரத்தை ஆண்ட பிட்டிதேவன் ராமானுஜரால் வைஷ்ணவ மதத்துக்கு மாற்றப்பட்டான். அது முதல் தோன்றியது ஹொய்சால ராஜ்யத்தின் கலை வளர்ச்சி.

நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். ராஜ்யத்தின் பல இடங்களில் அழகழகான கோயில்கள் கட்டப்பட்டன. கண்ணையும் கருத்தையும் கவரும் சிற்பங்கள் கோயில்களின் சுவர்களில் செதுக்கப்பட்டன. தலைநகரான துவார சமுத்திரம் ஒரு கலைக்கூடமாகக் காட்சி அளித்தது.

விஜயாலயனின் மூதாதையர் சோழ நாட்டில் வசித்தவர்கள். சிறந்த சிற்பிகள். பரம்பரைக் கலைஞர்கள். தஞ்சைப் பெரிய கோயிலையும் கங்கை கொண்ட சோழ புரத்துக் கோயிலையும் கட்டியதில் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

பிட்டிதேவன் காலத்தில், அவன் அழைப்பின் பேரில், துவார சமுத்திரத்துக்கு வந்தார் விஜயாலயனின் முப்பாட்டனார். வந்தவர் அங்கேயே தங்கிவிட்டார். துவார சமுத்திரம் கலையழகுடன் விளங்கச் செய்வதில் தமது வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். மன்னன் அவருக்கு நிறைய மான்யங்கள் கொடுத்து அவரைக் கௌரவித்தான்.

அந்தப் பரம்பரையில் வந்த விஜயாலயனும் சிற்பக் கலையில் தேர்ச்சி பெற்று விளங்கினான். பிரபாவதி அவனுடைய அத்தை மகள். நல்ல அழகி. விஜயாலயன் சிற்பக் கலையில் எவ்வளவு கை தேர்ந்தவனோ, அவ்வளவு கெட்டிக்காரி பிரபாவதி யாழ் வாசிப்பதில். சிறு வயது முதலே அவர்கள் மிக அன்யோன்யமாகப் பழகினர். அவள் யாழேந்தி வாசிக்க ஆரம்பித்து விட்டால், உணவு உறக்கம் எல்லாவற்றையும் மறந்து அந்தத் தெவிட்டாத கான வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பான் விஜயாலயன். விஜயாலயன் கல்லுளி கொண்டு பாறைக்கு உரு கொடுக்க ஆரம்பித்து விட்டால், அவன் கைகளின் மெல்லிய அசைவுகளையே, உறக்கமின்றிக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே, அவன் அருகேயே உட்கார்ந்திருப்பாள் பிரபாவதி.

சிற்பக் கலையில் விஜயாலயன் தனக்கென ஒரு தனிப் பாணி வகுத்துக் கொண்டிருந்தான். மனத்துக்குத் தோன்றிய உருவங்களை யெல்லாம் அவன் கண்டபடி கல்லில் செதுக்குவதில்லை. புராண சம்பவங்களை வரிசைக் கிரமமாகச் சிற்பங்கள் மூலம் செதுக்கும் முறையைத் தோற்றுவித்து, அதன் மூலம் சிற்பக்கலைக்குப் புது ஜீவனூட்டி, தன் பெயரையும் நிரந்தரமாக நிலைநாட்டிக் கொள்ள முற்பட்டான் அவன். துவாரசமுத்திரத்துக் கோயி லின் ஒருபுறத்தில், பெரிய பாறையொன்றின் மேற்புறத்தில் சீதா கல்யாண சம்பவத்தைப் பதினைந்து சிற்பங்கள்மூலமாக அவன், ஒன்பது மாத அவகாசத்தில் அழகாகச் செதுக்கி முடித்தான். அவற்றின் சௌந்தர்யத்தைக் கண்ட ஹொய்சால மன்னர் அசந்து விட்டார்.

அன்று பௌர்ணமி. சந்திரனின் வெண்ணிறக் கதிர்கள் அவன் செதுக்கிய சிற்பங்களின் மேல் பட்டு அவைகளுக்கு ஒரு தனி சோபையை ஊட்டிக் கொண்டிருந்தன. பார்ப்பவரைப் பிரமிக்கவைக்கும் அந்தச் சிற்பங்களின் நுணுக்கங்களைக் கலையுள்ளத்தோடு விளக்கிக் காட்ட விஜயாலயன் பிரபாவதியை அன்று கோயிலுக்கு அழைத்து வந்திருந்தான். பிரபாவதி எல்லாச் சிற்பங்களையும், ஒவ்வொன்றின் நுணுக்கத்தையும் அறிந்து கொண்டு பார்ப்பதற்குள், சந்திரன் உதயமாகிப் பத்து நாழிகைகள் ஆகிவிட்டன.

கோயிலை விட்டு வெளியே வந்த பிரபாவதியும் விஜயாலயனும் சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு பாறையின்மேல் போய் அமர்ந்து கொண்டனர். பிரபாவதி சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

"என்ன பிரபா! இன்றைக்குத் திடீரென்று மௌனம்?"

"ஏதோ யோசித்துக் கொண்டிருந்தேன்."

"என்ன யோசனை?"

"இதே போல் நீங்கள் தசாவதாரக் கதையைச் சிற்பமாகச் செதுக்கினால் எவ்வளவு



உணவு ருசியும் சத்தும்
மிகுந்ததாய் அமைய...



RISING SUN BRAND

சூரியன் மார்க்

மைதா
சூஜி
ஆட்டா

"சூரியன் மார்க் மைதா, சூஜி அல்லது ஆட்டாவில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் எப்பொழுதும் ருசியும், சத்தும் மிகுந்ததாக இருப்பது எப்படி ?"

இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பது மிகவும் சுலபம் — தரக்கட்டுப்பாடு.

தேசத்தின் உணவுத் தேவைக்கு உதவும் பொறுப்பான பணியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். எனவே தயாரிப்புத் துறையில், உயர்தரக் கோதுமையைக் கொள்முதல் செய்வது முதல், தயாரான கோதுமைப் பொருள்களை விற்பனைக்கு அனுப்புவது வரையுள்ள ஒவ்வொரு கட்டத்திலும், கட்டுப்பாடான தரத்தணிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்து கடைப்பிடிக்கிறோம்.

இன்று கோதுமைப் பொருள்களை வாங்கும் பொழுது, சிறிதும் தயங்காமல், உடனடியாக நீங்கள் சூரியன் மார்க்கைத் தேர்ந்து எடுக்கிறீர்கள். இது எங்கள்மீது உங்களுக்குள்ள நம்பிக்கையின் அடையாளம். எங்களுக்கு மகிழ்வுதரும் செயல்



சென்னை செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட் தயாரிப்புகள்

மானேஜிங் ஏஜண்டுகள் :

சௌந்தரராஜன் & கம்பெனி லிமிடெட்,

221, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்–1

போன் : 3707 & 4375 தபால்பெட்டி 1558 தந்தி : MATHOORAN

EP

நன்றாக இருக்கும் என்ற ஒரு எண்ணம் என் மனத்தில் எழுந்தது.''

''சரியான எண்ணம். கலைஞன் மனம் வைத்தால் ஆகாத காரியமும் உண்டா? நாளைக்கே உன் ஆசையை நிறைவேற்றத் தொடங்குகிறேன்'' என்றான் விஜயாலயன்.

* * *

தசாவதாரச் சிற்பங்களைக் கலைநுறச் செதுக்கி முடித்த அவனுக்கு மற்றோர் ஆசை தோன்றியது. சிற்பக் கலையில் சிறப்புடன் விளங்கும் காஞ்சி, மாமல்லபுரத்துக் கோயில்கள், தஞ்சைப் பெரிய கோயில், மதுரைக் கோயில், குமரிக் கோயில் இவைகளைப் பார்த்து வரவேண்டும் என்று அவன் தன் ஆசையைப் பிரபாவதியிடம் வெளியிட்ட போது அவள் சற்று அதிர்ச்சிதான் அடைந்தாள். ''அதிகமாகப் போனால் ஆறுமாத காலம்தானே?'' என்றான் விஜயாலயன்.

''அத்தனை நாட்கள் நான் தங்களைப் பிரிந்திருப்பது என்பது...''

''என்னுடைய முன்னோர்கள் வளமுடன் வாழ்ந்து கலைக்குத் தொண்டாற்றிய இடங்களைப் பார்த்து வந்தால், அதனால் என் சிற்பக் கலையறிவு விசாலமடையும். இன்னும் புதுப் புது விந்தைகளை நிகழ்த்திக் காட்டலாம் என்பது ஆசை...'' என்றான் விஜயாலயன்.

''அறிவை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு செல்லும் தங்களைத் தடுத்து நிறுத்த என் மனம் இடம் தரவில்லை. ஆனால் ஒரு வேண்டுகோள். என்னை அதிக நாட்கள் பிரிவு என்னும் துயரத்தில் ஆழ்த்தாமல் சீக்கிரம் திரும்பி வந்து விடுங்கள்'' என்றாள் பிரபாவதி பிரியாவிடை கொடுத்து.

காஞ்சி, தஞ்சாவூர், உறையூர் முதலிய இடங்களைப் பார்த்துக்கொண்டு அவன் பாண்டி நாட்டின் தலைநகரான மதுரையை அடைந்த போதுதான் அந்தச் செய்தி அவன் காதில் விழுந்தது.

வஞ்சனையால் தில்லிச் சிம்மாசனத்தை அபகரித்துக் கொண்ட அலாவுதீன் கில்ஜியின் படைத் தலைவர்களான மாலிக் காபூரும், குவாஜா ஹாஜியும் தட்சிணத்தின்மீது படையெடுத்து வந்துள்ளனர். தேவகிரி பணிந்து விட்டது. இப்பொழுது முஸ்லிம் சேனை ஹொய்சால ராஜ்யத்தில் நுழைந்துள்ளது. ஊர்களெல்லாம் கொளுத்தப்பட்டன. கோயில்கள் இடிக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப் பட்டன. பெண்களின் மானம் பறி போயின. பச்சைக் குழந்தைகள்கூட இரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். பீதியடைந்த மக்கள் தினம் தினம் வடக்கிருந்து தெற்கு நோக்கி ஓடி வந்து கொண்டிருக்கின்றனர்.

முஸ்லிம் சேனை துவார சமுத்திரத்தை நோக்கி விரைகிறது!

இதைக் கேள்விப்பட்ட விஜயாலயன் மதுரைமாநகரிலிருந்து உடனே துவார சமுத்திரத்துக்குப் புறப்பட்டு விட்டான்.

* * *

இன்னும் சிறிது தூரத்தில்தான் இருந்தது துவாரசமுத்திரம். ஒற்றையடிப்பாதையில் இருந்து அவன் அந்த ராஜபாட்டைக்கு வந்து விட்டான். ஆனால் ஆள் நடமாட்டமே இல்லை. ''விஜயா! நில்!''—என்று உரக்கக் கேட்டது ஒரு குரல்.

திரும்பிப் பார்த்தான் விஜயாலயன். ரஸ்தாவின் ஓரத்தில் பிரதீபன் நின்று கொண்டிருந்தான். பிரதீபன் விஜயாலயனின் நண்பன்.


''எங்கு வேகமாகப் போகிறாய்!'' — பிரதீபன் பரபரப்புடன் கேட்டான்.

''துவார சமுத்திரத்துக்கு!'' — பளிச் சென்று சொன்னான் விஜயாலயன்.

''அங்கு என்ன இருக்கிறது? வீடுகள் எல்லாம் எரிந்துவிட்டன. கட்டடங்கள் இடிந்து விட்டன. அங்கு ஒருவரும் இல்லை. நாங்கள் இந்தக் காடுகளுக்கு ஓடிவந்து விட்டோம். நீயும் வா, புதிதாக நான் கட்டிக் கொண்ட குடிசைக்குப் போகலாம். ஊருக்குள் போனால், முகம்மதியர்கள் உன்னை யம லோகத்துக்கு அனுப்பி விடுவார்கள்...''

''என் அத்தையைப் பார்க்க வேண்டும். என் பிரபாவதியைப் பார்க்க வேண்டும்...'' என்றான் விஜயாலயன் ஆவலோடு.

''உன் அத்தை இறந்து விட்டாள். உன் பிரபாவதி இனிமேல் உன்னுடையவள் அல்ல. நாளை அவளுக்கும் இந்த நகரைத் தாக்கும் முஸ்லிம் சேனைக்குத் தலைமை தாங்கும் அப்துல்காதருக்கும் திருமணம்...''



''என்ன? பிரபாவதி விரோதியை மணக்கப் போகிறாளா? என்ன தைரியம் உனக்கு, என்னிடம் இந்தப் பொய்யைச் சொல்ல?'' துடித்தன விஜயாலயனின் உதடுகள்.

''நான் சொல்வது முற்றிலும் உண்மை. மற்றொரு விஷயம். அப்துல்கான் அவளைத் துன்புறுத்தவும் இல்லை. கட்டாயப்படுத்தவும் இல்லை. இவளாக வலியச் சென்று அவனை மணக்க ஒப்புக் கொண்டிருக்கிறாள். நாளைப் பகலில் திருமணம். நாளைமாலை இருவரும் புறப்பட்டு ராமதுர்க்கத்தில் உள்ள வஸந்த மாளிகைக்குச் செல்லுகிறார்கள்...''

விஜயாலயனின் மூச்சு அப்படியே நின்று விடும்போல் இருந்தது.

''இப்போது பிரபாவதி எங்கே?''

''முகம்மதியரின் பாசறையில்தான் அவள் இருக்கிறாள்...''

''துரோகி!'' — விஜயாலயனின் உதடுகள் முணுமுணுத்தன.

* * *

அன்றிரவு நடு நிசி. விஜயாலயனின் மனம் தவித்துக் கொண்டிருந்தது. உண்மையில் பிரபாவதி துரோகியாக மாறி விட்டாளா, அல்லது அவள் அழகில் மயங்கி முகம்மதியர்கள் அவளைப் பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்களா? இரண்டில் எது உண்மை என்று அறிந்து கொள்வதற்குத் துடித்தான் அவன்.

அவன் மனத்தில் ஒரு யோசனை உருவாயிற்று. பிரபாவதிக்கு ஒரு கடிதம் எழுதினான். அதை எடுத்துக்கொண்டு தலைநகருக்குச் சென்றான். முகம்மதியப் பாராக்காரன் ஒருவனைச் சந்தித்தான். தன் கழுத்தில் அணிந்திருந்த முத்து ஹாரத்தை அவனிடம் லஞ்சமாகக் கழற்றிக் கொடுத்து, அந்தக் கடிதத்தையும் கொடுத்தான்.

பொழுது விடியும் சமயம். அந்த முகம்மதிய வீரன் பிரபாவதியின் பதிலைக் கொண்டு வந்து விஜயாலயனிடம் கொடுத்து விட்டான். அதைப் படித்த விஜயாலயனுக்கு வயிறு பற்றிக் கொண்டு எரிந்தது.

''நல்ல அந்தஸ்தில் உள்ள ஒருவன் தன்னை மணக்க ஆசைப்படும்போது எந்தப் பெண்ணும் முட்டாள்தனமாக வருகிற அதிர்ஷ்டத்தைக் காலால் உதைத்துத் தள்ள மாட்டாள். இந்தத் தளபதி என்னை ஆசையுடன் நேசிக்கிறார். நான் முழு மனத்துடன் தான் இவரை மணக்கச் சம்மதம் தெரிவித்துள்ளேன்.''

பேயறைந்தவன் போல் ஆகிவிட்டான் விஜயாலயன். கால் போன போக்கில் சென்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். ஒரு நாள் பொழுது எப்படியோ ஓடி விட்டது. அப்போது மேல் மூச்சு வாங்கப் பிரதீபன் அங்கு ஓடி வந்தான்.

''விஜயாலயா! செய்தி தெரியுமா உனக்கு? ராமதுர்க்கத்தின் அடிவாரத்தில் அப்துல்கான் மண்டையில் பலத்த காயத்துடன் விழுந்து கிடந்தானாம். அவனை வீரர்கள் பாசறைக்குத் தூக்கிச் சென்றனராம். நேற்றிரவு பிரபாவதி அவனை மலையுச்சியிலிருந்து கீழே தள்ளி விட்டு எங்கோ ஓடி விட்டாளாம். தலைவனை இழந்த முகம்மதியத் துருப்புக்கள் நம் தலைநகரைக் காலி செய்து கொண்டிருக்கின்றன. இந்த நகரத்தை அப்துல்கானின் பொறுப்பில் ஒப்படைத்து விட்டு, தெற்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் மாலிக் காபூர், குவாஜா ஹாஜி இரு தளகர்த்தர்களுக்கும் செய்தி போயிருக்கிறதாம். வஸந்த மாளிகையிலிருந்து மறைந்து விட்ட பிரபாவதியையும் பல முகம்மதிய வீரர்கள் தேடி வருவதற்குப் போயிருக்கிறார்களாம்.''

'என்ன நிஜமாகவா!' என்று திகைப்புடன் கேட்டான் விஜயாலயன்.


இந்தச் செய்தி விஜயாலயனுக்குப் பெருத்த ஆச்சரியத்தை அளித்தது.

அதைத் தொடர்ந்து அவனுக்கு மற்றோர் ஆச்சரியம் காத்திருந்தது. மலையில் வாழும் ஒரு இளைஞன் ஒருவன் வேகமாக ஓடிவந்தான். 'அவன் யார்? எதற்காக ஓடி வருகிறான்?'

''என்ன விஷயம்? ஏன் இவ்வளவு பரபரக்க ஓடி வருகிறாய்? ஏதாவது விபரீதம் நடந்து விட்டதா?'' என்று மிகுந்த வியப்புடன் கேட்டான் விஜயாலயன்.

அந்த இளைஞனுக்கு ஓடி வந்ததினால் மூச்சு இரைத்தது. பேச முடியவில்லை.

'' என்ன நடந்தது சொல்லு!'' என்று துரிதப்படுத்தினான். பிரபாவதி சம்பந்தமாக இவனும் ஏதாவது விபரீதச் செய்தி கொண்டு வந்திருப்பானோ என்று எண்ணினான்.



"விஜயாலயரே! உங்களிடம் ஒரு பெண் மணி இந்தக் கடிதத்தைச் சேர்க்கும்படி வேண்டிக் கொண்டாள். அவள் விருப்பத்தை நிறைவேற்றவே ஓடி வந்தேன்...!"

"ஆமாம்! என்னை எப்படி உங்களுக்குத் தெரியும்? அந்தக் கடிதம் யார் கொடுத்தார்கள்?" என்று சந்தேகத்துடன் கேட்டான் விஜயாலயன். ஒருவேளை அந்த இளைஞன் எதிரிப் படையின் ஒற்றனோ என்ற சந்தேகம் அவனுக்கு எழுந்தது.

"ஐயா! உங்கள் தசாவதாரச் சிற்பங்களைக் கண்டு மயங்கியவர்களில் நானும் ஒருவன். உங்களைச் சிற்பம் வடிக்கும்பொழுது சில முறை பார்த்திருக்கிறேன். இந்தாருங்கள்



இந்தக் கடிதத்தைப் படித்தால் எல்லா விவரங்களும் புரியும்!" என்று கடிதத்தைக் கொடுத்தான் அந்த இளைஞன்.

"தங்களுக்கு மனக்கலக்கம் உண்டாக்கியதற்கு என்னை மன்னிக்கவும். இடியென ஏற்பட்ட முகம்மதியப் படையெடுப்பும் அவர்கள் புரிந்த அட்டூழியங்களும் என் மனத்தைப் பெரிதும் கலக்கின. அவர்கள் நமது கோயில்களை அழித்தது என்னை மிகவும் வாட்டியது. நம் ஊர்ப் பெரிய கோயில் தாக்கப்பட்டால் தாங்கள் என் ஆசையை நிறைவேற்ற, சிரமப்பட்டுச் செதுக்கிய தசாவதாரச் சிற்பங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டு விடுமே என்ற கவலை என்னைப் பற்றிக் கொண்டது. உடனே என் மனம் வேதனையில் தவித்தது. என் உள்ளத்தில் 'காதல் பெரிதா? கலை பெரிதா?' என்று கேள்வி எழுந்தது. இந்த மனித உடல் அழிந்து விட்டாலும் கலை என்றும் நிலைத்து நிற்கும் சிரஞ்சீவித்துவம் வாய்ந்தது. கலைக்காக நம் காதலைத் துறக்க முடிவு செய்தேன்.

அந்த முடிவுக்கு வருவதற்கு நான் என்ன பாடுபட்டேன் தெரியுமா? உங்கள் மீதுள்ள பிரியமும், காதலும் என்னைச் சித்திரவதை செய்தன. 'ஆனால் நீங்கள் காதலைவிடக் கலையின் மேன்மையையே பெரிதும் விரும்புவீர்கள்' என்ற எண்ணம் எழுந்து அதை அமுக்கிவிட்டது. அப்துல்கான் ஒரு காமப் பித்தன் என்று கேள்விப்பட்டேன். அகஸ்மாத்தாக எங்கோ செல்வது போல், ஓரிரு சமயம் அவன் கண்களில் நான் படும்படி இங்குமங்கும் அலைந்தேன். என் எண்ணம் ஈடேறியது. என்னை அவன் கூப்பிட்டு அனுப்பினான். தன்னுடன் வந்து விடும்படி அவன் என்னை அழைத்தான். 'எல்லோரும் அறிய மணப்பதானால் மனைவி ஸ்தானத்தை நான் ஏற்கத் தயார்' என்றேன். ஆனால் அப்படிச் சொல்லும் பொழுது என்மனம் எப்படிப் புழுவாய்த் துடித்தது, தெரியுமா? உங்களுக்காகப் பிறந்த நான், அந்த அயோக்கியன் கலையை அழிக்காமலிருப்பதற்காக இசைந்து விட்டேன். மணம் முடிந்தது. என் யோசனைப்படி இந்த ஊரை முகம்மதியர் அழிப்பது நின்றதும், நாங்களும் ராமதுர்க்கம் சென்றோம். அங்கு அவன் என்னை நெருங்க வரும்போது, 'வாருங்கள் உல்லாசமாக மலைச்சரிவில் உலவிவிட்டு வரலாம்' என்று கூறி நான் தந்திரமாக அவனை மலைச்சரிவுக்கு அழைத்துச் சென்று என் திட்டத்தின் இரண்டாவது பகுதியை நிறைவேற்றிக் கொண்டு விட்டேன். அவன் கீழே உருண்டு விழுந்து விட்டான். அவன் நிச்சயம் மாண்டு விடுவான். தலைவனை இழந்த சேனை இனி நகரைக் காலி செய்து விடும். திரும்ப அவர்கள் புதுத் தலைவனுடன் திரும்புவதற்குள் நம் மன்னருக்குச் சிதறியுள்ள தமது படையைத் திரட்ட அவகாசம் கிடைக்கும். தங்கள் சிற்பமும் ஒரு விக்கினமும் இல்லாமல் தப்பி விடும். ஆனால் இவ்வளவு தூரம் தங்கள் தலைவனை ஏமாற்றிய என்னை முஸ்லிம் வீரர்கள் சும்மா விடமாட்டார்கள். நானோ என் உடலோ அவர்கள் கையில் சிக்கக் கூடாது. இந்தக் கடிதம் தங்களுக்குக் கிடைப்பதற்குள் நான் பத்ரா நதியில் தஞ்சம் புகுந்திருப்பேன்.

—பிரபாவதி'

லிகிதத்தைப் படித்து முடித்த விஜயாலயனின் நயனங்கள் கண்ணீரைச் சொரிந்தன. தன் கலையை அழியாமல் பாதுகாக்கத் தன் உயிரைத் தந்து பெரிய தியாகத்தைச் செய்த பிரபாவதியின் உருவம் அவன் கண் முன்னால் வந்து நின்றது. அவன் கையில் இருந்த லிகிதம் கீழே விழுந்தது.

அவன் வெறி பிடித்தவன் போல் பத்ரா நதியை நோக்கி ஓடினான்.

பிரபாவதியின் தியாகத்தால் தப்பிய அந்தத் தசாவதாரச் சிற்பங்கள் கால வெள்ளத்தின் கொடுமைக்கும் தப்பி இன்றும் கம்பீரமாய்க் காட்சியளிக்கின்றன.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

